147140

# திருச்சுழியல் வெண்பா அந்தாதி

1912

O-,12MKR,T
N12
147140

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருச்சுழியல் வெண்பா அந்தாதி.

இது

பண்டிதர் P. R. கிருஷ்ணமாசாரியர் அவர்கள்

இயற்றிய உரையுடன்,

திருச்சுழியல் கோயில் திருப்பணி

மகா - ா - ா - ஸ்ரீ

தி. அ. ராம. ராமசாமிசெட்டியார் அவர்கள்

வேண்டுகோளின்படி

அவர்களின் திரவிய சகாயத்தால்

சென்னை:

கலாரத்நாகர அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

1912.

[Copy-right.]

To

M. R. RY.

**Rao Bahadur M. Arumugam Pillay Avergal,**

*(Treasury Deputy Collector, Ramnad Collectorate.)*

Whose immense sympathy for

Tamil Literature and Tamil Pandits,

Is inspiring many a toiler in Tamil Culture,

**THIS BOOK**

IS RESPECTFULLY DEDICATED

BY

**THE COMMENTATOR.**

# முகவுரை.

இந் நூலாசிரியரைப்பற்றிய விருத்தாந்தங்களை யெல்லாம் பூரணமாக இப்போது தெரிந்து சொல்ல இயலவில்லை. எனினும், இந்நூலுட் கூறப்பட்டிருக்கும் விஷயத்தையும், ஆற்றொழுக்காகச் செல்லும் செய்யுள் நடை முதலியவற்றையும், சொல்லணி பொருளணி முதலிய நயங்களையும் உற்றுநோக்குங்கால், இவர் மிகுந்த சைவப்பற்று உடையவ ரென்பதும், தேவாரம் திருவாசகம் முதலிய திருமுறைகளை முறைப்படி யோதியுணர்ந்துள்ளவ ரென்பதும் சங்கச் செய்யுட்களில் நல்ல பரிசயமுடைய சிறந்த மகாகவி யென்பதுந் தெரிகின்றன. திருவாய்மொழி, திருவிருத்தம், சடகோபரந்தாதி, அழகர் கலம்பகம் முதலியவற்றினின்று சில அருமையான கருத்துக்களையும், சொற்றொடர்களையும் இந்நூலிற் பல இடங்களில் உபயோகித்திருப்பதால், இந்நூலாசிரியர் சைவநூல்களைப்போலவே வைணவ நூல்களையும் நன்கு கற்றுணர்ந்தவரென்பதும், வைணவ துவேஷ முள்ளவரல்ல ரென்பதும் செவ்வனே வெளியாகின்றன. இன்ன இயற்பெயரினர், இன்ன வருணத்தினர், இன்ன காலத்தினர் என்ற மற்றை விவரங்க ளேதும் இப்போது புலப்படவில்லை.

இங்ஙனம்,

திருச்சுழியல்,
20—2—12.

பி. ஆர். கிருஷ்ணமாசாரியார்.

# சிறப்புப் பாயிரம்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் அக்கிராஸனாதிபதியும்
முதல்கிரேடு வக்கீலுமாகிய
ம-ா-ா-ஸ்ரீ
பி. எஸ். சுப்பிரமணிய ஐயரவர்கள்
இயற்றியது.

சொன்னவரு முன்னியறி யாப்பொருளை யாய்ந்தளிக்குஞ்
　　சுவைசேர் வாய்மை
மின்னவுரை பன்னுவதே நுண்ணறிவின் பான்மையென
　　விளம்பு மாற்றால்
கன்னனிகர் சொன்னிறைவாற் றிருச்சுழியல் வெண்பாவாங்
　　கவிநூற் றிற்கு
நன்னயமா யுயருரையைக் கிருட்டிணமா சாரியன்பாய்
　　நவின்றிட் டானே.

மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் சைவநூற் பரிசோதகரும்
திருவாவடுதுறை ஆதீன வித்வானுமாகிய
மகா-ா-ா-ஸ்ரீ
சே. ரா. சுப்பிரமணியக் கவிராயர் அவர்கள்
இயற்றியது.

திருச்சுழியல் வெண்பாவந் தாதியினிற் கவிகளெலாந்
　　தேனும் பாலும்
பொருத்தமுறக் கலந்தாற்போ லிருந்தனவக் கவிகளுக்குப்
　　பொருத்த மாகும்
அருத்தமதைக் கண்டுகண்டை யவற்றுடன்சேர்த் தாற்போல
　　வணியாச் செய்தான்
பெருத்தபுகழ்க் கவிவலவன் கிருட்டிணமா சாரியெனும்
　　பெரியோன் றானே.

800 009.
147140

## சிறப்புப் பாயிரம்.

மதுரைத் தமிழ்ச்சங்கச் சேதுபதி செந்தமிழ்க்கலாசாலைப்
போதகா சிரியராயிருந்த
ம-ா-ா-ஸ்ரீ வித்வான்
நா. சுந்தரேசுவர ஐயரவர்கள்
இயற்றியது.

சனிக்கவிதை யாங்கன்மங் கருக்குதிருச் சுழியலுறை
சம்பு சீர்த்தித்
தொனிக்கவிதை வெண்பாவந் தாதிக்கோ ரரியவுரை
சொற்றான் கற்றோர்
இனிக்கவிதைப் போல்யாவ ரினிக்கவிதைக் குரையிடுவா
ரெனமால் பாதந்
தனிக்கவிதை யத்துள்வைத்து மகிழ்கிருஷ்ண மாசார்யத்
தமிழ்வல் லோனே.

---

மதுரைத்தமிழ்ச்சங்கத்துச்
சேதுபதி செந்தமிழ்க் கலாசாலைத் தலைமை யுபாத்தியாயர்
ம-ா-ா-ஸ்ரீ
பண்டிதர். அ. கோபாலைய ரவர்கள்
இயற்றியன.

திருத்தமிழின் மணங்கமழுந் தென்பாண்டி நாட்டினுக்கோர்
திலகம் போலப்
பொருத்தமுற விளங்குதிருச் சுழியலமர் புனிதனையெப்
பொழுதுஞ் சிந்தை
யிருத்தியொரு பெரும்புலவ னிறையவற்கோ ரந்தாதி
யெழில்வெண் பாவால்
வருத்தமற விளம்பியதிற் றமிழ்வேதக் கருத்தையெலாம்
வைத்தான் மன்னோ.

அருட்டிறனு லோங்கியொளிர் நுண்ணறிவா லந்நூலி
னழகை யோர்ந்து
பொருட்டிறனெ லாம்புகன்றோர் விரியுரையை யறிவுடையோர்
புகழச் செய்தான்
தெருட்சிறிறை வாய்மையினு லிருசெவிக்கு மமுதூட்டுஞ்
சிறப்பு வாய்ந்த
கிருட்டிணமா சாரியெனும் பெயருளவே தியனெவர்க்குங்
கேண்மை யோனே.

---

உ

சிவமயம். 0-112 MKR2,5
N12

# திருச்சுழியல் வெண்பா அந்தாதி.

## காப்பு.

நிறமுற்ற மாச்சுழியல் நின்மலற்கோர் மாலை
திறமுற்ற வெண்பாவாற் செய்ய— அறமுற்ற
ஆலமர்ந்தான் போலிங் கரசமர்ந்த அத்தியுமென்
தாலமர்ந்தான் செஞ்சொற் றரும்.

(இ - ள்.) நிறம் உற்ற - ஒளிபொருந்தியதும், மா - பெருமையை யுடையதுமாகிய, சுழியல் - திருச்சுழியல் என்னுந் திவ்ய க்ஷேத்திரத்தின்கண் எழுந்தருளி யிருக்கின்ற, நின்மலற்கு - அநாதி மலமுத்தனாகிய சிவபெருமானுக்கு, ஓர் மாலை - சூடுதற்கு யோக்யமானதொரு மாலையை, திறம் உற்ற - மேன்மை பொருந்திய, வெண்பாவாற் செய்ய - வெண்பாக்களினாலே செய்ய, அறம் முற்ற - சனகாதி நால்வர்களுக்குத் தருமங்களை யெல்லாம் முடிவுற உபதேசிப்பதற்காக, ஆல் அமர்ந்தான்போல் - அன்று கல்லாலின்கீழ் அமர்ந்தருளிய தந்தையாரைப்போல, இங்கு - இப்போது, அரசு அமர்ந்த - திருவரசின் கீழமர்ந்த, அத்தியும் - யானைமுகக் கடவுளாகிய விநாயக மூர்த்தியும், என் - அடியேனுடைய, தால் அமர்ந்தான் - நாவின்கண் எழுந்தருளியிருந்து, செஞ்சொல் - அழகிய சொற்களை, தரும் - தந்தருளுவான்; (எ-று.)

சோதிவனத்தோடு சேர்ந்த சுழியலாகலின், 'நிறமுற்ற மாச்சுழியல்' என்றார். சோதிவனம் என்றது காளையார்கோயிலை. இனி, நிறமுற்ற மாச்சுழியல் என்பதற்குத் - திருமாலினது திருமார்பிலே, இனிதுறைகின்றவளான ஸ்ரீதேவி நித்யவாஸம் பண்ணுகின்ற திருச்சுழியல் என்று பொருளுரைப்பினும் அமையும். நிறம் - மார்பு. நாயகனாகிய திருமாலினது திருமார்புபோல இத் திருச்சுழிய லென்னுந் தலமும் அத்திருமாமகளுக்கு இறையும் அகலாது இனிதுறைதற்கு ஏற்ற தலமாம் என்பதை அறிவிக்கவேண்டி, 'நிறமுற்ற மாச் சுழியல்' என்றார் என்க. மாமகளுக்கு நிறமுற்ற சுழியல் என்க. செய்யவளாகையால், 'நிறமுற்ற மா' என விசேடித்தா ரென்றலுமொன்று. நிறமுற்ற நின்மலன் என இயைத்துரைப்பினும் ஏற்கும். மாலையை நிற முற்றச் செய்ய என்று கோடலுமாம்; நிறம் முற்ற - மார்பு நிரம்ப. அந்த

ணர் வகுப்பைச் சேர்ந்துள்ளதாகலால் வெண்பாவைத், 'திறமுற்ற வெண்பா' எனக் கூறினாரென்க. இனி, சுழியல் நின்மலனது (ஸாம வேதியனார்) திறத்திற்கு ஏற்ற வெண்பா என்றுரைத்தலும் பொருந்தும். "எல்லாப் - புலவர்க்கும் வெண்பாப் புலி" என்றபடி செய்ய அரியதெனக்கொண்டு, கவிசாதுர்யத்தைப் பொருந்திய வெண்பா என்பார் இங்ஙனம், 'திறமுற்ற வெண்பா' எனக் கூறினா ரென்றலும் அமையும். அறமுற்ற என்பதனை அரசோடுங் கூட்டி - தர்மமானது தங்கியுறைகின்ற அரசு எனப் புராண கதையோடு பொருந்துமாறு உரைத்தலுமாம். இவ் வரலாற்றை, "உறைவ தற்கிட மிது வென வறமெலா மொருங்கே, முறையி னவன்மா மகிழர செனப்பரன் முன்னே, யறையு நாற்றருச் சதுர்யுகந் தொறுந்தொறு மதுவாய்த், துறைகொள் கௌவையங் கடலரு கமர்திருச் சுழியல்" எனவும், "எம்பி ரான்றிருக் கோயின்முன் றருமங்க ளெய்தி, யும்பர் சம்புகு தம்மகிழ் போதியென் றுரைக்க, நம்பு தாவர விநாயக னெனும்பெயர் நண்ணத், தும்பி மாமுகன் யுகந்தொறு மமர்திருச் சுழியல்" எனவும் வந்துள்ள தலபுராணச் செய்யுட்களாலறிக. அரசமர்ந்த அத்தி யென்றது வியப்பு. அத்தி யென்பது ஆலும் அரசும்போலப் பூவாது காய்க்கும் மரம். அத்தி - ஹஸ்தி; கையையுடையதென யானைக்குக் காரணப்பெயர். பூவாது காய்க்கும் மரத்தின் கீழமர்ந்து தருமங்களை யெல்லாம் சொல்லாமற் சொல்லி யுணரவைத்த நின்மலனான சிவபெருமானுக்கு வாடுதல், மணமொழிதல், நிறமாறுதல் முதலிய தோஷங்களையுடைய பூமாலையினும் இத்தோஷங்களில்லாத பாமாலையே யேற்பதெனக்கொண்டு அதற்கிணங்க ஏவாது நின்றுணரும் இந்நூலாசிரியர் அரசமர்ந்தஅத்தியைச் செஞ்சொற் றருமாறு வேண்டுகின்றாரென்க. தாலமர்ந்தான் - முற்றெச்சம்.

## நூல்.

பொன்னார் சுழியற் புனிதா! சரணென்று
மின்னார் சடையுடைய மெய்ப்பொருளைச்—சொன்னார்
புலையரே யானாலும் புண்டரிகக் கண்ணன்
தலையரே யாவரவர் தாம்.

(இ - ள்.) பொன் - ஸ்ரீதேவி, ஆர் - உறைவிடமாகப் பொருந்தியுள்ள, சுழியல் - திருச்சுழியலென்னுந் தலத்தின்கண் எழுந்தருளி யிருக்கின்ற, புனிதா - பரிசுத்தனே!, சரண் என்று - (நீயே) அடியேங்களுக்குத் தஞ்சமென்று, மின் ஆர் - மின்னற் கொடியினையொத்த, சடை உடைய - சடையினையுடைய, மெய்ப் பொருளை - நித்தியமான பரவஸ்துவை, சொன்னார் - (தோத்திரித்துச்) சொன்னவர்கள், புலையரே யானாலும் - சண்டாளர்களேயாயிருந்தாலும், அவர்தாம் - அவர்கள், புண்டரிகக் கண்ணன் - புண்டரீகாக்ஷனான திருமாலினது, தலையரே ஆவர் - தலையிடத்தவரே யாவர்; (எ-று.) —தலையால் வணங்கக் கூடியவராவ ரென்றபடி.



பொன்னார் புனிதா எனக் கூட்டி, "பொன்னார் மேனியனே" என்பதற்கியைய உரைத்தலுமாம். பிராமணர் முதற் சண்டாளர் ஈறாக யாவர் கையாளினும் அபரிசுத்த நிலையை யடையாத ஒளிவீசும் சுவர்ண பாத்திரம்போல எப்போதும் பரிசுத்தனாகவே யிருப்பவனே யென்பார், 'பொன்னார் புனிதா' என்றார் எனக்கொள்ளல் சாலப் பொருத்தமுடையது. மின்னார் சடை - மின்னற் கொடிபோன்ற கங்காதேவியார் உறைகின்ற சடையென்றலுமாம். புனிதனே யென்றார் முதலில்; மின்னார் சடையுடையான் என அதற்கு இங்கே ஹேதுவைக் காட்டுகின்றார். புண்டரிகக் கண்ணன் என்பது புண்டரீகம் போன்ற கண்களையுடையான் எனத் திருமாலையும், புண்டரீகத்தின்கண் வீற்றிருப்போன் எனப் பிரமதேவனையுங் குறித்து நிற்றல் காண்க. பொன்னார் புனிதன் என்பதும், மின்னார் சடையுடைய மெய்ப்பொரு ளென்பதும் அபரிசுத்த முடையோராய் ஆவுரித்துத் தின்றுழலும் கொடிய பாவத்தையுடையோராயுள்ள புலையரையும் புனிதராய்ப் புண்ணியராய்ச்செய்து அவரைத் திருமால் முதலியோரது சிரத்தின்மீது வீற்றிருக்கும்படி செய்யவல்லான் என்னும் அபிப்பிராயத்தைக் காட்டி நிற்கும் விசேஷணங்களோடு கூடியவை யாகையால், இது கருத்துடை அடைகோள் அணியின்பாற்படும். வடநூலார் இதனைப், பரிகராலங்காரம் என்பர். இச்செய்யுளைச், "சங்கநிதி பதுமநிதி" என்னுந் தேவாரத்தோடு ஒப்பு நோக்குக. (க)

தாம்பினாற் கட்டுண்ட தாமோ தரன்வாழ்வும்
போம்பினால் நெஞ்சே! புகழ்ந்திறைஞ்சி—ஓம்பினால்
கற்கின்ற சீர்ச்சுழியற் காளையார் தந்தருள்வர்
நிற்கின்ற செல்வம் நினக்கு.

(இ - ள்.) தாம்பினால் - கயிற்றினால், கட்டுண்ட - (யசோதைப் பிராட்டியாராலே) உரலோடு சேரக் கட்டுப்பட்ட, தாமோதரன் வாழ்வும் - தாமோதரனான திருமாலினாலே கொடுக்கப்படும் வாழ்க்கையும், போம் பினால் - பின்னால் ஒழிந்துபோம்; நெஞ்சே - மனமே!, புகழ்ந்து இறைஞ்சி - துதித்து வணங்கி, ஓம்பினால் - போற்றினால், கற்கின்ற சீர் - (அறிவுடைய பெரியோர்களாற்) கற்கப்படுகின்ற மாஹாத்மியத்தையுடைய, சுழியல் - திருச்சுழியல் என்னுந் தலத்தின்கண் எழுந்தருளி யிருக்கின்ற, காளையார் - ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குக் காளையாராகிக் காட்சிதந்தருளிய திருமேனிநாதர், நினக்கு - உனக்கு, நிற்கின்ற செல்வம் - எந்நாளும் அழியாமல் நிலை நிற்பதாகிய செல்வத்தை, தந்தருள்வர் - கொடுத்தருள்வர்; (எ - று.)

தாம்பினாற் கட்டுண்ட தாமோதரன் என்பது, 'ஆழாழி' 'கரிகளபம்' என்பனபோல வந்தது. 'உலகளந்தான் தாயதெலாம்' என்றதுங் காண்க. திருமாலைத் தாம்பினாற் கட்டுண்டான் என்றதனாற் சிவபெருமான் பக்தி வலையினாலன்றி வேறொன்றினாற் கட்டுப்படான் என்பது குறிப்பாகக் கொள்

வக்கிடத்த லுய்த்துணரத் தக்கது. "பத்தி வலையிற் படுவோன் காண்க" என்றார் பெரியாரும். திருமேனிப் பெருமான் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குக் காளையாராகிக் காட்சிதந்தருளிய வரலாற்றை, "ஆளையா வாளையா வென்றுமுனி வோர்தவத்த ரமர ரெல்லாங், கேளையோ தித்துதிப்பக் கேளாதா ரெவ்வுழியுங் கிட்டார் தாமே, காளையா கட்டுமென்று நாட்கழிப்பார் தாமாரூர் நம்பி யார்க்குக், காளையா ரெனுமுருவிற் கனவிலெழுந் தருளினார் கண்ணிற் காண" என்ற தலபுராணச் செய்யுளாலு மறிக. பின்னால் என்பது பினால் எனத் தொக்கது. (௨)

நின்னை நினைக்க நினைந்தாய் நிரந்தரமும்
உன்னை யடியேன் உளம்வைத்தாய்—என்னில்
எனக்கினியான் ஆனாய் ; எழிற்சுழியல் நாதா!
உனக்கினியான் செய்வ துரை.

(இ - ள்.) நின்னை - (நாதனான) நின்னை, நிரந்தரமும் நினைக்க - அடியேன் இடைவிடாது எப்போதுந் தியானிக்கும்படி, நினைந்தாய் - நீ திருவுள்ளம் பற்றியருளினாய்; உன்னை - நினைவினுக்கு எட்டாத உன்னை, நிரந்தரமும் - எப்போதும், அடியேன் உளம் - அடியேனது உள்ளக் கமலத்திலே, வைத்தாய் - வீற்றிருக்கும்படி வைத்தருளினாய்; (இவைகளைக்கொண்டு ஆராயும்போது) என்னில் - என்னைக் காட்டிலும், எனக்கு இனியான் ஆனாய் - எனக்கு நல்லவன் ஆயினாய்; எழில் - அழகமைந்த, சுழியல் நாதா - திருச்சுழியலில் எழுந்தருளி யிருக்கின்ற நாதனே!, உனக்கு - (இவ்வாறு என்னை யறியாமலே எனக்கு நன்மை செய்தருளியவனாகிய) உனக்கு, இனி - இனிமேல், யான் - அடியேன், செய்வது - செய்யவேண்டுவதை, உரை - நியமித்தருள்வாய்; (எ - று.)

ஸர்வலோக நாதனாகிய நினக்கு அடியேன் செய்யக்கூடிய கைம்மாறு என்னோ? என்பார், 'உனக்கினியான் செய்வ துரை' யென்றார். "அவனருளாலே யவன்றாள் வணங்கி" யுய்ய வேண்டுமே யல்லது ஜீவகோடிகள் தம்மறிவின் செறிவினாலே அவனைக் கண்டு வணங்கி யுய்தல் கூடாமையால், இந்நூலுடையாரும், 'நின்னை நினைக்க நினைந்தாய் நிரந்தரமும்' என்றார். "நிரந்தரம் நினைப்பதாக நீ நினைக்க வேண்டுமே" என்றார் பிறரும். "மனத்துன்னை - வைத்தாய்" என்ற தமிழ்மறையின் கருத்தை யுட்கொண்டு, 'உன்னை யடியேன் உளம்வைத்தாய்' என்றார். எனக்கு நீ இனியான்; அதுபோலவே நானும் நினக்கு இனியேன். எனக்கினியானாகிய நீ என் விஷயத்திற் புரிந்த நன்மைகள்போல நினக்கினியானாகிய அடியேன் நின்விஷயத்திற் புரியக்கூடிய நன்மைகள் என்ன இருக்கின்றன? உரையாய், என ஈற்றடிக்குப் பொருளுரைப்பாரு முளர். இவ்வாறு பொருள் செய்யுங்கால், 'உனக்கினியான்' என்பதற்கு, உனக்கு இனியனான அடியேன் என்று பொருள் கொள்க. (௩)



உரையார் தெரிந்திரார்? ஒண்சுழியல் நாதா!
திரையார் சடைவனத்தைச் செந்தாள்—மரையை
அயன்கோலங் கொண்டானேல் ஆழிமால் அன்ன
வியன்கோலங் கொண்டானேல் வேறு.

(இ - ள்.) ஒண்சுழியல் நாதா - ஒள்ளிய திருச்சுழியலிலே யெழுந்தருளி யிருக்கின்ற நாதனே!, வேறு - (அடிமுடியைத் தேடப்புக்க காலத்தில் முன்பு தாங்கொண்ட கோலத்தின்) வேறாக, அயன் - பிரமதேவன், கோலங் கொண்டானேல் - வராக உருவத்தைக் கொண்டிருந்தானாயின், ஆழிமால் - சக்கராயுதத்தையுடைய திருமால், அன்ன வியன் கோலம் - அன்னப் பறவையினது பெரிய கோலத்தை, கொண்டானேல் - கொண்டிருந்தானாயின், திரையார் சடை வனத்தை - கங்காநதி பொருந்திய சடைக்காட்டினை, செம் தாள் மரையை - செவ்விய திருவடித்தாமரைகளை, யார் தெரிந்திரார் - பிரம விஷ்ணுக்களில் யார் தெரிந்திருக்கமாட்டார்கள், உரை - (அடியேனுக்குத் தெளியச்) சொல்லாய்; (எ - று.)

நதியோடு கூடிய அடர்ந்த வனத்தை வராகமும், நீண்டதாளோடுகூடிய செந்தாமரையை அன்னமும் எளிதின் அறியும். இஃது அறியாமல், அயனாகிய அன்னம் சடைவனத்தையும், மாலாகிய பன்றி தாட்டாமரையையும் முன்னந் தேடப்புக்கதனாலன்றோ காணமாட்டாமல் மயங்கின. பிரமதேவன் பன்றியாகி மேலே சென்றிருந்தால், திருமால் அன்னமாகிக் கீழேசென்றிருந்தால் நின்னுடைய சடைவனத்தையும், செந்தாள் தாமரையையும் முறையே கண்டிருக்க மாட்டார்களோ என்கிறார். "புராரி யடிமுடியைப் புக்கிருந்தான் மாறி, முராரி யொடுபிரமன் முன்கண்—டிராரோ" என்ற கொடுமுடியந்தாதிச் செய்யுளையும் நோக்குக. தாமரை - மரையென்றானது, முதற்குறை. ஆழிமால் - ஆழியில் உறங்குகின்ற மால் என்றுமாம். மின்னலோடுகூடிய மேகம்போன்ற திருமால் என்பார், 'ஆழிமால்' என்றார் என்றலுமொன்று. மால் - மேகம். ஆழியை மின்னுக்கு உவமைகூறுதலை, "ஆழிபோல் மின்னி" என்ற ஆண்டாள் அருளிச்செயலாலும் அறிக. (௪)

வேறு படுமுடலை வேண்டார் வெறுப்பிரேற்
சேறு படுகொன்றைச் செஞ்சடையான்—பேறு
தருஞ்சுழிய னாதன் சரணடைமி னில்லைப்
பெருஞ்சுழிய லாழிப் பிறப்பு.

(இ - ள்.) வேறுபடும் - பல்வேறு வகைப்படுகின்ற, உடலை - சரீரத்தை, வேண்டார் - வேண்டாதவர்களாய், வெறுப்பிரேல் - வெறுப்பீர்களேயாயின், சேறு படு - தேன் பொருந்திய, கொன்றை - கொன்றைமலர் மாலையை யணிந்துள்ள, செம் சடையான் - செவ்விய சடையினை யுடையவனும், பேறு - புருஷார்த்தங்களை, தரும் - தருகின்ற, சுழியல் - திருச்சுழியல் என்னுந் தலத்தின்கண் எழுந்தருளியிருக்கின்ற, நாதன் - நாதனுமாகிய திருமேனிப் பெரு

மானது, சரண் - திருவடிகளை, அடைமின் - சரணமாக அடையுங்கள்; (அங்ஙனம் சரணமடைவீர்களாயின்) பெரும் சுழியல் - பெரிய சுழிகளையுடைய, ஆழி - (இடைவிடாது மேலும் மேலும் தொடர்ந்து வருகின்ற அலைகளையுடைய) ஆழமாகிய கடலையொத்த, பிறப்பு - ஜன்மம், இல்லை - உமக்கு உண்டாதல் இல்லை; (எ - று.)

வேறு படு முடலை - (நித்தியமாய், ஞானாநந்த லக்ஷணமாய்ப் பரமாத்மாவாகிய சிவபெருமானுக்கே யடிமையாயிருக்கின்ற) ஜீவாத்மாவை அப் பரமாத்மாவுக்கு அடிமைசெய்யவொட்டாது வேறு தீயவழியிலே படுக்கின்ற முறுக்குண்ட சரீரத்தை யென்றலுமாம். முடலை - முறுக்கு; இங்கே முறுக்குடைய சரீரத்துக்கு ஆகுபெயர். "முடலை யாக்கை முழுவலி மாக்கள்" எனப் பெரும்பாணாற்றுப் படையிலும், நெடுநல் வாடையிலும் வந்திருத்தல் காண்க. சரீரமே ஆத்மா என்பாரது கொள்கையை மறுத்து, மக்கட்கு அறிவுறுப்பான் வேண்டி, ஆன்மாவின் வேறுபாடுடையதாகிய சரீரம் என்பார் 'வேறுபடும் உடலை' என்றாரெனக் கொள்ளலும் அமையும். "வினையின் வந்தது வினைக்குவிளை வாயது, புனைவன நீங்கிற் புலால்புறத் திடுவது, மூத்து விளிவுடையது தீப்பிணி யிருக்கை, பற்றின் பற்றிடங் குற்றக் கொள்கலம், புற்றடங் கரவிற் செற்றச் சேக்கை, யவலக் கவலை கையா றழுங்கல், தவலாவுள்ளந் தன்பா லுடையது" ஆகலால், 'படுமுடலை' என்றார். இனி, வேறு படும் உடலை வேண்டீர் வெறுப்பிரேல் என்பதற்கு இம் மக்கட் சரீரத்தினின்று வேறுபடுகின்ற தேவசரீரத்தை யபேக்ஷியாதவர்களாய், இம் மக்கட் சரீரத்தையும் வெறுப்பீர்களே யாயின் என்றுரைப்பதும் பொருந்தும். கிடையாததில் ஆசை யின்மையும், கிடைத்ததிற் பற்றின்மையுந்தோற்ற வேண்டீர், வெறுப்பிரேல் என்று கூறினாரென்க. "வானேயும் பெறில்வேண்டேன் மண்ணாள்வான் மதித்துமிலேன்" என்ற மணிவாசகத்தில் வேண்டேன், மதித்துமிலேன் என்று கட்டளையிட்டருளியதின் அர்த்தவிசேஷத்தை இங்கே விசாரித்துத் தெரிந்துகொள்க. 'சேறுபடு கொன்றை' என்ற இடத்தில், சேறு - தேன் என்னும் பொருளது. "சேறுபடுமலர்" என்றார் சிந்தாமணியாரும். "சேறும் நாற்றமும் பலவின் சுளையும்" என்ற மதுரைக்காஞ்சியையும், அதற்கு, "தேனும் நாற்றமு முடையவாகிய பலாப்பழத்தின் சுளையும்; சேறென்றார், சுளையிலிருக்கின்ற தேனை" என நச்சினார்க்கினியர் கூறிய உரையையுங் காண்க. அல் ஆழி எனப்பிரித்து இருள்நிறம் பொருந்திய கடல் என்றலுமாம். இனி, அல் ஆழ் இப்பிறப்பு எனப்பிரித்து வினையிருளிலே யாழ்ந்து கெடுகின்ற இப்பிறப்பு என்றலும் பொருந்தும். "இருள் சேர் இருவினை" என்றார் நாயனாரும். (ரு)

பிறனில்லைக் காதலிக்கும் பேதையேன் செய்த  
தறனில்லைச் செய்யாத தந்தோ!—மறனில்லை  
என்னையுங் கொண்டான் திருமேனி யெம்பெருமான்  
அன்னையுந் தானா யணைத்து.



(இ - ள்.) பிறன் இல்லை - அயலான் மனைவியை, காதலிக்கும் - இச்சிக்கும், பேதையேன் - அறிவிலியேனாகிய நான், செய்தது - செய்ததாகிய, அறம் - சிவதருமம், இல்லை - (ஒன்றேனும்) இல்லை; செய்யாதது - செய்யாததாகிய, மறன் - பாவச்செயல்கள், அந்தோ - ஐயோ!, இல்லை - (ஒன்றேனும்) இல்லை; என்னையும் - (இவ்வாறு நல்லன விலக்கியும் அல்லன கொண்டும் பாவியாயொழிந்த) அடியேனையும், திருமேனி எம்பெருமான் - திருமேனி நாதனாகிய எமதுபெருமான், அன்னையும் தானாய் - தானே அன்னையாகவு மிருந்து, அணைத்து - அரவணைத்து, கொண்டான் - அங்கீகரித்தருளினான்; (எ - று.)

தம்முடைய கழிந்தகால இழிந்த நிலைமையையும் தற்கால உயர்ந்த பதவியையும் தெரியக்கூறி எதிர்ப்பட்ட உலகத்தவரைத் திருமேனி யெம்பெருமானிடஞ் செல்லுமாறு ஆற்றுப்படுக்கின்றார். இதன் இலக்கணத்தைப் புறத்திணை யியலுள், "தாவினல்லிசை" என்னுஞ் சூத்திரத்துள், "ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப், பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச், சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்" என்பதனான் அறிக. பிறன் மனை நயப்பார் புகும்போதும், போதரும்போதும், துய்க்கும்போதும் அச்சத்தையே யல்லது, தாம் கருதிய காமஇன்பத்தை யனுபவித்தலில்லையாகையால், 'பேதை' யென்றார். மேற்கூறப்புகும் அறச்செயலின்மைக்கும், பாவச்செய லுண்மைக்கும் கொண்டமனையாளைக் கைவிடுதலும், பிறன்மனையாளை யபகரித்தலுமாகிய இத் தீச்செயலொன்றே சான்றுபகருமென்பார், 'பிறனில்லைக் காதலிக்கும் பேதையேன்' என்றார். இப்பால், இவர்க்குப் பாவச் செயலை நினைக்கும்போது உடல் நடுங்குவதால், 'அந்தோ!' என்கிறார். 'இருளூறு மனத்தனேற்கும் இன்னருள் சுரந்த வீரன்' என்றாற்போல, 'என்னையும்' எனக் கூறினார். கொண்டான் - தடுத்தாட் கொண்டான். "இடப்பாக நீள்கோட் டிமவான் பயந்த, மடப்பாவை தன்வடிவே யானால் - விடப்பாற், கருவடிசேர் கண்டத்தெங் காளத்தி யாள்வார்க், கொருவடிவே யன்றா லுரு" என்றபடி யர்த்த நாரீச்சுரராகையால், 'அன்னையுந் தானாய்' என்றார். "அழுந்தொறு மணைக்கு மன்னை யறிவிலா தோடி யோடி, விழுந்தொறு மெடுக்கு மெந்தை" என்றபடி தாய்தந்தையர் இருவர் செயலுந் தோற்ற, 'அணைத்து - கொண்டான்' என்று கூறியதென்க. திருமேனிநாதன் என்பது திருச்சுழியலில் எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானது திருநாமம். "உற்றானமக் குயரும்மதிச் சடையான்புலனைந்துஞ், செற்றார்திருமேனிப்பெரு மானூர்திருச் சுழியல்" என்ற தேவாரமுங் காண்க. (சு)

துணைமாலை பாகனுக்கென் சோர்வெல்லாஞ் சொல்லீர்  
இணைமாலைப் பேடைதழீஇச் செல்வீர்—கணைமாலை  
போழ்வதோ பாரீர் பொலஞ்சிறைய அன்னங்காள்!  
தாழ்வதோ பெண்பேதை தான்.

(இ - ள்.) பொலம் சிறைய அன்னங்காள் - அழகிய சிறகினையுடைய அன்னங்களே!, (நீங்கள்) துணைமாலை பாகனுக்கு - சகாயவல்லியாரை யிடது

பாகத்திலே கொண்டருளிய ஸ்ரீதனுநாதருக்கு, என் - என்னுடைய, சோர்வெல்லாம் - தளர்ச்சியையெல்லாம், சொல்லீர் - சொல்கின்றீர்களில்லை; (நீங்கள்மாத்திரம்) திணை - உயர்குடிப் பிறப்பால்வந்த, மாலை - இயல்பினையுடைய, பேடை - பெண்ணன்னங்களை, தழீஇ - புணர்ந்து, செல்வீர் - செல்கின்றீர்கள்; கணை - மன்மதபாணங்கள், மாலை - மாலைக்காலத்திலே, போழ்வதோ - (என்சரீரத்தைப்) பலவழியாகப் பிளப்பதையோ, பாரீர் - பார்க்கின்றீர்களில்லை; பெண் தூதுதான் - பெண்களுக்காகத் தூதுசெல்வதுதான், தாழ்வதோ - நுங்களுக்குத் தாழ்வைத்தருவதோ?—சொல்லீர்; (எ - று.)

இது, நாயகனான ஈசுவர விஷயத்திலே தூதாக அபேக்ஷிக்கச் செய்தேயும் அது செய்யாதன சில அன்னங்களைக்குறித்து வெறுத்துச் சொல்லுகிற நாயகி பாசுரம். இத்துறை, திருக்கோவையாரில், 'அன்னமோடழிதல்' எனப்படும். 'உலகமெல்லாந் துயிலாநின்ற இந் நிலைமைக் கண்ணும் யான் துயிலாமைக்குக் காரணமாகிய என் வருத்தத்தைச்சென்று அவர்க்குச் சொல்லாது தான் தன் சேவலைப் பொருந்திக் கவற்சியின்றித் துயிலாநின்றது என அன்னத்தோடு அழிந்து கூறாநிற்றல்' என்ற உரையும், "சேவல் தழீஇச் சென்று தான்றுஞ்சும் யான்றுயி லாச்செயிரெம், காவல் தழீஇயவர்க் கோதா தளிய களியன்னமே" என்ற திருக்கோவையாரும், "இன்னகையவ ளிரவரு துயரம், அன்னத்தோ டழிந்துரைத்தது" என்ற கொளுவும் இங்குக் காணத்தக்கன. சுழியல் நாதன் முதலிய வேறுவகையிற்கூறாது, 'துணைமாலை பாகன்' என்றது, ஒரு பாகத்தில் தேவியிருக்கின்றாளாதலின் இச் செய்தியையவள் அறியாமற் சொல்லவேண்டுமென்பதைக் குறிப்பால் அறிவித்தற்காகவென்க. எம்மாலாகாதென்று ஆற்றலின்மைகூறி மறுத்தற்கிடமில்லையென்பாள், 'பொலஞ்சிறைய அன்னங்காள்' என்றும், போகாமல் இங்கேயே தங்குகின்றீர்களில்லை; நுங்காரியார்த்தமாக இனத்தோடு உல்லாசமாகப் போகின்றீர்கள்: அங்ஙனஞ் செல்லும்போது என்காரியத்தையுஞ் செய்யலாமேயென்பாள், 'பேடைதழீஇச் செல்வீர்' என்றும், "அன்புடைமை யான்ற குடிப்பிறத்தல் வேந்தவாம் - பண்புடைமை தூதுரைப்பான் பண்பு" என்றதனால், தூதர்க்கு உயர்குடிப்பிறப்பும் இலக்கணமாதல்பற்றித், 'திணைமாலைப் பேடைதழீஇ' யென்றும், நான் உங்களைப் பொய்சொல்லச் சொல்கின்றேனில்லை; மன்மதபாணத்தால் என் சரீரம்பட்ட பாட்டைப் பாரீர் என்பாள், 'போழ்வதோ பாரீர்' என்றும், அநுமான்தூது கண்ணன்தூது முதலிய வரலாறுகளில் ஆடவர்பொருட்டாகவே தூதுசெல்லுதல் மரபென்றும், அதனால் பெண்பிறந்தார்க்குத் தூதுசெல்லுதல் குறைவென்றுங் கருதினீர்களோ என்பாள், 'தாழ்வதோ பெண்தூது' என்றுங் கூறினாளென்க. இச்செய்யுளை, "இன்னன்ன தூதெம்மை யாளற்றப் பட்டிரந் தாளிவளென், றன்னன்ன சொல்லாப் பெடையொடும் போய்வரு நீலமுண்ட, மின்னன்ன மேனிப் பெருமா னுலகிற்பெண் டூதுசெல்லா, வன்னன்ன நீர்மைகொ லோகுடிச் சீர்மையி லன்னங்களே" என்ற திருவிருத்தச் செய்யுளோடு ஒப்புநோக்குக. சொல்



லீர் என்பதற்குச் சொல்லுங்கள் எனப்பொருளுரைத்து, அன்னங்களைத் தூது வேண்டுகின்றாளென்றலுமமையும். (எ)

தார மருங்கா மனப்புள்ளே! தைக்குமால்
வார மருங்கா மனப்புள்ளே—சீரமரும்
என்னைவிட மென்றார்க் கிசைப்பீர் தனுநாதா!
என்னைவிட மென்றாரென் றேற்று.

(இ - ள்.) தாரம் மருங்கு ஆம் - பெடையன்னத்தின் அருகிலே பொருந்திய, அனம் புள்ளே - அன்னப்பறவையே!, வாரம் அரும் - (சிறிதேனும்) அன்பு இல்லாத, காமன் அம்பு - மன்மதனது பாணம், உள்ளே - மனத்திலே, தைக்கும் - தைத்து வருத்தாநின்றது; ஏற்று - (ஆகையால், நான் சொல்லும் வார்த்தைகளைச் செவியிலே) வாங்கிக்கொண்டுபோய், சீர் அமரும் என்னை - சிறப்போடு பொருந்திய என்னை, விடம் என்றார்க்கு - (முன்னம்) கைவிடுவதில்லை யென்று சொல்லிப்போன சுழியல் நாதருக்கு, தனுநாதா - திருமேனி நாதரே!, என்னை - அன்னமாகிய என்னை, விடம் என்றார் என்று - (நுமது பிரிவாற்றாது வருந்துகின்ற தலைவியார்) விஷமென்று சொல்லி வெறுத்து விட்டார் என்று, இசைப்பீர் - தெரிவிப்பீராக; (எ - று.)

இது, தலைவனைப் பிரிந்த தலைவி தன் காதல்நோயைத் தலைமகனுக்குச் சொல்லும் பொருட்டுத் தூதுபோய் வருமாறு அன்னத்தை விடுத்தது. 'தாரமருங்கா மனப்புள்ளே' என விளித்தது, நீ உன் துணையை விட்டுச் சற்றும் பிரியாது கூடி வாழ்வதுபோல, யானும் என் துணைவரோடு கூடி வாழவேண்டாவோ? என்ற குறிப்பு. அனப்புள் என்பதில், அனம் - ஹம்ஸம் என்னும் வடமொழியின் திரிபு. அம்பு - அப்பு என மென்றொடர் வன்றொடராயிற்று. வார் அமரும் அப்பு எனக்கொண்டு - நீட்சிபொருந்திய அம்பு என்றுரைத்தலுமாம். இப்போ திருப்பதுபோல முன்னம் நான் சீர்கெட்டழியவில்லையென்பாள், 'சீரமரும் என்னை' என்றாள். என் நைவு இடம் என்றார்க்கு எனப் பிரித்து - என் மனக்கனிவுக்கு விஷயமான ஸ்தானம் என்று சொல்லிப்போனவர்க்கு என்றலுமாம். 'அன்னத்தை (=சோற்றை) விஷமாகக் கருதி வெறுத்திட்டாள்' என்று சொல் என்பாள், தூதுபோவது அன்னமாதலால், 'என்னை விடமென்றார்' என்று சொல் என்று சொல்லியனுப்பினாளென்க. மூன்றாமடியிலுள்ள, 'என்னை விடமென்றார்க்கு' என்பதற்கு எனது தலைவரும் விஷத்தை மென்றுதின்றவருமாகிய சுழியல் நாதருக்கு எனப் பொருளுரைத்தலுமாம். என் ஐ - எனது தலைவர். என்னை - இவ்வாறு பராமுகமாயிருப்பது என்னோ?, மென் தார் - மென்மைபொருந்திய கொன்றை மலர்மாலையை, விட - அனுப்புக, என்று ஏற்று - என்றிரந்துகொண்டு, இசைப்பீர் - சொல்லுவீர் என்றுரைத்தலும் பொருந்தும். இசைப்பீர் எனப் பன்மையிற் கூறியது உபசாரம். என்னை விட மென்றார்க்கு என்பதற்கு - என்னினும் மெல்லிதாய் இருப்பதொரு

மாலையின் பொருட்டு என்றலுமாம். "இயம்புகின்ற காலத் தெகினமயில் கிள்ளை, பயம்பெறமே கம்புவை பாங்கி—நயந்தகுயில், பேதைநெஞ்சந் தென்றல் பிரமரமீ ரைந்துமே, தூதுரைத்து வாங்குந் தொடை" எனத் தூதுவிடப் படுமவற்றுள் அன்னம் முதலாதல் அறிக. இது, மடக்கு என்னுஞ் சொல்லலங்காரம் பெற்றது. (அ)

ஏற்றுக் கொளினு மினிதே பிறவியுந்தான்
கூற்றுக் கடிந்தோனைக் குங்குமத்தின்—சேற்றுச்
சுணங்குவார் கொங்கைத் துணைமாலை கோனை
வணங்குவா ராயின் மகிழ்ந்து.

(இ - ள்.) கூற்று - நமனை, கடிந்தோனை - (முன்னம் மார்க்கண்டேயர் பொருட்டாக) உதைத்துக் கொன்றவனும், குங்குமத்தின் சேறு - பரிமளம் பொருந்திய குங்குமக் குழம்பிலே யளைந்த, சுணங்கு வார் கொங்கை - தேமல் பூத்த கச்சையணிந்த கொங்கைகளையுடைய, துணைமாலைகோனை - ஸகாயவல்லியாரது நாயகனுமாகிய திருமேனிநாதனை, வணங்குவாராயின் - (மனமொழி மெய்களால்) வணங்குவார்களேயாயின், (அவர்களுக்கு) ஏற்றுக்கொளினும் - ஏற்றுக்கொண்டாலும், பிறவியுந்தான் - (துன்பமே பயப்பதாகிய) பிறப்புந் தானும், இனிதே - இன்பமே தருவதாகும்; (எ - று.)

சேறளைந்த கொங்கை, சுணங்கு பூத்த கொங்கை, வாரணிந்த கொங்கை யென்க. துணைமாலை நாயகனை மகிழ்ந்து வணங்குவாராயின் அவர்களது பிறவி மார்க்கண்டேயரது பிறவியைப்போன்று சாக்காடு முதலிய துன்பங்களைத் தாராது இன்பமே பயக்குமென்பதாம். வணங்கலருமைதோன்ற, 'வணங்குவாராயின்' என்றார். "இறவி லெப்பத மும்பெற வேண்டிலே னென்றும், பிறவி வேண்டுவன் நின்றிருப் பணிசெயப் பெறினே" என்றார் பிறரும். இச்செய்யுளை, "இனிதே பிறவி யினமரங்க ளேறிக், கனிதேர் கடுவன்க டம்மின்—முனிவாய்ப், பிணங்கிவரும் தண்சாரற் காளத்தி பேணி, வணங்கவல்ல ராயின் மகிழ்ந்து" என்ற பதினோராந்திருமுறைச் செய்யுளோடு ஒப்புக் காண்க. மகிழ்ந்து ஏற்றுக்கொளினும் என்றியைத் துரைப்பினும் அமையும். (கூ)

மகிழும் பிறையோடு வாளரவும் சூடித்
திகழுந் திருமேனிச் செல்வா!—இகழும்
வினையா ரெனையும் விழுமியர்பால் வைத்தால்
உனையார் வினவுவா ரோது.

(இ - ள்.) மகிழும் - மகிழ்ச்சியைத் தருகின்ற, பிறையோடு - பிறைச்சந்திரனோடு, வாள் அரவும் - கொடிய சர்ப்பத்தையும், சூடி - (திருமுடியிலே) தரித்து, திகழும் - விளங்காநின்ற, திருமேனிச் செல்வா - திருமேனிநாதனே!, இகழும் வினை ஆர் - யாருங்கண்டு நிந்திக்கத்தக்க தீவினைகளையுடைய, எனை



யும் - (சிறியேனாகிய) என்னையும், விழுமியர்பால் - (நல்வினைகளையுடைய) பெரியோர்களாகிய அடியார் குழாத்தினடுவே, வைத்தால் - (ஸமமாக) வைத்திட்டால், உனை - நாதனான உன்னை, வினவுவார் யார் - (இங்ஙனம் இவனை யேன் வைத்தாய் என்று) கேட்பவர் யாவர்?, ஓது - சொல்லாய்; (எ - று.)

மகிழ்ச்சியைத் தரும் பிறையையும் துன்பத்தைத் தரும் ஸர்ப்பத்தையும் ஸமமாகத் திருமுடியிலே தரித்தருளிய திருமேனிநாதரே! தேவரீர், சிலாகிக்கத்தகுந்த நல்வினைகளையுடைய பெரியோர்களாகிய உமது அடியார்களின் திருக்குழுவின் நடுவிலே இகழத்தகுந்த தீவினைகளையுடைய சிறியேனாகிய என்னையும் ஸமமாக வீற்றிருக்கும்படி அருள்செய்வீராயின், 'ஏன் இவனை இங்ஙனம் வைத்தீர்?' என்று உம்மை வினவுவார் யாவர் என்பதாம். 'மகிழும் பிறையோடு வாளரவுஞ் சூடி' என்பதற்கு, ஒன்றை யொன்று பகைத்திடுதலின்றி யுறவுகொண்டு மகிழ்கின்ற பிறையையும் வாளரவையும் சூடி என்று உரைத்தலு மமையும். இதனால், இகழத்தக்க தீவினையையுடைய என்னைப் புகழத்தக்க நல்வினையையுடைய பெரியோர்களின் குழுநடுவே தேவரீர் வைத்தால், நான் உமது நல்லருண்மகிமையினாலே அப்பெரியோர்களால் வெறுத்துத் தள்ளத்தக்கவனாகாமல் புகழ்ந்துகொண்டாடத்தக்கவனாவேன் என்பது போதருமாறு காண்க. இனி, மகிழும் என்ற எச்சக் கிளவியை அரவுக்குங் கூட்டி, நமது மகிழ்ச்சிக்கு விஷயங்களாகிய பிறையையும் அரவையுஞ் சூடி யென்றுரைத்தலு மொன்று. இதனால், உலகத்தவரது கண்ணுக்கு நான் தீவினையுடையவனாகத் தோற்றினும், உலகிற்கெல்லாம் தனிப்பெருந்தாயுந் தந்தையுமாகிய தேவரீருக்குச் சிறியேன் விழுமியோராகிய அடியார்களைப்போலவே யருள்செய்யத்தக்கவன்காண் என்பது பெறப்படுதல் நோக்குக. தாங்கி என்றால் திருமுடியிற் பிறையையும், திருமார்பிலே ஸர்ப்பத்தையும் பூண்டு எனக் கொள்ளப்பட்டு, ஸ்தானபேதத்தினாலே ஒருவாறு ஏற்றத்தாழ்வு குறிக்கப்படுமோ என்னுஞ் சங்கையினாலும், ஸமமாக அங்கீகரித்து என்ற தங் கொள்கையைக் காட்டவேண்டுமென்னு மபிப்பிராயத்தினாலும், 'சூடி' என்றார். பிறையோடு அரவையும் பூண்டதனால் தேவரீர் திருமேனி பொலிவு குறையாததோடு அதிகமாகத் திகழ்தலுஞ் செய்தது என்பார், 'திகழுந் திருமேனிச் செல்வா!' என்றார். இதனால், அடியார்களோடு என்னையும் ஸமமாக வைப்பதனாலே நுமது திருவருள் மாசுபடாததோடு ஏற்றத்தையு மடையும் என்பது பெறப்படுதலுணர்க. பிரபுக்கள் தங்கள் இச்சைபோனவழி யெதையுஞ் செய்யலாம்; அதை யாரே தடுப்பவர்? என்பார், 'செல்வா!' என்றார். இனி, செல்வம் என்பதற்கு அழகெனுஞ் செல்வம் என்றுரைத்து, சைவலக் கொத்தோடு கூடிய தாமரை பின்னும் மனோக்யமாக விளங்குதல்போல, இயற்கைப்பேரழகோடுகூடிய நுமக்கு அரவைச்சூடியதும் பின்னும் அதிகமாயதோர் திகழ்ச்சியைக் காண் தந்தது என இறும்பூதுகொள்வார், 'செல்வா!' என்றார் என்றலு மொன்று. திருவருட்செல்வமானது என்போன்றவடியார்களுக்கு வழங்கப் பட்டாலன்றோ அழகுடைத்தாவது என்பது இதன் குறிப்பு. இது, கருத்துடையடைகோள் அணி. (க0)

ஓதும் வினைகா ளுமக்கோ ரிடங்தேடிப்
போதும் பொழுதுபெறப் போமின்கள்—தாது
நிறைகின்ற கூந்தற் றுணைமாலை நேயன்
உறைகின்ற துள்ளத் துணர்ந்து.

(இ - ள்.) ஓதும் - (பிறப்புத் துன்பத்தில் வீழ்த்த வல்லன என்று) சொல்லப்படுகின்ற, வினைகாள் - கருமங்களே!, போதும் - (இத்துணைக் காலம் நீங்கள் இங்கே தங்கியிருந்தது) போதுமானது, (இனியும் என் உடம்பிலே பொருந்தவந்து வருத்தாமல்) தாது - பூந்தாதுகள், நிறைகின்ற - நிறைந்து விளங்குகின்ற, கூந்தல் - கூந்தலையுடைய, துணை மாலை - ஸகாய வல்லியாரது, நேயன் - காந்தனாகிய திருமேனி நாதர், உள்ளத்து - எனது உள்ளக் கமலத்திலே, உறைகின்றது - வீற்றிருக்குஞ் செய்தியை, உணர்ந்து - தெரிந்துகொண்டு, உமக்கு ஓர் இடம் தேடி - உமக்குப் புகலாவதொரு இடத்தைத் தேடிக்கொண்டு, பொழுதுபெற - சீக்கிரமாக, போமின்கள் - அப்புறஞ் செல்லுங்கள்; (எ - று.)

ஓதும் வினைகாள் என்பதற்குப் - புண்ணியபாபங்க ளென்று சொல்லப் படுகின்ற கருமங்களே! என்றலுமாம். வினைகாள் - ஈற்றயல் திரிந்த விளி. பொழுதுபெற வென்பது காலம்பெற, காலத்தால் என்பனபோல வந்தது. உள்ளத்துணர்ந்து போமின்கள் என்றியைத் துரைத்தலுமாம். இச் செய்யுளை, "இடரீ ருமக்கோ ரிடநாடிக் கொண்டு, நடவீரோ காலத்தா லுங்கள் - கடல்வாய்க், கருப்பட்டோங் கொன்முகில்சேர் காளத்தி காண, வொருப் பட்டோங் கண்டீ ருவந்து" என்ற நக்கீரதேவர் அருளிச்செய்த அந்தாதிச் செய்யுளோடும், "பெற்றங்கள் மேய்க்கும் பிரானார் பேணுந் திருக்கோயில் கண்டீர், அற்ற முரைக்கின்றே னின்னம் ஆழ்வினைகா ளுமக்கிங்கோர், பற்றில்லை கண்டீர் நடமின்," "திருமாலை யல்லது தெய்வமென் றேத்தேன், வருமாறென் னம்மேல் வினை," "கூற்றமுஞ் சாரா கொடுவினையுஞ் சாராதீ, மாற்றமுஞ் சாரா வகையறிந்தேன்—ஆற்றங், கரைக்கிடக்குங் கண்ணன் கடல்கிடக்கும் மாயன், உரைக்கிடக்கு முள்ளத் தெனக்கு" என்ற ஆழ்வார்களது பாசுரங்களோடும், "விழுப்பா ரினியெம்மை யார்பிற வித்துயர் மெய்புறவந், தழுப்பா தொழிமி னருவினை காளும்மை யப்புறத்தே, யிழுப்பா னொருவன்வந் தின்றுநின் றானிள நாகுசங்கங், கொழுப்பாய் மருதஞ் சுலாங்குரு கூரெங் குலக்கொழுந்தே" என்ற கல்வியிற் பெரியாரது கலித்துறைச் செய்யுளோடும் ஒப்பு நோக்குக. (௧௧)

உணர்ந்து நெடுநா ளுணராதுஞ் செய்து
புணர்ந்து வருவினைகள் போமே—கொணர்ந்து
கொழியலிறை முத்தக் குளிர்நதிதோய்ந் தெம்மான்
சுழியலிறை பாதந் தொழின்.



(இ - ள்.) கொணர்ந்து - வரன்றிக் கொணர்ந்து, கொழியல் - கொழியலாக, இறை - வாரி யிறைக்கின்ற, முத்தம் - முத்துக்களோடுகூடிய, குளிர் நதி - குளிர்ந்த பாவகரி நதியிலே, தோய்ந்து - ஸ்நானஞ் செய்து, எம்மான் - எமது பெருமானாகிய, சுழியல் இறை - சுழியல் நாதனது, பாதம் - திருவடிகளை, தொழின் - வணங்குவார்களாயின், நெடு நாள் - நெடுநாளாக, உணர்ந்தும் - அறிந்தும், உணராதும் - அறியாமலும், செய்து - செய்யப்பட்டு, புணர்ந்துவரும் - விடாது பற்றிவருகின்ற, வினைகள் - தீய பழவினைகள், போம் - நீங்கிப்போம்; (எ - று.)

அறிந்து செய்யப்படும் பாவமே யதிகமாகலால், 'நெடுநாள்' என்பதை 'உணர்ந்து' என்றதனை யடுத்து வைத்துக் கூறினார். நெடுநாள் உணர்ந்தும், சிலநாள் உணராமலும் செய்து எனச் சிலசொல் வருவித்துரைத்தலு மமையும். விடாது பிறவிதோறும் தாமரைத்தண்டின் நூல்போலத் தொடர்ந்து வருகின்றமை பற்றிப், 'புணர்ந்து வருவினைகள்' எனக் கூறினார். "பல்லாவுளுய்த்து விடினுங் குழக்கன்று, வல்லதாந் தாய்நாடிக் கோடலைத் - தொல்லைப், பழவினையு மன்ன தகைத்தேதற் செய்த, கிழவனை நாடிக் கொளற்கு" என்ற நாலடியாரையுங் காண்க. போமே என்பதில், ஏ - தேற்றம். வினை வெப்பத்தை யகற்றுத லுடைமையின், 'குளிர்நதி' என்றார். நதியைச், 'கொணர்ந்து கொழியலிறை முத்தக் குளிர்நதி' என்று கூறியதனால், அந்நதி தான் சுழியல் எம்மானை முத்துக்களை வாரிக் கொணர்ந்து அருச்சித்து வணங்குதல்போலக் காணப் படுகின்றது என்பதும், அதுபோலவே மற்றையோரும் அப்பெருமானது பாதத்தை யருச்சித்துத் தொழவேண்டு மென்பதுந் தொனிக்கின்றது காண்க. இச்செய்யுள், "அறியாம லேனு மறிந்தேனுஞ் செய்து, செறிகின்ற தீவினைக ளெல்லாம்—நெறிநின்று, ஙன்முகில்சேர் காளத்தி நாத னடிபணிந்து, பொன்முகரி யாடுதலும் போம்" என்ற செய்யுளின் தாத்பர்யத்தைக் கொண்டிருத்தல் பாராட்டத் தக்கது. (௧௨)

தொழுவனோ நின்னைத் துணைமாலை நேயா!
விழுவனோ நின்றிருமுன் வீழ்ந்தழு—தழுவனோ
பாடிக் கனிந்துருகி யாடிப் பதாம்புயத்தைச்
சூடிக் களிப்பனோ சொல்.

(இ - ள்.) துணைமாலை நேயா - துணைமாலை நாதனே!, (பாவியாகிய யான்) நின்னை - உன்னை, தொழுவனோ - வணங்குவனோ?, நின் திருமுன் - உனது சந்நிதியின் முன்னே, விழுவனோ - தண்டாகாரமாக விழுந்திடுவனோ?, அங்கு வீழ்ந்து - அங்ஙனம் அங்கே கும்பிட்டு வீழ்ந்தெழுந்து, அழுவனோ - எனது குறைகளை யெல்லாஞ் சொல்லி அழுதிடுவேனோ?, கனிந்துருகி - மனங் கனிந்துருகி, பாடி - உனது புகழ்களை யெல்லாம் எடுத்துப் பாடி, ஆடி - நர்த்தனஞ்செய்து, பதாம்புயத்தை - உனது திருவடித் தாமரைகளை, சூடி - தலையிலே யணிந்து, களிப்பனோ - ஸந்தோஷிப்பனோ?, சொல் - சொல்லியருளாய்; (எ - று.)

தொழுதன் முதலிய அன்புடையாரது மெய்ப்பாடு. "ஆடினு னழுதான் பாடி யரற்றினன் சிரத்திற் செங்கை, சூடினன் றொழுதா னேடி யுலகெலாந் துகைத்தான் றுள்ளி" என்றார் பிறரும். ஆடி - ஆனந்த வெள்ளத்திலே மூழ்கி யென்றலுமாம்; ஆடுதல் - மூழ்குதல். (கங)

சொல்லாய் மறையோ சுழியலோ அம்பலமோ
நல்லாய் துணைமாலை நாயகனே!—வில்லாய்
மலைதழுவும் வல்லவா! வல்வினையேன் நெஞ்சோ
நிலைதழுவுந் தானம் நினக்கு.

(இ - ள்.) நல்லாய் - (எல்லா ஆன்மாக்களுக்கும்) நல்லவனு யிருப்பவனே!, துணைமாலை நாயகனே - ஸகாய வல்லியின் தலைவனே!, மலை - மேருபர்வதத்தை, வில்லாய்த் தழுவும் - வில்லாகப் பொருந்தும், வல்லவா - வல்லமையை யுடையோனே!, நினக்கு - உனக்கு, நிலைதழுவும் தானம் - ஸ்திரமாக எழுந்தருளியிருக்கின்ற ஸ்தானம், சொல் - (உனது பொருள்சேரும்) புகழையே, ஆய் - ஆராய்ந்துகொண் டிருக்கின்ற, மறையோ - வேதங்களோ?, சுழியலோ - திருச்சுழியல் க்ஷேத்திரமோ?, அம்பலமோ - கனக ஸபையோ?, வல்வினையேன் - கொடிய தீவினையையுடையேனது, வல் நெஞ்சோ - கடினமான மனமோ?,—சொல்லாய்; (எ - று.)

சொல் - புகழ். ஆய்தல் - ஆராய்தல். இனி, சொல்லாய் என்பதனை முன்னிலையாக்கி, சொல்லி யருளாய் என்றுரைத்தலுமாம். நல்லாய் என்பதனை விளியாகக் கொள்ளாது, துணைமாலைக்கு விசேடணமாகக்கொண்டு, நல்ல தாயாகிய துணைமாலையென்று பொருளுரைத்தலு மேற்கும். ஆய் - தாய். 'வில்லாய் மலைதழுவும் வல்லவா' என்பது, நீ முன்னம் கல்லை வில்லாக வளைத்து நினது வல்லமையைக் காட்டினாற்போல இப்போது என் வன்னெஞ்சக்கல்லை மென்மலராகச்செய்து அதில் வீற்றிருந்தருளி நினது பேராற்றலுடைமையைக் காட்டாநின்றாய் என்பதனைக் காட்டி நிற்றல் காண்க. சுந்துடை யடைதோளணி. இச்செய்யுளை, "இருக்குத் திருக்கோயி லேழையே னெஞ்சோ, மருக்கொள் கயிலை வரையோ—திருக்களவோ, சோதிமணி மன்றோ சுடர்விசும்போ பால்வண்ணா, வோது மறையோ வுனக்கு" என்ற திருக்கருவை வெண்பாவோடு ஒப்பு நோக்குக. (கச)

தான நினக்கேன் றவநினக்கேன் பல்கலைநூல்
ஞான நலநினக்கேன் நன்னெஞ்சே!—ஈனம்
அடர்த்தாளும் பூமீச னஞ்செழுத்துஞ் செய்ய
சுடர்த்தாளு முண்டே துணை.

(இ - ள்.) நல் நெஞ்சே - (எனது) நல்ல நெஞ்சமே!, ஈனம் - எல்லாக் குறைகளையும், அடர்த்து - தொலைத்து, ஆளும் - ரக்ஷித்தருள்கின்ற, பூமீசன் - பூமிநாதனுடைய, அஞ்சு எழுத்தும் - ஸ்ரீ பஞ்சாக்ஷரமும், செய்ய - சிவந்த, சுடர்த்தாளும் - ஒளிபொருந்திய திருவடிகளும், துணை உண்டே - (உனக்குத்) துணையாக இருக்கின்றனவே; நினக்கு - (இவைகளைத் துணையாகக் கொண்டுள்ள) உனக்கு, தானம் ஏன் - தானம் எதற்கு?, நினக்குத் தவம் ஏன் - உனக்குத் தவம் எதற்கு?, நினக்கு - உனக்கு, பல்கலைநூல் - பலதிறப்பட்ட சாஸ்திர கிரந்தங்களினுடைய, ஞான நலம் - அறிவினா லுண்டாகும் நன்மை, ஏன் - எதற்கு? (எ-று.)

ஸ்ரீ பஞ்சாக்ஷர மகாமந்திரத்தையும் பூமீசனுடைய திருவடிகளையுமே நமக்கு ரக்ஷகமென்று நம்பியிருப்பவர்களுக்குத் தானம் தவம் சாஸ்திர ஞானம் முதலிய ஜீவனோஜ்ஜீவன ஹேதுவான ஸாதனங்கள் வேறு எவையும் வேண்டா வென்றதாம். உபாயங்களைத்தேடி யவ்வளவிலேயே நின்றுவிடும் ஏனையோரைப்போலில்லாமல் உபேயமான திருவடிகளையே முதலெடுப்பிற் பற்றினடியால், 'நன்னெஞ்சே!' என விளித்தார் என்க. பூமீசன் என்பது திருச்சுழிநாதனது திருநாமங்களுளொன்று; இது, தன்னால் அனுக்கிரகிக்கப்பட்ட பூமிதேவியினது பிரார்த்தனைக் கிரங்கிச் சாத்திக்கொண்டது. இதனை, "அகில மகளே நமதிருப்பி னீவந் தெய்து மளவினிலே, பகர வரிய வினையகன்று பரந்த கதிர்முன் பனியான, திகழ வுயர்மா பூசைநமைச் செய்ய மகிழ்ந்தே மெமைப்புகழ்ந்த, புகழால் விருப்புற் றுனக்கெதிரே வந்தோ மென்றான் புவனேசன்", "கண்டா ளிருகண் களிகூரக் கைலைப் பெருமா னருளியதுட், கொண்டாள் மகிழ்ந்தாள் பணிந்தெழுந்தாள், 'கொவ்வைத் துவர்வாயிடத்தானே, தொண்டா மெளியேன் றனக்கிரங்கி யெந்தாய் வந்தாய் துகளறுத்தாய், விண்டா தரவாற் கேட்குமிந்த வரந்தா' வென்றாள் விளம்புவாள்," "உன்பேர் பூமிநாதனென வூழி பலவு நிலைநிற்க, வென்பேராக நானியற்றுந் தீர்த்தம் படிவா ரெல்லோர்க்கு, மன்பா லுன்னைத் துதித்தபுகழ் கற்போர் கேட்போர் யாவருக்குந், தென்பா லிறைக்குள் ளாக்காமற் கொடுக்க வேண்டுஞ் சிவபதமே", "என்றா ளுடனே கேட்டவர மீந்தோ மென்றா னெம்மானும்" என்ற தலபுராணச் செய்யுட்களாலுமறிக. மலவிருளைத் துமித்தல் பற்றிச், 'சுடர்த்தாள்' எனப்பட்டது. "தயாமூலதன்மம்"...

"துயரறுசுடரடி" என்றார் பெரியாரும். இனி, சூரியனது செய்ய இளங்கதிரினை யொத்த விரல்களையுடைய திருவடி யென்றலுமாம். விரல்களுக்குச் சூரியனது இளங்கதிர்களுவமிக்கப்படுதலை, "துளங்கொளி விரற்கெதி ருதிக்குஞ் சூரிய, னிளங்கதி ரொக்கினு மொக்கும்" என்ற கம்பராமாயணச் செய்யுளாலுமறிக. (கரு)

உண்டு துணையெனச்சூழ்ந் துற்றா ருயிர்போதல்
கண்டு விலகுங்காற் கால்கொடுப்பாய்—விண்டு
தொழுங்கால காலா! சுழியலினாய்! பண்டு
விழுங்கால காலா விரைந்து.

(இ - ள்.) உண்டு துணையென - (நமக்குத்) துணைவர்கள் பலர் உண்டு என்று நினைக்கும்படி, சூழ்ந்து - (செல்வாக்குள்ள காலத்திலே நெருங்கிச்)

சூழவிருந்து, உயிர்போதல் கண்டு - (பின்னர்) உயிர்போதலையறிந்து, உற்றார் - உறவினர்கள், விலகுங்கால் - (சூழவிருந்து துணைசெய்ய மாட்டாமல், இனி இவனால் பயனில்லையென்று) கைவிட்டு விலகும் (செல்வாக்கொழிந்த அந்தச்) சங்கடமான காலத்திலே, விண்டு தொழும் - மகாவிஷ்ணுவால் றொழப்படுகின்ற மேன்மையையுடைய, காலகாலனே - காலனுக்குக் காலனாயிருப்பவனே !, சுழியலினாய் - திருச்சுழியலின்கண் எழுந்தருளியிருப்போய்!, பண்டு - முன்னம் [திருப்பாற்கடல் கடைந்தகாலத்தில்], விழுங்கு - விழுங்கியருளிய, ஆலகாலா - ஆலகாலமென்னும் விஷத்தை ஸ்ரீ கண்டத்திலே யுடையாய் !, விரைந்து - நீ விரைவாக எழுந்தருளி, கால்கொடுப்பாய் - நினது திருவடிகளை யடியேனுக்குக் கொடுத்தருள்வாய் ; (எ - று.)

உண்டு - சோற்றைத்தின்று, துணையெனச்சூழ்ந்து - துணையிருக்கிறோமென்று சொல்லிச்சூழ்ந்து என்றுரைத்தலும் பொருந்தும். சூழ்ந்துற்றார் - சூழ்ந்துற்றவர்கள் என ஒரு சொல்லாகவுமாம். சூழ்ந்த உற்றார் எனக்கொண்டு, அகரந் தொக்கது என்றலுமொன்று. துணையென - என்றதனால் உள்ளபடி துணையில்லை யென்பதும், உண்டு - என்றதனால் அங்ஙனந் துணைபோற் காணப்படுவதும் சோற்றைத் தின்பதற்காகவே யென்பதுங் கூறியவாறும். "துணையுஞ் சார்வு மாகு வார்போற் சுற்றத் தவர்பிறரும், அணைய வந்த வாக்க முண்டே லட்டைகள் போற்சுவைப்பர்" என்றார் பெரியாரும். "காலாடு போழ்திற் கழிகிளைஞர் வானத்து, மேலாடு மீனிற் பலராவர்" என்ற நாலடியையுங் காண்க. காலன்கைப்படாமல் என்னைக்காப்பாய் என்பார், 'காலகாலா' என்றும், பிறவிப்பெருங்கடலில் வீழாமல் ரக்ஷிப்பாய் என்பார், 'சுழியலினாய்' என்றும், வினையரவின் வெவ்விடத்தால் வீயாமல் போற்றுவாய் என்பார், 'விழுங்காலகாலா' என்றும் கூறினாரெனப் பொருணுட்பமுணர்க. சுழியல் என்னும் பெயர்க்காரணத்தை, "பெருகியே வருமு காந்தப் பிரளயப் புனல்பா தாளத், தொருகணப் பொழுதி னுட்போ யொழிந்திடச் சுழித்த லாலே, கருணையெம் பெருமான் கௌவைக் கடலது சின்னமாகத், திருநகர்க் கினிய நாமந் திருச்சுழி யாயிற் றன்றே" என்ற தலபுராணச் செய்யுளாலறிக. "வினையும் வினையரவின் வெய்ய விடத்தைக், களைமினோ" என்றதனானும் வினையை விடமாகக் கூறும் மரபுண்மை யறியத்தக்கது. மாதா பிதாக்களும் ரக்ஷகரல்லர், அரசன் ரக்ஷகனல்லன், திருமால் முதலான தேவர்களும் ரக்ஷகரல்லர், ரக்ஷகனாவான் நீயொருவனே யென்னுமிடம் மார்க்கண்டேயரது புராணத்தாலும், பரிதிநாட்டிறைவனான சந்திரசேனபாண்டியனது விருத்தாந்தத்தாலும், கடல்கடைந்த கதையாலும் வெளியாயிற்றென்பார் இம்முறைப்பட, 'விண்டு, தொழுங்கால காலா சுழியலினாய் பண்டு, விழுங்கால காலா' எனக் கூறினாரெனலும் அமையும். சந்திரசேன பாண்டியனது விருத்தாந்தத்தைப் பிரளயஞ் சுழித்த சருக்கத்தா லறிக. ஆலகாலம் - ஹாலாஹலம். சூழ்ந்துற்றார் விலகுங்கால் உண்டு துணையெனக் கால் கொடுப்பாய் என்றியைத் துரைத்தலும் அமையும். பண்டு என்பதற்கு - நாவற்கனிபோல என்றலுமாம். (கசு)



விரையகலக் கொன்றைச் சுழியலர்கோன் மீண்டென்
புரையகலக் கண்களிக்கப் போந்து—வரையகலங்
காட்டுமே லென்னைக் கலந்திறுகத் தன்னோடுங்
கூட்டுமேற் கூடலே கூடு.

(இ - ள்.) விரை அகல் - மணம் விரிந்த, அக் கொன்றை - அக்கொன்றை மலர் மாலையை யணிந்துள்ள, சுழியலர்கோன் - சுழியல் நகரத்தவரது தலைவனாகிய திருமேனி நாதன், மீண்டு - திரும்பி, என் புரை அகல - (சாயலொடு மணிமாமை தளர்ந்ததாகிய) எனது குறையெல்லாம் நீங்கவும், கண் களிக்க - எனது கண்கள் ஸந்தோஷிக்கவும், போந்து - வந்து, வரை அகலம் - மலைபோலகன்ற தனது திருமார்பினை, காட்டுமேல் - காட்டுவானாயின், என்னைக்கலந்து - என்னைச் சேர்ந்து, இறுக தன்னோடும் கூட்டுமேல் - இறுகும்படியாகத் தன்னோடு சேர அணைத்துக்கொள்வானாயின், கூடிடு கூடலே - கூடலே நீ கூடுவாயாக ; (எ - று.)

இது, கூடலிழைத்தல் என்னுந்துறை. கூடலிழைத்தலாவது தலைமகனைப் பிரிந்த தலைமகள் கூடல் தெய்வத்தை வாழ்த்தி மணலில் வட்டமாக ஒரு கோடுகீறி, அதனுட் சுழிசுழியாகச் சுற்றுஞ்சுழித்து அச்சுழிகளை இவ்விரண்டாகக் கணக்கிட்டு, அக் கணக்கு இரட்டைப்பட்டால் பிரிந்த தலைவர் வந்து கூடுவரென்றும் ஒற்றைப்பட்டால் அவர்வந்து கூடாரென்றுங் குறிபார்ப்பதொரு மரபு ; இதனை, நாய்ச்சியார் திருமொழியின் பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானத்து அரும்பதத்தில், 'கூடலாவது - வட்டமாகக்கோட்டைக்கீறி அதுக்குள்ளே சுழிசுழியாகச் சுற்றுஞ்சுழித்து இவ்விரண்டு சுழியாகக் கூட்டின விரட்டைப் பட்டாற் கூடுகை, ஒற்றைப் பட்டால் கூடாமை என்று சங்கேதம்' என்றதனாலும், "ஆழி திருத்தும் புலியூ ருடையா னருளினளித், தாழி திருத்தும் மணற்குன்றி னீத்தகன் றார்வருகென், றூழி திருத்திச் சுழிக்கணக் கோதிநை யாமலைய, வாழி திருத்தித் தரக்கிற்றி யோவுள்ளம் வள்ளலையே" என்னுந் திருக்கோவையாரில், 'ஆழி திருத்திச் சுழிக்கணக்கோதி' என்றதனாலும் அறிக. கூடுதலாவது - காரியத்தை அநுகூலிக்கச்செய்தல் ; அதாவது - இரட்டையாய்க் கூடுதலைக் குறித்தல். சுழிக்கணக்கில் ஒற்றையாய்க் கூடாமையைக் குறித்தலைச் சிதைத்தல் என்பர். இதுவே, கலங்குதல் என்றும், பிழைத்தலென்றும், தவறுதலென்றும், கூடாமையென்றும், சிதறுதலென்றுங் கூறப்படும். நாய்ச்சியார் திருமொழி யென்ற முற்குறித்த ஸ்ரீ வைஷ்ணவப் பிரபந்தத்தில், "தெள்ளியார் பலர்" என்ற கூடல் திருப்பதிகத்தில், "கொள்ளு மாகினீ கூடிடு கூடலே," "கோம கன்வரிற் கூடிடு கூடலே," "கூடு மாகினீ கூடிடு கூடலே" எனப் பல வாய்பாடுகளால், கூடற்றெய்வத்தைப் பிரார்த்தித்தவாறுங் காண்க. இனி, கூடலிழைத்தலாவது - கண்களை மூடிக்கொண்டு தரையில் வட்டமாக ஒரு கோடுகீறிப் பின்பு கண் திறந்து பார்த்து, அது தொடங்கிய விடத்துத் தவறாதுவந்து கூடியிருக்குமாயின் பிரிந்த தலைவன் தன்னைவந்து கூடுவானென்றும், அங்ஙனம் வந்து

கூடாது விலகியிருக்குமாயின் தலைவன்வந்து கூடானென்றுங் குறிபார்த்தல் என்று கூறுவாருமுளர்; அங்ஙனம் இலக்கணங்கொள்ளுதற்கு மேற்கோள் கிடைப்பரிது. பிரிந்தார் இரங்குவது நெய்தல் நிலத்திலே யாகையாலே, இது கடற்கரையிலே நிகழும். திருவடையாள மாலையாதலின், 'அக் கொன்றை' என உலகறிசுட்டாற் கூறப்பட்டது. இனி, அகரச்சுட்டைச் சுழியலர் கோனுக்குக் கூட்டலுமாம். மீண்டு என்றதனாற் பிரிவுணர்த்தியவாறுகாண்க. வரையகலம் என்றதற்கு உத்தம இலக்கணமாகிய மூன்று வரியினையு முடைய மார்பு என்றலும் பொருந்தும். "ஆரந் தாழ்ந்த வம்பகட்டு மார்பிற் - செம் பொறி வாங்கிய தோள்" எனத் திருமுருகாற்றுப்படையிலும், "வரையகன் மார்பிடை வரையு மூன்றுள" எனச் சீவகசிந்தாமணியிலும் மார்புக்கு இந்த இலக்கணங் கூறப்பட்டிருத்தல் காண்க. காட்டும், கூட்டும் என்ற செய்யு மென் முற்றுக்கள் ஈண்டு ஆண்பாலிற்காயின. (கஎ)

கூடு மிளமையும்பொற் கொங்கையினர் கூட்டுறவும்
மாடுங் குறித்தைவர் வாய்விழுநும்—பாடு
விழற்புல்லி னீர்விடலாம் மெய்ச்சுழிகைத் தாணு
கழற்புல்லி னீர்விடலாங் கட்டு.

(இ - ள்.) கூடும் - சரீரத்தையும், இளமையும் - யௌவனத்தையும், பொற்கொங்கையினர் கூட்டுறவும் - அழகிய முலைகளையுடைய இளமங்கையரது சிநேகத்தையும், மாடும் - செல்வத்தையும், குறித்து - (நிலையுள்ளனவென்றும் இன்பந் தருவன வென்றும்) மதித்து, ஐவர் வாய் விழும் - பஞ்சேந்திரியங்களாகிற கொடிய ஐவர்களின் வாயிலே விழுந்துபடுகின்ற, நும்பாடு - நுமது பிரயாசங்களெல்லாம், விழல் புல்லில் நீர்விடலாம் - விழற்புல்லுக்கு நீரிறைப்பது போலாம்; (இவ்வாறு பொறிவழி யொழுகுதல் தவிர்ந்து) நீர் - நீங்கள், மெய் - (பிரளயகாலத்திலும் அழியாது) நிலைநிற்பதாகிய, சுழிகை - திருச்சுழியல் என்னுந் தலத்தின்கண் எழுந்தருளியிருக்கின்ற, தாணு - சிவபெருமானாகிய திருமேனிநாதனது, கழல் - திருவடிகளை, புல்லின் - பற்றினால், கட்டு - (ஆசாபாசத்தினது) பந்தங்களையெல்லாம், விடலாம் - விட்டு விடலாம்; (எ - று.)

கூடு - சரீரம். "கூடுவிட்டிங்-காவிதான் போயினபின்" என்றார் ஔவையாரும். இனி, கூடும் இளமையும் என்பதற்கு நன்றாகத் தலைக்கூடிய யௌவனத்தையும் என்றுரைத்தலுமாம். பொற்கொங்கை யென்பதற்குப் பொன்னாலாகிய ஆபரணங்களை யணிந்துள்ள கொங்கையெனவும், பொன்போலத் தேமல் படர்ந்துள்ள கொங்கையெனவும் பொருள்கொள்ளலாம். கொங்கையினர் என்ற இடத்தில், இனர் என்பதை இன்னார் என்பதன் தொகுத்தலாகக்கொண்டு, (இன்பந்தருவார்போலத்) துன்பமே தருபவர் என உரைத்தலும் ஏற்கும். இன்னார் - இனியரல்லாதவர்; பகைவர். மாடு - செல்வமாதலைத், "தேடிய மாடும் நீடு செல்வமும்" என்ற பெரியபுராணச்செய்யுளாலுமறிக. வீடுபெறலா மென்பார், 'கட்டுவிடலாம்' என்றார். நிலையற்றதாகிய



சரீரத்திலே யபிமானங்கொண்டு, மாதர்களது சிற்றின்பத்தி லாசைவைத்து, அதற்கு ஸாதனமான பொருளைத்தேட முயன்று இங்ஙனம் பஞ்சேந்திரியங்களின் வசத்தராய் அறிவிழந்துதிரிந்து முடிவில் யாதொரு பயனையும் அடையாமல், மீண்டும் பிறவிக்கே விதைதேடியுழலும் நீங்கள் ஸ்தாணுவாகிய ஸ்ரீதிருமேனிநாதனைச் சரணமடைந்து வீடடையப் பாருங்கள் என உலகத்தார்க்கு ஹிதோபதேசஞ் செய்கிறார். (கஅ)

கட்டுச் செடிப்புலனைக் காய்ந்து சுகதுக்கம்
விட்டுப் பசையறுத்த மேலோர்க்குந்—தட்டுப்
படாதுயரும் பூமீசன் பாதமுநான் கண்டேன்
அடாதுயரு மென்பாற் கடுத்து.

(இ - ள்.) செடி புலனை - பாவத்தை விளைவிப்பனவாகிய ஐம்புலன்களையும், காய்ந்து கட்டு - வெறுத்துக்களைந்து, சுக துக்கம் விட்டு - இன்பதுன்பங்களையும் ஒழித்து, பசை அறுத்த - பற்றறுத்த, மேலோர்க்கும் - பெரியோர்களாகிய யோகிகளுக்கும், தட்டுப்படாது - தென்படாமல், உயரும் - உயர்ந்துள்ள, பூமீசன் - பூமிநாதனுடைய, பாதமும் - திருவடிகளையும், நான் - (ஒருவித யோக்கியதையுமில்லாத) அடியேன், கண்டேன் - தரிசித்தேன்; (ஆகையால்) துயரும் - பிறவித்துன்பங்களும், என் பாற்கு அடுத்து - என்னிடத்திற்கு வந்து சேர்ந்து, அடா - என்னை வருத்தமாட்டா; (எ - று.)

கட்டல் - களைதல். செடி என்பதற்குக் களைப்பூண்டு எனவே பொருள்கொண்டு, ஞானமாகிய பைங்கூழைத் தலையெடுக்க வொட்டாமல் மூடியழிக்கின்ற ஐம்புலன்களாகிய பூண்டுகளைக் காய்ந்து களைந்து எனக்கூறினும் அமையும். அடுதல் - வருத்துதல். இனி, 'அடாதுயரும் என்பாற் கடுத்து' என்ற நாலாவது பாதத்துக்குப் பிறவித்துன்பங்கள் என்பாற் சினந்துவந்து சாரா எனப் பொருள் கூறுவாருமுளர். இங்ஙனங் கொள்ளின் மோனைநயஞ் சிதைதலோடு அடுத்த கவியோடு அந்தாதியாகத் தொடர்தலின்மையுங் காண்க. ()

அடுக்கும் பிறவிக் கருங்கடலுக் கம்பி
படுக்கு மனவிருட்குப் பானு—மடுக்குஞ்
சதியுற்ற கல்வினைக்கோர் சாயகமாஞ் சூலப்
பதியுற்ற நாதன் பதம்.

(இ - ள்.) சூலப்பதி - சூலபுரம் என்னுந் திருச்சுழியல் க்ஷேத்திரத்திலே, உற்ற - எழுந்தருளியிருக்கிற, நாதன் - திருமேனி நாதனது, பதம் - திருவடிகள், அடுக்கும் பிறவிக் கருங்கடலுக்கு - அடுத்தடுத்துவருகிற பிறவியாகிய கரியகடலைக் கடப்பதற்கு, அம்பி (ஆம்) - தோணியாம்; படுக்கும் - (ஆன்மாவைத் தீவழியிற் செலுத்திக்) கெடுக்கின்ற, மன இருட்கு - மனத்தின்கண்ணுள்ள (அஞ்ஞானமாகிய) இருளைப் போக்கடிப்பதற்கு, பானு (ஆம்) - சூரியனும்; மடுக்கும் சதியுற்ற - நரகத்திலே தள்ளவல்ல வஞ்சனைகளோடு

கூடிய, வினை கல்லுக்கு - தீவினைகளாகிற மலைகளைப் பிளப்பதற்கு, ஓர் சாயகம் ஆம் - ஓர் கூரிய அம்பாம்; (எ - று.)

சாயகம் ஆம் என்பதிலுள்ள ஆம் என்பதனை அம்பியோடும் பானுவோடுங் கூட்டியுரைக்க. கருங்கடலில், கருமை - பெருமையுமாம். பிரளய வெள்ளத்திலே மூழ்காதபடி ஸ்ரீதனுநாதர் முன்னம் சூலத்தின்முனையிலே யேந்தி ரக்ஷித்ததால் திருச்சுழி, 'சூலபுரம்' எனப்பேர்பெற்றது. இதனை, "அடியுமுடியுங் காண்குறமா லயனே னமுமாய் அன்னமுமாய்ப், படியும் விசும்புந் தேடியின்னுங் காணக் கிடையாப் பரஞ்சோதி, வடிவ முழுதுஞ் செழியனுக்குக் காட்சி கொடுத்து மாநகரை, நெடிய சூல முனைக்கேந்தி நின்றான் பெருநீர் நிலையளவாய்," "சுரந்து ததும்பிக் கரைபுரண்டு சோரா தெழுந்து புவியடங்கப், பரந்து வரைக டமைப்புதைத்துப் பெருகும் பௌவப் பெருநீத்தங், கரந்து வடிந்துள் ளடங்கியபின் பூமி நாதன் கைதவனைப், புரந்த வடிவான் முன்போல விடுத்தா னதனாற் சூலபுரம்" எனவருந்தலபுராணச் செய்யுட்களாலறிக. சாயகம் - வாளுமாம். இச்செய்யுளை, "இடர்க்கடலுக் கோட மிதயவிருட் கென்றாழ், உடற்பகையை வேரறுக்கு மொள்வாள்—இடப்புறத்தைச், சூல்வண்ண மேகச் சுரிகுழலுக் கீந்தருளும், பால்வண்ண நாதன் பதம்" என்ற திருக்கருவை யந்தாதிச் செய்யுளோடும், "துணையெனப் படுவ வுயிர்க்கள வரிய தொல்லைவெவ் வினைவரை துளைக்கும், கணையெனப் படுவ நீந்தரும் பிறவிக் கருங்கடல் கடப்பதற் கமைந்த, புணையெனப் படுவ கட்டுவீ டென்று புகன்றிடப் படுவவே யில்லை, யிணையெனப் படுவ பாலையூர்ப் பெருமா னிருபதத் தாமரை மலரே" என்ற பாலைவனப் பதிற்றுப்பத்தந்தாதிச் செய்யுளோடும் ஒப்பு நோக்குக. (௨0)

பதந்தொடரு மன்னம் பொறியரியும் பைந்தார்
விதந்தொடரு மென்குழலை வேட்டு—நிதந்தொட ரும்
பண்புடையா ளானாற் பரனே! துணைமாலை
நண்புடையா ளாமே நமக்கு.

(இ - ள்.) அன்னம் - அன்னமானது, பதம் தொடரும் - பாதத்தைத் தொடர்ந்து செல்லாநிற்கும், பொறி அரியும் - பொறியை யுடைய அரியும், பைந்தார் விதம் தொடரும் மென்குழலை - அழகிய பற்பலவிதமான பூமாலைகளை யணிந்துள்ள மெல்லிய குழலை, வேட்டு - விரும்பி, நிதம் தொடரும் - நாடோறுந் தொடராநிற்கும்; பண்புடையாள் ஆனால் - இப்படிப்பட்ட தன்மையை யுடையவ ளானால், பரனே - திருமேனி நாதரே!, துணைமாலை - துணைமாலை யென்னுந் தேவியார், நமக்கு - (இத்தன்மையின் மாறுய தன்மையையுடைய) உமக்கு, நண்புடையாள் ஆமே - நட்பினையுடையார் ஆவரோ? (எ - று.)

பொறியரிதொடரும் பாதமும் அன்னந் தொடரும் சடைமுடியுமுடைய தேவரீருக்குப் பொறியரி தொடருங் கூந்தலும் அன்னந்தொடரும் பாதமுமுடைய துணைமாலைத் தேவியார் எவ்வாறு நண்புடையார் ஆவர் என்பதாம். பொறி அரி - லக்ஷ்மியையுடைய திருமால்; பொறிவண்டு. ஆமே என்பதில், ஏ - வினாப்பொருளது. நமக்கு என்பது உமக்கு என்னும் பொருள் குறித்து வருதலுண்மையை, 'நெருநலினும் வந்தவரோ நாமென்ன' என்ற கம்பராமாயணச் செய்யுளாலுமறிக. இச்செய்யுட் கருத்தையே, "பொறியரி தொடருமருமலர்த் தாளோன் பொலியனந் தொடர்சடா முடியோ, னறியுநின் கொழுநன் பொறியரி தொடரு மலர்க்குழ லினநடை யன்னஞ், செறிதரத் தொடர்மென் பதத்தினை யெனினீ தேவொடு மாறுளாய் கொல்லோ, கறிபயி லளிசூழ் பொழிற்றிரு வானைக் காவகி லாண்டநா யகியே" என்ற அகிலாண்டநாயகிமாலைச் செய்யுளுமுட்கொண்டிருத்தல் காண்க. அன்னந்தொடரும் அழகிய நடையினை யுடைய திருவடிகளையும் பொறிவண்டு சூழும் அழகிய மென் குழலினையுமுடைய துணைமாலையார் நமக்கு நண்புகொள்ளத் தக்கவரே யாவர் என்பது பிறிதுபொருள். (௨க)

நம்மை வலாரியயன் நாரணனு*நாமத்தைச்
செம்மை பெறப்புனைந்து சேமிப்பான்—வெம்மைப்
படநாகம் பூண்டானைப் பைந்நாகத் தின்கீழ்க்
கடனாகக் கைதொழுதாற் கண்டு.

(இ - ள்.) வெம்மை பட நாகம் பூண்டானை - வெவ்விய படத்தினையுடைய பாம்பை யாபரணமாகப் பூண்ட பூமிநாதனை, பைநாகத்தின்கீழ்கண்டு - பசிய புன்னாக விருக்ஷத்தினடியிலே தரிசித்து, கடனாகக் கை தொழுதால் - கடமை யென்பதாக நினைத்துக் கைகூப்பி வணங்கினால், வலாரி அயன் நாரணனும் நாமத்தை - இந்திரன், பிரமன், நாராயணன் என்னும் பெயர்களை, செம்மைபெற புனைந்து - (நமக்கு) அழகுபெறுமாறு சூட்டி, நம்மை சேமிப்பான் - நம்மை அப் பூமிநாதன் ரக்ஷிப்பான்; (எ - று.)

புன்னைவிருக்ஷத்தின்கீழ் எழுந்தருளியிருக்கும் பூமிநாதனைக் கைகூப்பி வணங்குமவர்கள் இந்திரன் பிரமன் திருமால் என்னு மிவர்களது பதவியையடையப் பெறுவார்கள் என்றபடி. வலாரி - வலன் என்னும் அசுரனைக்கொன்றவன். அயன் - அஜனென்னும் வடமொழித்திரிபு; விஷ்ணுவினிடத்திலே தோன்றியவன் என்பது பொருள். நாரணன் - நாராயணன். புனைந்து - புனைவித்து. "பனிம திச்சடைக் கறைமிடற் றனல்விழிப் பரமாந் - தனிமுதற் கொரு நீழலாம் புன்னையந் தருவும்," "புன்னைநன் னீழ லிடைவிடா திருப்போம்," "நன்னாக நிழற்சோதி" என இப்புன்னைமரம் பலவாறு சிறப்பிக்கப்படுகின்றமை காண்க. பயன்குறியாமலே, இது நமது ஆத்ம ஸ்வரூபத்துக்கு அனுகுணமாக ஏற்பட்ட கைங்கர்ய மென்று கைதொழுதால் என்பார், 'கடனாகக் கைதொழுதால்' என்றார். "கடநாக மூடாடுங் காளத்திக் கோனைக், கடனாகக் கைதொழுவார்க்கு" என்றார் பெரியாரும். இச்செய்யுளின் அபிப்பிராயத்தையே யொருவாறு தழுவிப் பின்னுள்ளாரும், "அமரரென் பெயருமயனெனும் பெயரு மச்சுத னெனுமொரு பெயரும், விமலநின் னருள்சற்

றுறுதலி னன்றோ விண்ணவர் வேதன்மால் பெற்றார்" என்று கூறியிருத்தல் காண்க. (௨௨)

கண்டு களிக்கக் கழலு மணிச்சிலம்பும்
பண்டு தரியுரியும் பட்டுடையுங்—கொண்டு
பொடியோடு சாந்தொளிரப் பூமீசா! போந்துன்
கொடியோடுங் காட்சி கொடு.

(இ - ள்.) கண்டு களிக்க - அடியேன் கண்குளிரக்கண்டு களிக்கும்படி, கழலும் - வீரக்கழலும், மணிச்சிலம்பும் - அழகிய சிலம்பும், பண்டு - முன்னம், தரி உரியும் - தரித்தருளிய தோலும், பட்டு உடையும் - பட்டாடையும், கொண்டு - அணிந்துகொண்டு, பொடியோடு சாந்து ஒளிர - வெள்ளிய விபூதியுடனே சந்தனமும் திகழ்ந்து விளங்க, பூமீசா - பூமிநாதனே!, உன் கொடியோடும் போந்து - நீ உனது தேவியாகிய பூங்கொடிபோன்ற துணைமாலையோடும் எழுந்தருளிவந்து, காட்சி கொடு - அடியேனுக்குத் தரிசனந் தந்தருள்வாயாக; (எ - று.)

கழல் - ஆடவர்கள் தங்கள் வெற்றிக்கும் கொடைக்கும் அறிகுறியாகக் காலில் அணிவதோர் ஆபரண விசேடம். மணிச்சிலம்பு - மணிப்பரல்பொதிந்துள்ள சிலம்புமாம். திகம்பரத்தை விலக்கப், 'பண்டு தரி யுரியும்' என்றார். கழலும், உரியும், பொடியும் பூமீசன் அணிவது; சிலம்பும், பட்டும், சாந்தும் தேவி அணிவது. இச் செய்யுளின் கருத்து, "அடியனேன் மனத்துக் கழலொடு சிலம்பு மதனொடு பட்டும்வெள் ளியநுண், பொடியொடு சாந்துஞ் சடையொடோ தியுமாய்ப் பொலிதரப் பெறுவதெந் நாளோ" என்ற பின்னுள்ளார் செய்யுளிலும் அமைக்கப்பட்டிருத்தல் காண்க. (௨௩)

கொடுவிடஞ் சோறு கொடுவரித்தோல் கூறை
படுவிடப் பைந்நாகம் பைம்பூண்—நடுவிடம்
நீறுதருங் காடென்னிற் புன்னை நிழலார்க்குப்
பேறுதரும் வீறுண்டோ பேசு.

(இ - ள்.) புன்னை நிழலார்க்கு - புன்னைமரத்தின் நிழலிலே குடியிருப்பவராகிய திருமேனி நாதருக்கு, சோறு - உண்ணுஞ்சோறு, கொடு விடம் - கொடிய விஷமாம்; கூறை - உடை, கொடுவரி தோல் - புலியின் தோலாம்; பைம்பூண் - அழகிய ஆபரணம், படுவிடப் பை நாகம் - கொல்லவல்ல விடப்பையையுடைய சர்ப்பங்களாம்; நடு இடம் - நர்த்தனஞ்செய்யும் ஸபை, நீறு தரும் காடு - சாம்பலைத் தருகின்ற சுடுகாடாம்; என்னில் - என்றால், பேறு தரும் வீறு உண்டோ - (அத் திருமேனிநாதருக்கு) தம்மையடைந்த அடியார்களுக்குப் பாக்கியத்தைத் தரக்கூடிய வல்லமை யுள்ளதோ, பேசு - நீ சொல்; (எ - று.)



சோற்றுக்குந் துணிக்கும் வகையின்றி விஷத்தைத்தின்று தோலைப் புனைந்துகொண்டிருப்பவரும், குடியிருக்க ஒரு வீடில்லாமல் மரத்தடியிலே குடியிருப்பவரும், ஒருவருந் துணிந்து தம்பால் வரமாட்டாதபடி அபாயகரமான பாம்பை யணிந்துகொண்டு பயங்கரமான மயானபூமியிலே தனியே நர்த்தனம்புரிந்துகொண் டிருப்பவருமாகிய திருமேனிநாதர் தம்மை யடையும் அடியார்களுக்கு என்ன ஸம்பத்தைத்தரப்போகிறார் என்றபடி. இது, பழித்ததுபோலப் புகழ்ந்தது. நிந்தாஸ்துதி என்பர் வடநூலார். இச்செய்யுளை, "ஏறுவது கொல்லேறெரிசடலை யாடரங்கு, கூறைபுலித் தோன் மணிப்பூண் கோளரா - நாறு, கரந்தை யணிகருவைக் காபாலிக் கென்பால், வரந்தரவே றுண்டோவகை" என்ற திருக்கருவையந்தாதிச் செய்யுளோடும் ஒப்பு நோக்குக. (௨௪)

பேசி லெவரே பெருவலியர்? பூமீசா!
மாசின் மலையான் மழைதடுத்த—தேசிற்
பின்னைக்கேற்ற மாலோ பெருநகரைச் சூல
முனைக்கேற்ற நீயோ மொழி.

(இ - ள்.) பூமீசா - பூமிநாதனே!, மாசின் மலையான் மழைதடுத்த - மேகங்கள் தவழப்பெற்ற மலையினாலே முன்னங் கல்மாரியைத் தடுத்தவனும், தேசில் - அவயவ சௌந்தர்யத்திலே, பின்னைக்கு - நப்பின்னைப் பிராட்டிக்கு, ஏற்ற - ஏற்றவனுமான, மாலோ - திருமாலாகிய கண்ணனோ, பெரு நகரை - பெரிய நகரத்தை, சூல முனைக்கு ஏற்ற - (முன்னம் பிரளய வெள்ளத்திலே மூழ்காதபடி) சூலத்தின் முனையிலேயேந்தி ரக்ஷித்தருளிய, நீயோ—, பேசில் - சொல்லுமிடத்து, பெரு வலியர் - பெரிய வல்லமையை யுடையவர், எவர் - யாவர், மொழி - எனக்குச் சொல்வாயாக; (எ - று.)

'தேசிற், பின்னைக்கேற்ற மால்' என்றதனால், கேவலம் ஸ்திரீலோலனாய் மேனிமினுக்கித் திரியு மித்தனைபோக்கி அக் கண்ணன் நின்னைப்போல ஆயுதம் எடுத்து அனைவரையுங் காக்கவல்ல பெருவீறுடைய வீரனல்லன் என்பதாக, 'எவரே பெருவலியர்?' என்ற வினாவிற்கு உத்தரமு முணரவைத்தாரென்க. இச்செய்யுட்கருத்து ஒருவாறாக, "புவனே சன்செழியன், முன்னர்த் தோன்றியரசேநீ யஞ்ச லென்று முத்திபுரந், தன்னைப் பிலத்தூ டுறப்போர்த்துச் சுடர்மூ விலைவேற் றலைக்கேந்திப், பின்னைக் கிறைகுன்றேந்தியபோ னின்றான் நகரம் பிறழாமல்" என்ற தலபுராணச் செய்யுளிலுங் குறிப்பிடப்பட்டிருத்தல் காண்க. பின்னை - பினை, தொகுத்தல். மாசின்மலை என்பதற்கு மேகங்கள் தவழப்பெறுதலில்லாத சிறு குன்று என உரைத்தலுமாம். (௨௫)

மொழியுங் குழைவார்ந்தீர் முத்தமிழச் செய்யுள்
வழியுமா சாரமுநீர் வாய்ந்தீர்—கழியுமக்குக்
கோலஞ்செய் மாச்சுழியார் கோவுக் கெதிர்நில்லாக்
கோலஞ்செய் வேளிணைக்கண் கோது.

(இ - ள்.) மொழியும் - வார்த்தைகளும், குழைவு ஆர்ந்தீர் - வணக்கமாகப் பொருந்தியுள்ளீர் [குழை வார்ந்தீர் - தழைகள் நிரம்பப் பெற்றீர்]; முத்தமிழச் செய்யுள் வழியும் - மூவகைப்பட்டதாகிய தமிழ்ச் செய்யுள் நூல்களிலே கூறப்பட்டதாகிய சன்மார்க்கத்தையும், ஆசாரமும் - நல்லொழுக்கத்தையும், நீர் வாய்ந்தீர் - நீர் அமையப்பெற்றுள்ளீர் [செய்யுள் - வயல்களிலே, முத்து அமிழ - முத்துக்கள் சிந்திப்பதிய, நீர் - நீங்கள், வழியும் மா சாரமும் வாய்ந்தீர் - வழிகின்ற மிக்க ரஸத்தையும் பொருந்தப் பெற்றுள்ளீர்]; கழி உமக்கு- (இப்படிப்பட்ட நற்குணங்களையுடைய) கரும்புகளாகிய உங்களுக்கு, கோலம் செய் - அழகு செய்கின்ற, மா சுழி ஆர் கோவுக்கு - திருச்சுழியலிலே எழுந்தருளியிருக்கின்ற கோவாகிய திருமேனி நாதருக்கு, எதிர் நில்லா - எதிர் நிற்கமாட்டாத, கோல் அஞ்சு எய் வேள் - பஞ்சபாணங்களையும் எய்கின்றவனை மன்மதனது, இணக்கம் - ஸகவாஸம், கோது - ஒரு குறையேயாம் ; (எ - று.)

'உள்ளன்பும் சொல்விநயமும் உடையவர்களாய்த் தமிழ் மறைகளிலே கூறப்பட்ட நன்னெறியையும் நல்லொழுக்கத்தையுந் தழுவிச் சிறந்து விளங்குகின்ற உங்களுக்கு ஈசுவர நிக்கிரகத்தையுடைய கொடியவனை மன்மதனது ஸகவாஸமிருப்பது ஒரு பெருங்குறை' யென்று கரும்பை நோக்கித் தலைவி யிரங்கிக்கூறியது என்க. மொழியும் என்ற உம்மையால் உள்ளமுங் குழை வார்ந்தீர் என்பது பெறப்பட்டது. மொழியும் குழை என்பதற்கு ஒலிக்குங் குழை எனப் பொருள் செய்க. கரும்பு - முத்துப்பிறக்குமிடம் இருபதிலொன்று. தமிழச்செய்யுள், அ - வேற்றுமைப் புணர்ச்சியில்வந்த சாரியை. கழி - கரும்பு. கழையுமக்கு என்றும் பாடம். பத்தினியாகிய அகலிகையின் சாபத்தால் அறிவிழந்து மயங்கிய கௌதமரது பிரார்த்தனையின்படி அவருக்குக் காட்சிகொடுப்பதற்காகத் திருமணக்கோலத்தைச் செய்துகொண்ட சுந்தரபுருஷரான திருமேனி நாதருக்குமுன் தானும் அழகுடையனென்று நிற்கமாட்டாமல் ஓடியொளித்த மன்மதனென்பாள், 'கோலஞ்செய் மாச்சுழியார் கோவுக் கெதிர்நில்லாக், கோலஞ்செய் வேள்' எனக்கூறினளென்க. விவாக வரலாற்றை, "சிலைநெடும்பொற் கிரியான திருச்சுழியற் பரஞ்சோதி, விலையடங்கா மணிநுயிற்றி வெயில்விரித்த மண்டபத்தே, கலைமடந்தை புணர் விரிஞ்சன் கடிமணத்தின் சடங்கியற்ற, மலைமடந்தை யுந்தானும் மணக்கோலம் வாய்ந்திருந்தான்," "கண்டவுடன் கௌதமனுங் கன்னியொடு வீழ்ந்திறைஞ்சி, அண்டருங்கா ணப்பெறுதற் கரிதாய மணக்கோலம், வண்டணியுங் குழலியுடன் காட்டினையே வயனூரிற், றொண்டர்தொழுங் கலியாண சுந்தரனே யெனப்புகழ்ந்தான்" எனவரும் புராணச்செய்யுட்களாலு மறிக. இனி, மாச்சுழியார்கோவுக்கு எதிர்நில்லாவேள் என்ற தொடருக்கு - திருச்சுழியலையுடையாரது நெற்றிக்கண்ணுக்கு எதிர்நிற்கமாட்டாமல் அழிந்தொழிந்தவனை மன்மதன் என்று பொருளுரைத்தலும் ஏற்கும். கோ - கண். இணக்கம் என்றது காமனுக்கு வில்லாயிருக்குந் தன்மையை. 'உம்மிடத்து இயல்பிலேயுள்ள கோது கோதன்று; வேளிணக்கமொன்றே நமக்குக் கோதாவது' என்பாள், 'கழியுமக்கு வேளிணக்கங் கோது' என்று கூறினள். (உசு)



கோதை மடவார் குவிமுலைவீழ் வண்டனும்
பேதை முடிக்குன் பிறங்குகழற்—போதைப்
புனைவனோ முத்திபுரப் பூமீசா ! தீவாய்
இனைவனோ சொல்லாய் எனக்கு.

(இ - ள்.) முத்திபுரப் பூமீசா - முத்திபுரமென்னுந் திருநாமத்தையுடைய திருச்சுழியலிலே யெழுந்தருளியிருக்கும் பூமிநாதனே !, கோதை - பூமாலை போலும், மடவார் - மெல்லியலார்களாகிய இளமங்கையர்களது, குவிமுலை - குவிந்துள்ள தனங்களையே, வீழ் - ஆசைப்படுகின்ற, வண்டனும் - தூர்த்தனாகிய, பேதை - அறிவில்லாதயான், முடிக்கு - என் சிரத்திற்கலங்காரமாக, உன் - உனது, பிறங்கு கழல் போதை - விளங்குகின்ற வீரக்கழலோடு கூடிய திருவடித்தாமரைகளை, புனைவனோ - அணிவனோ ? (அணியாமல்), தீவாய் - எரிவாய் நரகத்திலே கிடந்து, இனைவனோ - வருந்துவனோ, எனக்குச் சொல்லாய் - எனக்குச் சொல்லியருளாய் ; (எ - று.)

கோதை - கூந்தலுமாம். வீழ்தல் - விரும்புதல். "தாம்வீழ்வார் மென்றோள்" எனத் திருக்குறளிலும், "திருவீழ் நுண்பூண்" எனப் புறப்பாட்டிலும் வந்திருத்தல் காண்க. வண்டன் - மிண்டன். குவிமுலையாகிற கோங்கரும்பிலே வீழ்ந்து பட்ட வண்டை யொத்தவனாகிய பேதை யென்பார், 'குவிமுலைவீழ் வண்டனும் பேதை' என்றாரெனக் கொள்ளினுமாம். புனைதல்-அலங்கரித்தல். இனைதல் - வருந்துதல் ; இறங்குதலுமாம். முத்திபுரத்திலுள்ள நீ எனக்கும் முத்திகொடுப்பாயன்றோ ? ஆகவே, பேதையேன் தீவாய் நரகில் வீழ்ந்து வருந்தேன் என்னுங் குறிப்புத்தோன்ற 'முத்திபுரப் பூமீசா!' என விளித்தார் என்க. "மதிகுலத்திறை பிறைமதிச்சடை யரனளித்த வரத்தினன், முதுநகர்க்கிடு பெயரி யற்றினன் முத்தி மாநக ரென்னவே" என்றதனால் திருச்சுழியலுக்கு முத்திபுரம் எனவும் ஒரு பெயர்வழக்கிருத்தலை யறிக. (உஎ)

என்னை நிகர்ப்பவரார் எதிங் கெனக்கரிது
முன்னை மறையறியா முன்னவனைப்—புன்னை
நிழலடியிற் கண்குளிர நெஞ்சுருகி யேத்திக்
கழலடியிற் கைகுவித்தேன் கண்டு.

(இ - ள்.) முன்னை - அநாதியான, மறை - வேதங்களும், அறியா-காணமாட்டாத, முன்னவனை - மூலப்பழம்பொருளாகிய சிவபெருமானை, புன்னை நிழல் அடியில் - புன்னைமரத்தின் நிழலடியிலே, கண்குளிர கண்டு - கண்குளிரும்படி தரிசித்து, நெஞ்சுருகி - மனமுருகி, ஏத்தி - துதித்து, கழலடியில் - அவனது கழலடியின் கீழ், கைகுவித்தேன் - கைகூப்பி வணங்கினேன் ; (ஆத

லால்) என்னை —, நிகர்ப்பவர் ஆர் - ஒப்பவர் யாவர்?, இங்கு - இவ்வுலகத்தில், எனக்கு அரிது ஏது - எனக்குச் சிரம சாத்தியமானதுதான் யாது? (எ - று.)

மனம் மொழி மெய்களால் வணங்கினேன் என்பார், 'நெஞ்சுருகி யேத்திக் கைகுவித்தேன்' என்றார். நெஞ்சுருக ஏத்தி என்றும் பாடம். (உஅ)

கண்டு சினைமுத்தங் கண்மயங்கத் தாஞ்செறுத்து
வண்டுஞ் சிலம்பனமும் வாதாட — விண்டு
புரிவளை தீர்க்கும் புனல்வயலூர்க் கோமான்
சரிவளைக்கு நல்குமோ தார்.

(இ - ள்.) சினை - (அன்னப் பறவையீன்ற) முட்டையும், முத்தம் - (சங்கமீன்ற) முத்துக்களும், கண்மயங்க - நீர்த்துறையிலே கலந்து மாறுடினவாக, (அவற்றைக்குறித்து) வண்டும் - சங்கமும், சிலம்பு அனமும் - சிலம்பொலிபோற் சப்திக்கின்ற அன்னப் பறவையும், தாம் செறுத்து வாதாட - தம்மில் ஒன்றையொன்று கோபித்து (ஒன்றன் பொருளை மற்றொன்று தனதென்று மயங்குதலால்) தமக்குள்ளே வழக்கிட, புரிவளை - வலம்புரிச்சங்கமானது, கண்டு - அவ்வழக்கினைப்பார்த்து, விண்டு - விலக்கி, தீர்க்கும் - அவற்றின் விவாதத்தைத் தீர்ப்பதற்கிடமான, புனல் வயலூர் - நீர்வளஞ் செறிந்துள்ள வயலூர் என்னுந் திருப்பதியி லெழுந்தருளியிருக்கின்ற, கோமான் - நாதனாகிய திருமேனிப்பெருமான், சரிவளைக்கு - கழன்று வீழ்கின்ற வளையல்களை யுடையவளான இம் மடமங்கைக்கு, தார் நல்குமோ - தனது கொன்றை மலர்மாலையைத் தந்தருள்வனோ; (எ - று.)

இது, மணந்து பிரிந்த தலைவனது பிரிவை யாற்றாது வருந்திய தலைவியின் நிலைமை கண்டு தோழி இரங்கிக் கூறியது என்க. பிரிந்த நிலையிலே தலைவி தலைவனது மலர் மாலையைப் பெற்றாயினும் மகிழக்கருதியதனைக் குறித்து, 'தார்நல்குமோ' என்றது. இது, தனதுமாலை இவளுடம்பிற் படும்படி கலவி யின்பத்தைத் தந்தருள்வனோ என்ற குறிப்புமாம்; இடக்கரடக்கலின்பாற்படும். இனி, வயலூர்க்கோ - வயலூருடையனான நாதன், மான் - மான்போன்ற இம் மடமங்கையினது, சரிவளைக்கு - வளையல்கள் சரிந்து வீழ்கின்ற இம் மெலிவுநோய் தீர்தற்கு, தார் நல்குமோ - தனது கொன்றைமலர் மாலையைக் கொடுத்தருள்வனோ? என்று பொருள் கொள்ளலு மமையும். வயலூருடைய கோமான் தான்கவர்ந்த வளையல்களுக் கீடாக மலர்மாலையையாயினுந் தந்தருள்வனோ என்றலும் ஏற்கும். சங்கு ஈன்றமுத்தும், அன்னப் பறவையீன்ற முட்டையும் வடிவிலொப்புமை யுடைமையால், அவற்றை மாறுடிச் சங்கும் அன்னமும் வாதாடினவென்க, சங்கும் அன்னமும் போராடி நிற்கையில் இவ்விரண்டும் மதிக்கத்தக்க பெரிய வெண்மையான வடிவமுடைய வலம்புரிச்சங்கு அவை அஞ்சி அகலும்படி அவற்றின் நடுவேசென்று அவற்றை விலக்கிச் சென்றதையே, மத்தியஸ்தனாய் நின்று வழக்குத் தீர்த்ததாகக்



குறித்தார். புரிவளை - வலம்புரிச்சங்கம்; வலப்பக்கமாக உட்சுழிந்திருப்பது. சங்குகளில் இதற்குள்ள தலைமையை, "இப்பியா யிரமே சூழ்ந்த திடம்புரியென்று கூறும், ஒப்பில்சங் காயி ரஞ்சூழ் முறும்வலம் புரியென் றோதும்" என்ற நிகண்டினாலு முணர்க. முத்தங் கண்மயங்க என்பதனை, முத்தங்கள் மயங்க என்றும், முத்து அங்கண் மயங்க என்றும் பிரித்துரைக்கலாம். வண்டு - சங்கம். சிலம்பொலிபோ லொலிப்பதனால் அன்னத்தைச் சிலம்பன்னம் என்றார். அனம் - அன்னம்; தொகுத்தல். "அரங்கி னாடுவார் சிலம்பினன்னநின், றிரங்கு வார்புனற் சரயு வெய்தினார்" என்பதனாலும் அன்னங்கள் சிலம்புபோற் சிலம்பு மென்பதனை யறிக. சங்கிற்கு, 'வளை' என்பது, உட்சுழிந்திருத்தல் பற்றிவந்த காரணக்குறி. எங்கேனுந் தடுமாற்றத்தினாற் குழப்பமுண்டானால் அதனை அங்குச் சென்று நின்று தீர்க்குந் தன்மையனான தலைவனென்பது, நாட்டுவளங்காட்ட வந்த அடைமொழியினாற் போந்த பொருள்; இங்ஙனங்கூறினது, ஆறுவகைப் பிரிவினுள் இது பகைதணிவினைப் பிரிவென்பதைக் காட்டும். அஃதாவது:—'இருவர் அரசர் தம்மிற் பொருபவென்றவிடத்து அவரைச் சந்துசெய்வித்தற்குப் பிரியும் பிரிவு,' 'தூதுவர்போலச் சந்து செய்வித்தற்குப் பிரியு மென்பதன்று: இருவர் அரசர் நாளைப் பொருதும் இன்று பொருது மென்றிருந்த நிலைமைக்கண் தான் அருளரசனாகலின் இம்மக்களும் இவ்விலங்குகளு மெல்லாம் பட இவ்விரண்டு குலத்திற்கும் ஏதம் நிகழும்: அதனால் இப்போ ரொழிப்பனென்று இருவரையும் இரந்து சந்து செய்வித்தலு மொன்று; அல்லதூஉம், தேவரும் அசுரரும் அமர்செய்த காலத்துத் தேவர்களையும் அசுரர்களையும் ஒருவீர் ஒருவீர் மிக்காரை ஒறுப்பல் யானெனப் பாண்டியன் மாகீர்த்தி சந்து செய்வித்ததுபோல், இருவரின் மிக்குச் செய்திரை யொறுப்பலென்று சந்து செய்வித்தலு மொன்று: இருவரையும் ஒறுக்குந்துணை யாற்றலுடைய னாகலானென்பது; அஃதே யென்னின், தன்னகத்து இருந்துவிட அமையாதோ? அன்ன ஆற்றலனாகலான், தான் செல்லவேண்டுமோ? எனின்,—செல்லவேண்டும்: என்னை காரணமெனின், காதலரைப் பிரிந்து ஒரு கருமமுடிப்ப அதனின்மிக்க ஆள்வினையில்லையென்பது; ஆதலாற் பிரிந்தே சந்துசெய்விக்கு மென்பது' என்ற இறையனார் அகப்பொருளுரை வாக்கியங்களைக் காண்க. சங்கும், அதிற்சிறந்த சாதியான வலம்புரியும், தாமரையை விரும்புந் தன்மையதான அன்னப்பறவையும் நீர்வளஞ்சிறந்த இடத்திலேயே பயிலுமாகலால், 'புனல்வயலூர்' என்றார். வயலூர் திருச்சுழியலுக்கு ஒருபெயர். இதனை, "இந்து சேகரனார் வய லூரிது வென்றும், முந்து சீர்செழு முத்திமா நகரென்று முறையாற், கொந்து லாந்தடச் சூலநன் னகரென்றுங் குறிப்பால், நந்தி நம்பனார் சுழியலென் றும்மத னாமம்" என்ற புராணச் செய்யுளாலு மறிக. இச்செய்யுள், "அரிவளை பொன்மகி ழாயிழைக் கியுங்கொ லந்திவந்து, முரிவளை முத்துஞ் சினையு மயங்க முறைசெறுத்து, வரிவளை யும்மன்ன முந்தம் மிலேவழக் காடவலம், புரிவளை யூடறுக் குங்குரு கூரெம் புரவலனே" என்ற நம்பநாடரது செய்யுளைப் பின்பற்றியதென்க. (உகூ)

தார்கெழு மாணிக்கந் தண்டரளம் பூணுதே
கார்கெழு வெவ்விடக் கட்செவியைச்—சீர்கெழு
பூணுகக் கொள்ளப் புவனேசா! மற்றந்தக்
கோணுகஞ் செய்தவமென் கூறு.

(இ - ள்.) புவனேசா - பூமிநாதனே!, தார்கெழு - மாலையாகப் பொருந்துதற்குரிய, மாணிக்கம் - மாணிக்கத்தையும், தண் தரளம் - குளிர்ச்சி பொருந்திய முத்து முதலியவற்றையும், பூணுதே - அணிந்து கொள்ளாமல் விலக்கி, கார் கெழு - கருநிறம் பொருந்திய, வெவ்விடம்- கொடிய விஷத்தையுடைய, கட்செவியை - கண்ணையே செவியாகவு முடைய சர்ப்பத்தை, சீர் கெழு பூணுக - அழகு பொருந்திய ஆபரணமாக, கொள்ள - கொண்டருளும் படியாக, அந்தக் கோள் நாகம் - அந்தக் கொல்லுந்தன்மையையுடைய நாகங்கள்தாம், செய்தவம் என் - செய்த தவந்தான் யாது, கூறு - அதை அடியேனுக்குத் தெரியச் சொல்; (எ - று.)

தார்கெழு மாணிக்கம் என்பதற்கு - தாமரைப்பூவையுஞ் செங்கழுநீர்ப் பூவையும் போன்ற ஒளிபொருந்திய மாணிக்க மென்றலுமாம். என்றது, பதுமமும் நீலமும் விந்தமும் படிதமுமாகிய நால்வகைச்சாதி மாணிக்கத்துள் பதுமத்தை. பதுமம் - பத்மராகம். சாதுரங்க மென்பதும் அது. "தாமரை கழுநீர் சாதகப் புட்கண், கோப மின்மினி கொடுங்கதிர் விளக்கு, மாதுளைப் பூவிதை வன்னியீ ரைந்தும், ஓதுசா துரங்க வொளியா கும்மே" என்றதுங் காண்க. கெழு - சாரியைச் சொல்; பொருந்துதல் என்னும் பொருள்தந்து நின்றது. சிலப்பதிகாரப் பதிகத்தின்கண், 'முடிகெழுவேந்தர்' என்னுமிடத்து ஆசிரியர் அடியார்க்கு நல்லார், "கெழுவென்னுஞ் சாரியை, 'லனவென வரூஉம் புள்ளி யிறுதிமு, னும்முங் கெழுவு முளப்படப் பிறவு, மன்ன மரபின் மொழியிடைத் தோன்றிச், செய்யுட் டொடர்வயின் மெய்பெற நிலையும்' என்னுஞ் சூத்திரத்துள், அன்ன மரபின் மொழியிடைத்தோன்றி என்பதனால் அவ்விருபுள்ளி யீற்றுச்சொல்லும் அல்லாதனவும் சாரியை பெற்று முடிவன வுளவென்றாராகலின், புள்ளியீறல்லாத வழிவந்த சாரியைச் சொல்லெனக் கொள்க. சாரியையாவது சொல் தொடர்ந்துசெல்லு நெறிக்கணின்று அதற்குப் பற்றுக்கோடாகச் சிறிது பொருள்பயந்தும் பயவாததுமாய் நிற்பது. அவற்றுள் இது சிறிது பொருள்பயப்ப நிற்பது. பொருந்துத லென்னும் பொருண்மை சாரும்" என உரைத்தது இங்குங் கொள்ளத்தக்கது. பூணுகங் கொள்ள என்றபாடமும் உண்டு. இப்பாடத்துக்குப் பூணுகத் திருமார்பிலே கொண்டருள என உரைக்க. ஆகம் - மார்பு. இச்செய்யுளை, "மன்னு கயிலாய மாமுத்தம் மாணிக்கம், பொன்னுரா மாக்கொண்டு பூணுதே — யென்னாளும், மின்செய்வார் செஞ்சடையாய் வெள்ளெலும்பு பூண்கின்ற, தென்செய்வா னெந்தா யியம்பு" என்ற முன்னோர் செய்யுளோடு ஒப்புக் காண்க. (௯௦)



செய்தவத்தைப் பேணித் தெறுகனலிற் றண்புனலிற்
செய்தவத்தைப் பட்டுத் தெரிந்ததெவன்—செய்தவத்தைத்
தேண்டாதே யெந்தை திருச்சுழியிற் சென்றடைமின்
வேண்டாதே தந்தருளும் வீடு.

(இ - ள்.) செய் தவத்தைப் பேணி - செம்மையான தவத்தை விரும்பி, தெறு கனலில் - தகிக்கவல்ல பஞ்சாக்கினி மத்தியிலும், தண் புனலில் - குளிர்ச்சி பொருந்திய நீர்நிலையிலும் இருந்து, செய்து - அத்தவத்தைச் செய்து, அவத்தைப் பட்டு - கஷ்டத்தை யடைந்ததனால், தெரிந்தது எவன் - கண்ட பலன் என்ன?, செய்து - இங்ஙனங் காயக்கிலேசத்தைச் செய்து, அவத்தைத் தேண்டாதே - நிஷ்பிரயோஜனமான தொன்றைத் தேடாமல், எந்தை - எமது பெருமானாகிய திருமேனிநாதர் எழுந்தருளி யிருக்கின்ற, திருச்சுழியில் சென்று அடைமின் - திருச்சுழியென்னும் க்ஷேத்திரத்திற்குப் போய்ச் சேருங்கள்; (சென்றடைந்தால் அத்தலந்தானே) வேண்டாதே - நீர்வேண்டாதிருக்கும்போதே, தந்து - இம்மை மறுமைச் செல்வங்களை யெல்லாம் உமக்குக் கொடுத்து, வீடு அருளும்-மோக்ஷத்தையும் (பின்னர்) அருளும்; (எ-று.)

பகவத் பிராப்திக்கு விரோதியான சரீர சம்பந்தாதிகளை அறுத்துக் கழித்து எம்பெருமானை யடையவேண்டு மென்று, "தொன்னெறியை வேண்டுவார் வீழ்கனியு மூழிலையு, மென்னு மிவையே நுகர்ந்துடலந் தாம்வருந்தித், துன்னு மிலைக்குரம்பைத் துஞ்சியும் வெஞ்சுடரோன், மன்னு மழனுகர்ந்தும் வண்டடத்தி னுட்கிடந்து, மின்னதோர் தன்மையராய்" என்கிறபடியே, மனம் பொறிவழி போகாமல் நிற்றற்பொருட்டு, வனத்திற்சென்று நீர்பருகியுங் காற்று நுகர்ந்தும் கனிகிழங்கு சருகு வருக்கங்களையுண்டும் விரதங்களால் உண்டி சுருக்கலும், கோடைக்காலத்தில் வெயில் நிலையிலும் அக்கினி மத்தியிலும் நிற்றலும், மாரிக்காலத்தும் பனிக்காலத்தும் நீர்நிலையிற் பாசியேற நிற்றலும் முதலிய செயல்களை மேற்கொண்டு, அவற்றால் வருந் துன்பங்களைப் பொறுத்து, இவ்வாறு சரீரத்தை ஒறுத்து வருந்தல் வேண்டா; திருச்சுழியல் என்னுந் தலத்திற் சென்று சேருங்கள். அத்தலமாகாத்மியத்தாலே நீங்கள் இம்மை மறுமைச் செல்வங்களையெய்தி யனுபவித்துக் கழித்து மோக்ஷத்தையும் அதிஸுலபமாக அடையப்பெறுவீர்கள் என்று பரோபதேசம் பண்ணுகின்றார் என்க. "மறுவி லாச்சுழி யலின்மணி தர்க்குமாத் திரமோ, பறவை யண்டசங் கிருமிகீ டம்பல மிருகம், இறுதி யிற்சிவ பதம்பெறும் பிறவியு மிலையே" என்றதனாலும் இத்தலத்தினது மகிமையை யறிக. திருச்சுழியலிற் சென்று எந்தையை அடைமின்கள்; அவன் வீடுதந்தருள்வான் என முடித்தலுமொன்று. தெறுதல் - சுடுதல். "தெறுசுடர், ஒண்கதிர் ஞாயிறு" என்றார் புறப்பாட்டினும். கோடைக்காலத்துக் கனல் என்பார், 'தெறுகனல்' என்றும் மாரி பனிக்காலத்து நீர் என்பார், 'தண்புனல்' என்றும் அடைகொடுத்துக் கூறினார். தேண்டல் - தேடல். "தேண்டிநேர் கண்டேன் வாழி" என்றார் கம்பரும். வேண்டாதே தந்து என்பதற்கு நீங்கள் வேண்டாமென்று வெறுக்

கும்படி தந்து என்றுரைத்தலுமாம். வீடுதான் வேண்டாமை வேண்டுவார்க்குக் கிடைப்பதாகலான் 'வேண்டாதே தந்து' எனக்கூறினரெனப் பொருணுட்பங் காண்க.

(௫௧)

வீடு தருஞ்சுழியல் வேந்தே! உன்னையொருகாற்
கூடு பெறுமுன் குறித்தறியேன்—வாடும்
பொறையிது போய்ப்பிறந்து போற்றவோ மாட்டேன்
குறையிது நீபொறுத்துக் கொள்.

(இ - ள்.) வீடு தரும் சுழியல் வேந்தே - முத்தியை யளிக்கவல்லவரான திருச்சுழி நாதரே!, கூடு பெறும் முன் - அடியேன் இச்சரீரத்தைப் பெறுதற்கு முன்னே, உன்னை ஒருகால் குறித்து அறியேன் - தேவரீரை ஒரு பொழுதேனுந் தியானித்தறிந்தேனில்லை; வாடும் பொறை இது போய் - வாடும் இயல்பினதாகிய இந்தச் சரீரம் போய், பிறந்து - இனியும் ஒரு சரீரத்தைப் பெற்றுப்பிறந்து, போற்றவோ மாட்டேன் - துதிசெய்யவோ மாட்டேன்; குறையிது - அடியேனது இக்குற்றத்தை, நீ பொறுத்துக்கொள் - தேவரீர் க்ஷமித்துக்கொள்ள வேண்டும்; (எ - று.)

உனை - உன்னை, தொகுத்தல். கூடு - சரீரம். முன் என்றது மலத்தால் மறைப்புண்டு கிடந்த காலத்தை. மலந்தொலைத்து ரக்ஷித்தருள்வதற்காக ஈசன் தனது திருவருளாற் கொடுத்ததாகலான், கூடும் பேறாயிற்று. வாடுதல் வீங்குதல் முதலியன சரீரதர்மமாகலின், 'வாடும் பொறை' யெனப்பட்டது. ஸ்ரீதண்டகாரணியத்தில் ருஷிகள் ஸ்ரீராகவனுக்கு ராக்ஷஸர் தின்ற உடம்பைக் காட்டினாற்போல நோய்தின்ற உடம்பைக் காட்டுகின்றார், 'வாடும் பொறையிது' என்று. இது என அண்மைச்சுட்டாற் குறித்துக்காட்டியது பொறையின் இழிவை விளக்குதற்காக என்க. ஆன்மா வாடுதற்குக் காரணமான பொறை யென்பார், 'வாடும் பொறை' எனக் கூறினரென்றலுமொன்று. பொறை - சரீரம். நாற்றச் சுமையாகிய இச்சரீரம் என்றலுமொன்று. பொறை - சுமை. மேல் தமக்குப் பிறப்பில்லை யென்னுந் துணிவால், 'பொறையிது போய்ப் பிறந்து போற்றவோ மாட்டேன்' என்றார். இத்துணிவுக்கு ஹேது திருச்சுழியல் நாதனைத் திருவடிதொழப் பெற்றமை; 'வீடு தருஞ்சுழியல் வேந்தே' என முதற்கண் விளித்ததும் இக்கருத்துப் பற்றியே யென்க. மலம மறைக்கக்கிடந்த அஞ்ஞான நிலையிலும், அம்மறைப்பு நீங்கி யுணரக்கிடந்த ஞான நிலையிலும் ஈசன் உணர்வரியனாகலால் இவர் இவ்வாறு, 'குறித்தறியேன், போற்றவோ மாட்டேன்' எனக்கூறினர். ஞானநிலையிலும் ஈசன் உணர்வரியான் என்பதை "உணர்ந்தார்க் குணர்வரியோன்" என்பதனானுமுணர்க. உன்னை ஒருபொழுதேனும் நான் முன்னர்த் துதித்திருப்பேனாயின் எனக்கு இச்சரீரம் வந்திராது. வந்ததுகொண்டு முன் துதித்தறியேன் என்பது நிச்சயம்; இப்போது உன்னைத் திருவடி தொழப் பெற்றமையால் இனி யெனக்குப் பிறவியில்லை; ஆகவே இனியும் நான் உன்



னைத் துதிக்கமாட்டே னென்பது நிச்சயம்; சுழியல் நாதனே! முன்பு உன்னைத் துதியாதிருந்ததும் இனித் துதியாதிருக்கப்போவது மாகிய இந்த எனது குற்றத்தை நீ பொறுத்தருளல் வேண்டும் எனப்பிரார்த்திக்கின்றன ரென்க. குறித்தறியேன் என்ற இடத்தில், குறித்தல் - கருதல். இது இப்பொருட்டாதலை, "நீரழுவ நிவப்புக் குறித்து" என்ற புறப்பாட்டினானு மறிக. (௫௨)

கொள்வா ரிலாமைக் கொடுப்பா ரிலாக்குறைசேர்
கள்வார் பொழிற்சுழிகைக் கற்பகத்தை— வள்வார்
துடிநா லிடைத்துணையைச் சூழ்ந்துதொழா மாக்கள்
படிநூல் பலபலவும் பாழ்.

(இ - ள்.) கொள்வார் - பெற்றுக்கொள்பவர்கள், இலாமை - இல்லாமையினால், கொடுப்பார் - கொடுப்பவர்களும் இலா - இல்லாத, குறை சேர் - குறையைப் பொருந்தியுள்ள, கள் வார் பொழில் சுழிகை - தேனொழுகும் பூஞ்சோலைகளையுடைய திருச்சுழிய லென்னுந் தலத்தின்கண் எழுந்தருளியிருக்கின்ற, கற்பகத்தை - கற்பக விருக்ஷத்தை யொத்த திருமேனிப் பெருமானையும், வள் வார் துடி - வார் விசைந்த பெருமை பொருந்திய உடுக்கையினையும், நூல் - நூலினையுமொத்த, இடை - இடையினையுடைய, துணையை - துணைமாலைத் தேவியாரையும், சூழ்ந்து தொழா - வலஞ்சூழ்ந்து வணங்க மாட்டாத, மாக்கள் - மிருகத்தை யொத்த அறிவில்லாத மனிதர்கள், படி - படிக்கின்ற, நூல் பலபலவும் - பற்பல விதமான நூல்களும், பாழ் - வீணேயாம்; (எ-று.)

கொடுப்பா ரிலாக்குறை சேர் என்பதற்குக் கொடுப்பவர்கள் தாம் கொடுப்பதற்குக் கொள்வாரைப் பெறுதலில்லாத குறையைப் பொருந்தி வருந்துதற்கிடமான எனவு முரைக்கலாம். குறை என்பதற்கு முடிக்கப்படும் பொருளெனப் பொருள்கொண்டு, கொள்வாரிலாமற் கொடுப்பாரு மில்லாத முடிக்கப்படும் பொருள் நிறைந்த சுழிகை யென்றுரைத்தலும் அமையும். குறை யென்னுஞ்சொல் இப்பொருள்படவருதலை, "பயக்குறை யில்லைத்தாம் வாழு நாளே" என்ற புறப்பாட்டானும், 'பயனாகிய முடிக்கப்படும் பொருளில்லை, தாம் உயிர்வாழும் நாளின்கண்' என்ற அதன் உரையானு மறிக. மதுநுகரும் அளியினங்கள் மிகுந்திராமையின் பொழிலும் மதுவை வறுநிலத்தே சிந்துகின்றன வென்பார், 'கள்வார் பொழில்' என்றார். இவ்வாறுகூறிய நகர்ச்சிறப்பானே திருமேனிப் பெருமானாகிய கற்பகமும் தன்னை யருத்திப்பார் யாவரென்று தேடுகின்ற தென்க. மாக்கள் - ஐயறிவே யுடைய விலங்குபோல்வார்; "மாவு மாக்களும் ஐயறி வினவே" என்பது சூத்திரம். இவ்வாறு கூறினர், கற்பகத்தை யடைந்து புருஷார்த்தங்களை யடையப்பெறாது வறியராய் நூல்படித்துத் திரிகின்றமை பற்றி. வாலறிவன் நற்றாள் தொழாது அறம் பொருள் இன்பம் வீடு என்னும் புருஷார்த்தங்களை யடைதலே நூற்பயனாகவும் அதுகொள்ளாது விட்டமையின், 'படிநூல் பலபலவும் பாழ்' என்றார். படிநூல் - வினைத்தொகை. படிநூல் - உலகநூல் என்றலுமாம். "அலகுகால் கற்பினறிவு

நூல் கல்லா, துலகநூ லோதுவ தெல்லாங் - கலகல, கூஉந் துணை" என்றார் நாலடியாரிலும். படி - உலகம். (௩௩)

பாழ்பெறுஞ் செல்வரைப் பாரியெனப் பாழ்மனமே!
கூழ்பெறுங் கூறைக்காக் கூறாதே—கேழ்பெறுங்
கற்றவரை யேந்துங் கலியாண சுந்தரனைப்
பெற்றவரை யுற்றவனைப் பேசு.

(இ - ள்.) பாழ்பெறும் செல்வரை - ஒன்றுக்கும் பயன்படாதபடி வீணே பெற்றுள்ள செல்வமுடையவர்களை, பாரியென - பாரியென்னும் வள்ளலுக்குச் சமானமானவர்களென்று, பாழ் மனமே - பாழான எனது நெஞ்சமே!, கூழ் - கூழுக்காகவும், பெறும் - பெற விரும்புகின்ற, கூறைக்கா - துணிக்காகவும், கூறாதே - புகழ்ந்து சொல்லாதே; கேழ் பெறும் - ஒளியைப் பெற்றுள்ள, கல் தவரை - மேருபர்வதமாகிய வில்லை, ஏந்தும் - ஏந்தியவனாகிய, கலியாண சுந்தரனை - கலியாணசுந்தரனென்னுந் திருநாமத்தையுடைய திருச்சுழிநாதனை, பெற்ற வரை உற்றவனை - பெருமை பொருந்திய கைலையங்கிரியை இருப்பிடமாகப் பொருந்தியவனை, பேசு - எப்பொழுதுந் துதித்துப் பேசிக்கொண்டிரு; (எ - று.)

உண்ணாமலும், ஒளிநிறாமலும், ஓங்கிய புகழ்செய்யாமலும், துன்னருங் கேளிர் துயர்களையாமலும், கொன்னே பொருள்காத்திழப்பவர் என்பார், 'பாழ்பெறுஞ் செல்வர்' என்றார். பாரியென்பவன் பேகன், பாரி, காரி, ஆய், அதிகன், நள்ளி, ஓரி என்று சொல்லப்படும் கடை யெழு வள்ளல்களில் ஒருவன்; முந்நூறு ஊரையுடைய பறம்பு நாட்டிற்கும் பறம்பு மலைக்குந் தலைவன்; முல்லைக் கொடிக்குத் தேர் கொடுத்தோன். இவற்றை, "சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய, பிறங்குவெள் ளருவி வீழுஞ் சாரற், பறம்பிற் கோமான் பாரியும்" என்னுஞ் சிறுபாணாற்றுப் படையானுணர்க. தன்னுடைய முந்நூறு ஊரையும், மற்றைப் பொருள்கள் எல்லாவற்றையும் பரிசிலர்க்குக் கொடுத்தோன். ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகள், "கொடுக்கி லாதானைப் பாரி யேயென்று கூறினுங்கொடுப் பாரிலை" என்று அருளிச்செய்திருப்பதனாலேயே இவன் கொடைச்சிறப்பு நன்குவிளங்கும். கூறாதே என்பதனை எச்சச் சொல்லாகக்கொண்டு செல்வரைக் கூறாமல் கலியாண சுந்தரனைப்பேசு எனமுடித்தலுமாம். கேழ்பெறுங்கல் என்றார் பொன்மலை யாதலின். தவர் - வில். பெற்றவரை யென்பதற்கு இடபமாகிய மலையென்று பொருளுரைத்தலும் அமையும். பாழ்படும் அற்பமாகிய செல்வத்தை யுடைய வச்சைகளைப் பாடாமல், பொன்மலையை வில்லாகவும், வெள்ளிமலையை யிருப்பிடமாகவுமுடையவனைப் பாடு என நெஞ்சுக்கு அறிவுறுத்துகின்றன ரென்க. கற்றவர்களை யாதரிப்பவனும், எப்போதுங் கலியாணக் கோலத்துடன் விளங்குகின்ற சுந்தரமான வடிவத்தை யுடையவனும், பெற்ற தாய்தந்தையர்களைப் போன்ற அன்புடையவனுமாகிய சுழியல் நாதனைப் பாடு என்பதாக மற்றொரு



பொருளும் பின்னிரண்டடிகளுக்குக் கிடைத்தல் காண்க. உற்றவனை - ஒத்தவனை. "வாளுற்ற கண்ணாள்" என்றார் சிந்தாமணியாரும். கலியாணசுந்தரன் என்பதுந் திருமேனிநாதனுக்கு ஒருபெயர். இது, கௌதம முனிவருக்குத் திருமணக்கோலக்காட்சி கொடுத்ததனால் வந்தது. (௩௪)

பேசப் பெருவியப்பு மாயம் பிறரறியார்
வாசப் பழன வயலூரான்—ஏசத்
தரும்பிச்சை யேற்பான் தராதிபராய்த் தன்பால்
வரும்பிச்சை யேற்பாரை வைத்து.

(இ - ள்.) வாசப் பழன வயலூரான் - நறுமணம் வீசுகின்ற பூஞ்சோலைகளையுடைய வயலூர் என்னுந் திருப்பதியில் எழுந்தருளியிருக்கின்ற திருமேனிநாதன், தன்பால் வரும் பிச்சை ஏற்பாரை - தன்விஷயமாக வருகின்ற (அன்பின் மிகுதியாலுண்டாகிய) பயித்தியத்தை மேற்கொள்ளும் மெய்யடியார்களை, தராதிபராய் வைத்து - பூமண்டலத்திற் கெல்லாம் அதிபராம்படி ஸிம்மாஸனத்திலே வீற்றிருக்கவைத்து, ஏச - தன்னையாரும் இகழும்படி, தரும் பிச்சை - பிறர் கொடுக்கும் பிச்சையை, ஏற்பான் - தான் அலைந்து இரந்து கொள்வான்; (இவ்விஷயம்) பேச - சொல்லப்புகின், பெரு வியப்பு - பெரிய வியப்புக்கு இடமாயிருக்கின்றது; மாயம் - இந்த மாயத்தை, பிறர் அறியார்- பிறரும் இன்னதென்று தெரிந்துகொள்ள முடியவில்லை; (எ - று.)

பழனம் - வயலுமாம். வயலூரான் என்றார் விளைநிலங்களை யுடையான் ஐயம்புகுதல் ஆச்சரியமன்றோ வென்பதை யறிவித்தற்கு. வாசஸ்தானமாகப் பழன வயலூரை யுடையான் என்றலு மொன்று. பித்து - பிச்சு என்றானது போலி. தன்பால் வரும் பிச்சு என்பதற்குத் தன்னிடத்திற்கு வரவேண்டுமென்கிற பித்து என்றுரைத்தலுமாம். இச்செய்யுள், "இருந்தவா காணீ ரிதுவென்ன மாயம், அருந்தண் கயிலாயத் தண்ணல் - வருந்திப்போய்த், தானும் பிச்சை புகும்போலுந் தன்னடியார், வானாள மண்ணாள வைத்து" என்ற முன்னோர் செய்யுளின் அரிய பொருளையும் சொல்லையுந் தழுவி வந்திருத்தல் காண்க. (௩௫)

வையம் புரந்த வயவேந்தர் வேறாகி
ஐயம் புகக்காண்டு மாதலினால்—வெய்ய
பிநாகத் திருக்கையனைப் பேறாக நெஞ்சே!
புநாகத் திருக்கையனைப் போற்று.

(இ - ள்.) வையம் புரந்த வயவேந்தர் - உலகத்தையெல்லாம் செங்கோல் செலுத்தி ஆண்டவர்களாகிய வெற்றியையுடைய அரசர்கள் பலர், வேறாகி - அடியோடு வேறுபட்டுக் கொடிய வறுமையை யுடையராய், ஐயம் புக காண்டும் - பிச்சை யெடுப்பதைக் கண்கூடாகப் பார்க்கிறோம்; ஆதலினால் - ஆகையால், நெஞ்சே - மனமே!, பேறு ஆக - நிலையான ஸம்பத்து உனக்குக் கிடைக்கும்படியாக, வெய்ய பிநாகம் திருக்கையனை - வெவ்விய பிநாகமென்

னும் வில்லையேந்தியருளிய அழகிய திருக்கரத்தை யுடையவனும், புனகத்து - புன்னாக விருக்ஷத்தினடியிலே, இருக்கையனை - எழுந்தருளி யிருப்பவனுமாகிய பூமிநாதனை, போற்று - நீ வணங்குவாயாக; (எ - று.)

அநித்யமான ஸம்பத்தி லாசை வையாமல் நித்யமான ஸம்பத்தில் ஆசை வைத்து அதைப் பெறுமாறு பூமீசனைப் போற்றாய் எனத் தமது நெஞ்சுக்கு உதாரணமுகமாக உபதேசிக்கிறார் என்க. வயம் - வெற்றி. வேறாகி - தாம் ஒருபக்கமும் மனைவிமக்கள் ஒருபக்கமுமாகப் பிரிந்து என்றுமாம். "வேறாகி வீழ்வர்தாங் கொண்ட, மனையாளை மாற்றார் கொள" என்ற நாலடியையுங் காண்க. வெய்ய பினாகம்-உடையவன் தன்மை உடைமைமே லேற்றிக் கூறப் பட்டது. "சினக்கதிர்வேல்" என்றாற்போல. "வெம்மை வேண்டல்" என்ப வாகலின், வெய்ய என்பதற்கு விரும்பத்தக்க என்றுரைத்தலுமாம். புனகத்து இருக்கு ஐயனை எனப்பிரித்து - புன்னாக விருக்ஷத்தி னடியிலே யெழுந்தருளி யிருக்கின்ற வேதமுதல்வனாகிய தலைவனை யென்று கோடலும் அமையும். இருக்கு - வேதம். புனகம் - புன்னாகம்; தொகுத்தல். (௩௬)

போற்றித் தொழுதெழுந்தாற் பொல்லாப் பிணியனைத்தும்
பாற்றி மனமே! பதந்தருவான்—சீற்றத்
தழனாக வேங்கைக்குக் காலாட்டைத் தந்த
நிழனாகத் தெம்மான் நினைந்து.

(இ - ள்.) நினைந்து - தியானித்து, போற்றி - துதிசெய்து, தொழுது எழுந்தால் - வணங்கி எழுந்தால், மனமே - எனது நெஞ்சே!, பொல்லா பிணி அனைத்தும் பாற்றி - கொடிய உனது நோய்களை யெல்லாம் பரிகரித்து, சீற்றம் - கோபத்தோடு கூடிய, தழல் நாகம் - விஷத்தையுடைய பாம்புக்கும், வேங்கைக்கு - கோபத்தோடு கூடிய புலிக்கும், கால் ஆட்டை - பதமெடுத்தாடும் திருநடக்காட்சியை, தந்த - தந்தருளிய, நிழல் நாகத்து எம்மான் - குளிர்ந்த நிழலையுடைய புன்னாக விருக்ஷத்தினடியிலே யெழுந்தருளி யிருக்கின்ற எமது பெருமானாகிய திருமேனி நாதன், பதம் தருவான் - உனக்கும் தனது ஸ்ரீ குஞ்சிதபாதத்தைத் தந்தருளுவான்; (எ - று.)

மனம் வாக்கு காயம் என்னுந் திரிகரணத்தாலும் வணங்குதல் என்பார், 'நினைந்து, போற்றி, தொழுதெழுந்தால்' என்றார். சீற்றத்து அழல் நாகம் எனவும் பிரிக்கலாம். அப்போது, ஆட்டை என்பது மோனையாம். தழல் - நெருப்புமாம். "நச்சுநாகத்தி னாரழற் சீற்றத்தன்" என்றார் சிந்தாமணி யாரும். நாகம் என்றது பதஞ்சலியை. வேங்கை என்றது வியாக்ரபாதரை. சீற்றத்தை வேங்கையோடுங் கூட்டியுரைக்க. மனமே! நாகத்துக்குக் காற்றையும் புலிக்கு ஆட்டையும் தந்து அவற்றின் பசிப்பிணியைத் தீர்த்தருளியவனாகிய திருமேனிநாதன் உனக்கும் உணவைத் தந்து உனது பசிப்பிணியையுந் தீர்த்தருளுவான், நீ திரிகரணமும் ஒத்து அவனை விதிப்படி வணங்குவையாயின், என இதற்கு மற்றொரு பொருளுந் தோன்றுமாறு காண்க. கால் -



காற்று. பதம் - உணவு; இது, இப்பொருள்பட வருதலை, "பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்" என்ற புறப்பாட்டினானு மறிக. கௌதம முனிவரின் பொருட்டுத் திருநடஞ் செய்ததை யுட்கொண்டு ஸ்ரீ பூமி நாதனை, 'தழனாக வேங்கைக்குக் காலாட்டைத் தந்த, நிழனாகத் தெம்மான்' எனக் கூறினார். "சீதமொன்று கங்கை தங்கு செஞ்ச டைப்பு ராதனன், மாத மொன்று தனுவி னாதி ரைத்தி னத்தின் மருவியே, பேத மொன்றி லாது தில்லை மன்றி லாடு பெட்பெனப், பாத மொன்று தூக்கி நின்று பரசு பாணி யாடினான்" என்ற புராணச் செய்யுளையுங் காண்க. (௩௭)

நினையாரும் பாவகரி நீணதியிற் சென்னி
நனையாரும் வெண்ணீறு நாதா!—புனையாரும்
சூலத் தலமருவார் சூழார் தொழாதாரும்
ஞாலத் தலமருவார் நைந்து.

(இ - ள்.) நாதா - பூமிநாதனே!, நினையாரும் - உன்னைத் தியானியாதவர்களும், பாவகரி நீள் நதியில் - பாவகரி யென்னும் நீண்ட நதியிலே, சென்னி நனையாரும் - தலையை நனையாதவர்களும், வெண் நீறு - வெள்ளிய திருநீற்றை, புனையாரும் - மெய்யில் அணியாதவர்களும், சூலத் தலம் - சூலபுரம் என்னுந் திருநாமத்தையுடைய திருச்சுழியை, மருவார் - சேராதவர்களும், சூழார் - வலமாகச் சூழாதவர்களும், தொழாதாரும் - தொழாதவர்களும், ஞாலத்து - பூமியிலே, நைந்து - மனம் மெலிந்து, அலமருவார் - அலைபவர்களே யாவர்; (எ - று.)

நினையாரும் பாவகரி - நின்னைப் பொருந்தியதான பாவகரி யென்றலுமாம். ஆர்தல் - பொருந்துதல். தன்னைக் குறித்து அருந்தவம் புரிந்த கவுண்டின்னிய முனிவருக்கு அருள் செய்யக்கருதிப் பூமிநாதன் தன் சடைமுடியிலே திகழும் கங்காநதியிலிருந்து ஓர் சிறிய துளியை வழங்க, அது பெரியதோர் ஆறாய்ப் பெருகிற்றாதலால் இங்ஙனம், 'நினையாரும் பாவகரி' என்றார். சகலவித பாவங்களையும் போக்குதல் பற்றிப், 'பாவகரி' எனப் பேர் பெற்றது. கவுண்டின்னிய முனிவர் பொருட்டாக வெளிப்பட்டமையின், 'கவுண்டின்னிய நதி' என்றுங் கூறப்படும். இதனை, "சகமிசை யெவரும் புகலுதற் கரிய தகைமையிற் றவமியற் றியதால், மகிழ்தர விவ்வா றழைத்தன முனது பொருட்டினின் வந்தகா ரணத்தால், பகர்தரு கவுண்டின் னியநதி யென்று நாமமிப் புனல்படி வோர்க்குச், சகலபா வமும்போ மாதலாற் பாவகரி யெனும் பெயர்தரித் தனமால்" என்ற புராணச் செய்யுளாலு மறிக. நின்னை யொத்த பாவகரி யென்றுரைத்தலு மமையும். அலமருவார் - அலமா, பகுதி.

நைந்து புவனேசன் நாமத் திருவெழுத்தோர்
ஐந்து முறையி லறிந்தோதி—உய்ந்து
புனிதராய்ப் போகாத புல்லறிவின் மாக்கள்
மனிதராய் ஏன்பிறந்தார் வந்து.

(இ - ள்.) நைந்து - மனம் நைந்து, புவனேசன் - பூமிநாதனுடைய, நாமம் - திருநாமமாகிய, திரு எழுத்து ஓர் ஐந்தும் - ஒப்பற்றதாகிய திருவெழுத்துக்கள் ஐந்தினையும், முறையில் - விதிப்படி, அறிந்து - ஆசாரியர் மூலமாக அறிந்துகொண்டு, ஓதி - அவற்றை இடைவிடாது ஜபித்து, புனிதராய் - பரிசுத்தர்களாய், உய்ந்து போகாத - உஜ்ஜீவித்துப் போகாத, புல் அறிவின் மாக்கள் - அற்பமாகிய அறிவினையுடைய விலங்குபோன்றவர்கள், ஏன் மனிதராய் வந்து பிறந்தார் - எதற்காக மனிதர்களாக இப்பூமியில் வந்து பிறந்தார்களோ தெரியவில்லை; (எ - று.)

நாமம் - பெருமையுமாம். முறையில் அறிந்து - திருமுறைகளிலே விசாரித்தறிந்து; இனி வேதத்தின் சுருக்கு என்று தெரிந்து என்றலுமாம். "அஞ்செழுத்துக் கண்டீர், அருமறைக ளாவனவும்" என்றார் பெரியாரும். ஐயறிவேயுடைமையின் புல்லறிவின் மாக்கள் என்றார். அறிவில்லாத புல்லிய மாக்கள் என்றலும் பொருந்தும். (௩௯)

வந்தித்து நெஞ்சே! வயலூர்ப் பெருமானைச்
சிந்தித்துத் தேறித் தெளிந்துணர்ந்து—பந்தித்த
பாத கமலத்தைப் பற்றறுக்கும் பற்றற்றான்
பாத கமலத்தைப் பற்று.

(இ - ள்.) நெஞ்சே - மனமே!, வயலூர்ப் பெருமானை - திருவயலூரென்னுந் திருச்சுழியலி லெழுந்தருளி யிருக்கின்ற திருமேனிப் பெருமானை, வந்தித்து - வந்தனஞ் செய்து, சிந்தித்து - தியானித்து, தேறித் தெளிந்து உணர்ந்து - (அவனே பரம்பொரு ளென்பதாக வேதசாஸ்திர வாயிலாக) ஆராய்ந்து நிச்சயித்துத் தெரிந்து, பந்தித்த - ஆன்மாவைத் தளைப்படுத்திய, பாதக மலத்தை - பாதகமான மலங்களை, பற்று அறுக்கும் - வேர்ப்பற்றற அறுக்கவல்ல, பற்றற்றான் - பற்றற்றவனாகிய அப்பெருமானது, பாத கமலத்தை - திருவடித் தாமரைகளை, பற்று - தஞ்சமாகப் பற்றிக்கொள்; (எ-று.)

'வேண்டுதல் வேண்டாமையிலான்' ஆகலால், 'பற்றற்றான்' என்றார். "பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப், பற்றுக பற்று விடற்கு" என்ற பொதுமறைக் கருத்தைப் பின்னிரண்டடிகளும் உட்கொண்டிருத்தல் பாராட்டத்தக்கது. (௪0)

பற்றாது செல்லப் படர்க்குரைக்கும் பாவகரி
வற்றாது சூழ்வயலூர் வாழ்பவரைச்—சுற்றாது
கார்க்கண்டன் பத்தரைநங் கைக்கயிறென் றோர்காலன்
மார்க்கண்டன் சீர்த்தியையுள் வைத்து.

(இ - ள்.) கார் கண்டன் - கரிய ஸ்ரீகண்டத்தை யுடையவனான சிவபெருமானது, பத்தரை - அன்பர்களை, நம் கை கயிறு - நமது கையிடத்து உள்ளதாகிய பாசமானது, சுற்றாது - வளைத்தல் செய்யாது, என்று ஓர் காலன் - என்று அனுபவவாயிலாகத் தெரிந்துள்ள யமன், மார்க்கண்டன் - மார்க்கண்டேயரது, சீர்த்தியை - பெரிய பிரபாவத்தை, உள் வைத்து - மறந்துவிடாது மனத்தின்கண் வைத்தவனாய், படர்க்கு - யுத்தவீரர்களான தனது கிங்கரர்களுக்கு, பாவகரி - பாவகரி யென்னும் நதியானது, வற்றாது - எந்நாளும் நீர் வற்றாமல், சூழ் - சூழ்ந்து செல்லுகின்ற, வயலூர் வாழ்பவரை - வயலூர் என்னுந் திருச்சுழியலிலே நித்யவாஸஞ் செய்கின்ற அடியார்களை, பற்றாது செல்ல - பற்றாமல் அப்பால் தொழுது செல்லும்படி, உரைக்கும் - சொல்லுவான்; (எ - று.)

படர் - யுத்தவீரர்; "காலத்தாற் கால படரால்" என்றார் பிறரும். ஓர்தல் - அறிதல். சீர்த்தி - மிக்கபுகழ். பாவகரிநதியில் ஸ்நானஞ் செய்துகொண்டு வயலூரில் வாழ்கின்றவர்களுக்கு யமவாதனை இல்லை யென்பதாம். 'எம்மானை வலங்கொள் வாரென' வருதல்பற்றி, 'பாவகரி சூழ்வயலூர்' என்றார். 'வயலூர் வாழ்பவரை' எனப் பொதுப்படக் கூறினார், அவ்வூரில் வாழ்பவர் யாவருமே அமரர்களாதல் பற்றி. "சாரல் வெள்ளியங் கைலையே பன்னக சயிலம், ஆர நீர்க்கவுண் டின்னிய நதிகங்கை யாகும், நார வேணியெம் பரமனே சுழியற்கு நாதன், ஊரில் வாழ்பல மனிதர்கள் யாவருமும்பர்" என்ற தலபுராணச் செய்யுளையுங் காண்க. இச்செய்யுள், "தாம்பட்ட தொன்று மறியார்கொல் சார்வரே, காம்புற்ற செங்கநற் கயிலைக் கோன் - பாம்புற்ற, ஆரத்தார் பத்தர்க் கருகணையார் காலனார், தூரத்தே போவார் தொழுது," "தொழுது நமனுந்தன் றூதுவர்க்குச் சொல்லும், வழுவில்சீர்க் காளத்தி மன்னன் - பழுதிலாப், பத்தர்களைக் கண்டாற் பணிந்தகலப் போமின்கள், எத்தனையுஞ் சேய்த்தாக வென்று" என்ற செய்யுட்களின் தாத்பர்யத்தை உட்கொண்டிருத்தல் காண்க. "திறம்பேன்மின் கண்டீர் திருவடிதன் னாமம், மறந்தும் புறந்தொழா மாந்தர் - இறைஞ்சியுஞ், சாதுவராய்ப் போமின்க ளென்றான் நமனுந்தன், தூதுவரைக் கூவிச் செவிக்கு" என்றார் பிறரும். (௪௧)

வைத்த நுதற்கண் மழுவாளி பூமீசன்
கைத்த கடுவைக் கனிபோலத்—துய்த்த
கருங்கண்ட வாழ்வே கடவுளர்கள் முன்னம்
வருங்கண்டம் போய்மகிழும் வாழ்வு.

(இ - ள்.) கடவுளர்கள் - தேவர்களான அமரர்கள், முன்னம் - முன்பு [திருப்பாற்கடல் கடைந்தகாலத்தில்], வரும் - தங்களுக்கு நேர்ந்ததான, கண்டம் போய் - விபத்தானது நீங்கி, மகிழும் - மகிழ்தற்குக் காரணமான, வாழ்வு - வாழ்க்கையானது, வைத்த நுதல் கண் - நெற்றியிடத்தே வைத்த கண்ணை யுடையவனும், மழுவாளி - கையிடத்தே வைத்த மழுவையுடையவனுமாகிய, பூமீசன் - பூமிநாதனது, கைத்த - கைத்துள்ள, கடுவை - ஹாலாஹலம் என்னும் விஷத்தை, கனிபோல - மதுரமான நாவற்பழத்தைப்

போல, துய்த்த - நுகர்ந்தருளிய, கருங் கண்டம் - கரிய ஸ்ரீ கண்டத்தால் வந்த, வாழ்வே - வாழ்வேயாம்; (எ - று.)

'ஏ, சம்போ! அமரர்க ளெல்லாரும் பயந்து ஓடும்படியாக அக்னிச் சுவாலையை வீசிக்கொண்டெழுந்த கொடிய அந்தத் தீவிஷமானது முன்னம் எப்படி உம்மால் பார்க்கப்பட்டது? கையில் எப்படி வைக்கப்பட்டது?' என்று ஸ்ரீ சங்கரர் சிவானந்தலகரியில் எழுப்பிய வினாவிற்கு, நுதற்கண் உடையவ ராகையாலே பார்த்தார், மழுவாளியாகையாலே கையில் வைத்தார் என்று உத்தர முரைப்பார் போல, 'வைத்த நுதற்கண் மழுவாளி' என்றார். கனி என்பதற்கு இடம் நோக்கிக் - கருமையும், மாதுர்யமும், சீதளமு முடைய தான நாவற்கனி யெனப் பொருளுரைக்கப்பட்டது. துய்த்த கரும் கண்டம் - துய்த்ததனால் வந்த கருமையையுடைய கண்டம். இச் செய்யுளின் தாத்பர்யத்தை, "கற்பங் கடந்து கடவுளராய் வாழ்வீரோ, பொற்பங் கயன்முதலாம் புத்தேளிர் - அற்புதமே, தெவ்வடக்கு சூலத்தார் தென்கருவை நாதனார், வெவ்விடத்தை யுண்ணு விடின்," "மலைவரல்போல் வானவருந் தானவரு மெல்லாம், அலைகடல்வாய் நஞ்செழல்கண் டஞ்சி - நிலைதளரக், கண்டமை யாற் றண்சாரற் காளத்தி யாள்வார்நஞ், சுண்டமையா லுண்டிவ் வுலகு" என்ற முன்னோரது செய்யுட்களிலுங் காண்க. கண்டம் - தத்து. (௪௨)

வாழலாம் வாமனமே! வன்மைப் பழவினையைப்
போழலாம் பூமீசன் பொன்னடியைத்—தாழலாம்
மெள்ளத் திருச்சுழியில் மேவிற் சிவானந்த
வெள்ளத் திருச்சுழியில் வீழ்ந்து.

(இ - ள்) மெள்ள - மெதுவாக, திருச்சுழியில் மேவில் - திருச்சுழியென்னும் தலத்திலே சென்று சேர்வாயாயின், வன்மை - வலிமை பொருந்தியதாகிய, பழ வினையை-தீய பழவினைகளாகிய மலைகளை, போழலாம் - பிளக்கலாம்; பூமீசன் பொன் அடியை - பூமிநாதனது அழகிய திருவடித்தாமரைகளை, தாழலாம் - வணங்கலாம்; சிவானந்த வெள்ளத் திருச்சுழியில் - சிவானந்த மாகிய வெள்ளத்தினது அழகிய சுழிகளிலே, வீழ்ந்து - குதித்து, வாழலாம் - பேரின்ப வாழ்வை யடையலாம்; (ஆகையால்) மனமே - நெஞ்சமே!, வா - நீ அத்தலத்திற்கு வருவாயாக; (எ - று.)

சிவானந்த வெள்ளத்திலே வீழ்ந்து வாழலாம், வா மனமே எனமுடிக்க. மெள்ள - மெல்ல. விரைந்து செல்லத்துணியாத மடநெஞ்ச மாகலால் 'மெள்ளமேவின்' என்றார். (௪௩)

வீழ்த்துக வெந்நரகில் வீழ்த்தா தடியேனை
வாழ்த்துக வன்றி மறுசுழியில்—ஆழ்த்துக
என்ணுவதே செய்க எழிற்சுழிய லெந்தாயைக்
கண்ணுவதே யென்றன் கடன்.



(இ - ள்.) வெம் நரகில் - கொடிய நரகத்தில், அடியேனை வீழ்த்துக - அடியேனை விழச்செய்க; வீழ்த்தாது - வீழ்த்தாமல், வாழ்த்துக - (அடியேனை) வாழச்செய்க; அன்றி - அதல்லாமல், மறுசுழியில் - மறுபிறவியாகிய சுழியின்கண், ஆழ்த்துக - அழுந்தும்படி செய்க; எண்ணுவதே செய்க - திருவுள்ளத்தி லெண்ணியபடியே செய்க; (நீசெய்வதை யான் அறியவேண்டிய அவசியமில்லை; அறியவும் அசக்தன்) எழில் சுழியல் எந்தாயை - அழகிய திருச்சுழியலிலே யெழுந்தருளியிருக்கின்ற எந்தையாகிய நின்னை, கண்ணுவதே - எப்போதுந் தியானித்துக்கொண்டு இருப்பதே, என்றன் கடன் - எனது கடமையாம்; (எ - று.)

வாழ்த்துதல் - வாழச்செய்தல்; வாழ் என்றதன் பிறவினை. கண்ணுதல் - கருதுதல். இந்தச்செய்யுளை, "வாழ்த்துவாய் வாழ்த்தா தொழிவாய் மறுசுழியிட், டாழ்த்துவா யஃதறிவாய் நீயன்றே - யாழ்த்தகைய, வண்டார் பொழிற்கயிலை வாழ்கென் றிருப்பதே, கண்டா யடியேன் கடன்" என்ற பெரியாரது செய்யுளோடு ஒப்பு நோக்குக. (௪௪)

கடல்கொண்ட மால்போற் கவின்சுழியற் சோலை
மடல்கொண்ட மாமலர்த்தேன் வாரக்—கடல்கொண்ட
கண்மாரி சிந்திக் கலங்குவதென் காரிகைநீ
விண்மாரி யென்றுண் மெலிந்து.

(இ - ள்.) கடல்கொண்ட - கடல்நீரைத் தன்னிடத்தே கொண்ட, மால் போல் - மேகத்தைப்போல, கவின் - ஒளிராநின்ற, சுழியல் சோலை - திருச்சுழியலிலுள்ள சோலையானது, மடல் கொண்ட மா மலர்த்தேன் வார - தன்னிடத்தேயுள்ள இதழ்விரிந்த அழகிய மலர்களினின்றும் மிகுதியாகத் தேனைச் சொரியாநிற்க, விண்மாரி யென்று - (அதனை) மேகங்கள் மழையைப் பொழிகின்றன வென்பதாக மாறுபடக் கொண்டு, உள் மெலிந்து - மனம் மெலிந்து, காரிகை நீ - அழகு மயமான நீ, கடல்கொண்ட கண்மாரி சிந்திக் கலங்குவதென் - கடல்போன்ற நெடிய கண்களினின்று மழைபோல நீரைச் சொரிந்து வாடுதற்குக் காரணமென்ன? (எ - று.)

'கார்காலத்திலே மீண்டு வருகின்றேன்' என்பதாகச் சொல்லிக் காலங் குறித்துப் பிரிந்துசென்ற தலைமகன் அக் கார்காலம் வந்த அளவிலும் தான் வாராதொழிய, அக் காலவரவை நோக்கி வருந்துகிற தலைவியைத் தோழி, 'இது அவன் சொல்லிப்போன கார்காலம் வந்ததன்று: மேகம்போற் கரியனவாகிய சோலைகள் மதுவைச் சொரியாநின்றனகாண்' என்று காலத்தை மாறுபடக்கூறி ஆற்றுவித்தாள். இத்துறை, திருக்கோவையாரில், 'கால மறைத்துரைத்தல்' என்றும், தஞ்சைவாணன் கோவையில், 'இகுளைவம் பென்றல்' என்றும், தணிகைப் புராணத்துக் களவுப் படலத்தில், 'ஆயிடைத் தோழி யழிந்தியற் பழித்தல்' என்றுங் கூறப்பட்டுள்ளது. 'பருவங் குறிக்கப்பட்ட தலைமகள் பருவ வரவின்கண் ஆற்றாளாகக் கார்ப்பருவம்

வரும்வழி, அவர் பாணிப்பாரல்லர் வந்தார் வாராநின்றார் வருவர் எனவும், இதனைப் பருவமன்றென்றும் பழித்து, அதனைப் பருவமே யெனக் கருதிறை யேல் அவராற் குறிக்கப்பட்ட பருவமன்று, என்னை ?— அவர் பொய்யுரை யுரையாராகலான், யாம் தெளியே மெனவும், காலங்காட்டியும் சகுனஞ் சொல்லி யாழப்பண்ணியும் எல்லாப் பாசுரத்தானும் தலைமகளை யாற்று விக்கு மென்றவாறு; தலைமகன்றன்னை அன்பிலன் கொடியன் எனவும், இத்தொடக்கத்தன வெல்லாஞ் சொல்லியும் ஆற்றுவிக்கும்; அவற்றுள், பருவ வரவின்கண் ஆற்றாளாய தலைமகளை ஆற்றுவித்தற்குப் படைத்துமொழிந்து பருவ மன்றென்றதற்குச் செய்யுள்' என்ற இறையனாரகப்பொரு ளுரையை யுங் காண்க. "பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த, நன்மை பயக்கு மெனின்" என்பவாதலால், இது பொய்ம்மைக் குற்றத்தின்பாற் படாது; அவ்விடத்து, 'குற்றந் தீர்ந்த நன்மை தருதலாவது - பெருந்தீக்கையாயினும் மரணத்தையாயினும் அடைய நின்றதோர் உயிர் தான் கூறுஞ் சொற்களின் பொய்ம்மையால் அத்துன்பத்தினின்று நீங்கி இன்ப மடைதல்' என்றபடி, இங்குப் பிரிவாற்றாமையால் தலைமகளுக்கு உண்டாகும் அபாயத்தைப் புனைந் துரையால் ஒழித்தவாறு காண்க. கடல்கொண்ட மால்போல் - கடலைப் பள்ளியிடமாகக் கொண்ட திருமால்போல என்றலுமாம். கவின்சுழியற் சோலை கடல்கொண்ட மால்போல் தேன்வார என்றியைத் துரைப்பினு மமையும். காரிகை - அழகுடையாளுமாம். (௪௫)

மெல்லியல் பாகன் விழுச்சுழிய லெங்கோமான்
சொல்லியல் கொண்டு துயருறுவேன் —பல்லியின்
சொல்லருளின் சொல்லாய்த் துணிவுற் றிருந்தேனால்
நல்லருளின் மானே நயந்து.

(இ - ள்.) மெல்லியல் பாகன் - மென்மையான தன்மையை யுடைய துணைமாலைத் தேவியாரை இடதுபாகமாக வுடையவரும், விழுச் சுழியல் - மேன்மை பொருந்திய திருச்சுழியல் என்னுந் திருப்பதியி லெழுந்தருளி யிருப்பவருமான, எம் கோமான் - எமது தலைவரது, சொல் இயல் - சொல் லின் தன்மையை, கொண்டு - உறுதியாகக் கொண்டு, துயர் உறுவேன் - ஆற்றாமை மிகுதியினாலே துயரமுறுவேனாகிய யான், பல்லியின் சொல் - பல்லிக் குட்டியினது சொல்லை, அருளின் சொல்லாய் - திருவருளின் சொல் லாக, துணிவுற்று - துணிதலடைந்து, நல் அருளின் மானே - நல்ல அருளினை யுடைய மான்போன்றவளே!, நயந்து - விரும்பி, இருந்தேன் - ஆறியிருந் தேன்; (எ - று.) ஆல் - அசை.

தலைவன் பொருள்வயிற் பிரிந்துசென்ற காலத்து அவன் பிரிவை யாற் றாது வருந்துகிற தலைவி, தன் அருகிலே பல்லி நன்றாகிய இடத்தில் அவன் வரவுக்குப் பொருந்தக் குரல் செய்ததை யறிந்து, அந்த நன்னிமித்தத்தால் தலைவன் விரைவில் வருவானென்று துணிந்து ஒரு சிறிது ஆறியிருக்க, அத் தலைவி யாற்றாமையைக் கண்டு தானும் ஆற்றாத தோழி அத் தன்மையைக்



கண்டு, "நீ இங்ஙனே ஆறியிருத்தல், அவன் முன்பு, 'பிரியேன், பிரியில் தரியேன், விரைவில் வருவேன்' என்பவை முதலாகச் சொன்ன சொற்க ளைப் பாராட்டியோ? அன்றி, வேறு காரணத்தாலோ?" என்று வினவ, அதற்குத் தலைவி தான் ஆறியிருத்தற்குக் காரணங் கூறியது, இது. நன்னி மித்தங்கண்டு தான் ஆறியிருத்தலைத் தலைவி தோழிக்குக் கூறல் என்ப. சொல்லியல் என்றது பிரியேன், பிரியில் தரியேன், விரைவில் வருவேன் என்று கூறிய சொற்களின் தன்மையை. வரவுக்குப் பொருந்த நல்ல இடத் தில் ஒலி செய்ததால், 'அருளின் சொல்' என்றாள். இருத்தல் - ஆறியிருத் தல்; இல்லிலேயிருத்தலுமாம். நல்லருளின் மானே என்றது தோழியை. வேறொருத்தியினிடத்து வேட்கை யுடையவன் என்பாள், 'மெல்லியல்பாகன்' என்றாள். பல்லியின் சொல் நிமித்தமாகக் கொள்ளப்படுதல் பிரசித்தம். கலித்தொகை, பாலைக்கலியில், "இனை நல முடைய கானஞ் சென்றோர், புனை நலம் வாட்டுந ரல்லர் மனைவயிற், பல்லியும் பாங்கொத் திசைத்தன, நல் லெழி லுண்கணு மாடுமா லிடனே" என்று நிமித்தங்கூறித் தலைவி தோழியை ஆற்றுவித்தல் காண்க. பிற சான்றோரும், "கொட்டாய் பல்லிக் குட்டி குடமாடி யுலகளந்த, மட்டார் பூங்குழன் மாதவனைவரக், கொட்டாய் பல் லிக் குட்டி" எனத் தலைவி தலைமகன் வரவு கூறும்படி பல்லியை வேண்டிய தாகப் பாடினமை காண்க. (௪௬)

நயக்கும் செயலும் நவில்வனவும் நாடின்
வியக்கும் வளநாக வெற்பர்—பயக்கும்
பொருள்செய்வான் கற்ற கொடியனகாண் பூவாய்!
அருள்செய்வா னில்லை யவை.

(இ - ள்.) வியக்கும் - கண்டவர்கள் ஆச்சரியப்படத்தக்க, வளம் - வளத் தினையுடைய, நாக வெற்பர் - பன்னகசயிலத்தை யுடையவரான தலைவர், நயக்கும் - விரும்பிச் செய்கின்றவையான, செயலும் - செய்கைகளும், நவில் வனவும் - சொல்லுகின்றவையான வார்த்தைகளும், நாடின் - ஆராய்ந்து பார்க்குமிடத்து, பயக்கும் - (அறத்தையும் இன்பத்தையும்) கொடுக்கவல்ல, பொருள் செய்வான் - பொருளை ஈட்டும் பொருட்டு, கற்ற - (புதிதாகப்) பயின்ற, கொடியனகாண் - கொடுஞ்செயல்களென்று தெரிந்துகொள்; பூவாய் - பூவையை யொப்பாய்!, அவை - அவ்வுபசாரச் செய்கைகள், அருள் செய் வான் - எனக்கு அருள் செய்யும்பொருட்டு, இல்லை - செய்யப்பட்டன வில்லை; (எ - று.)

இது, தலைவன் பொருள்வயிற் பிரிதல் குறிப்பாலறிந்த தலைவி தோழிக் குக் கூறல் என்னுந் துறையின்பாற்படும். பொருளீட்டுதற் பொருட்டுத் தலை மகளைப் பிரியக் கருதிய தலைமகன் அப் பிரிவுக்காலத்தில் அவள் நினைத்து ஆறியிருத்தற்பொருட்டு அவள் பக்கல் சில பணிவான செய்கைகளைப் புரி தலும் சில பணிவான சொற்களைச் சொல்லுதலுஞ் செய்ய, அதுநோக்கி, தலைமகள், 'இதற்குமுன்பு கண்டுகேட்டறியாத இச்செய்கைகளையும் வார்த்

தைகளையும் ஆராய்ந்து பார்க்கில், இவை பொய்யாகத் தோன்றுகின்றன; இங்ஙனம் வரம்பு கடந்தவற்றைச் செய்தற்கு ஒரு கருத்து உளதாதல் வேண்டும்: அது, பொருளீட்டுதற் பொருட்டு எம்மைப் பிரிய நினைத்த வன்மையே' என்று கூறுகிறாள். 'தலைவன்கண் நிகழ்ந்த மிக்க தலையளி, வஞ்சமென்று தலைவி யுட்கொண்டு பிரியுங்கொலென நினைத்தற்கு நிமித்தமாயிற்று' என்ற தொல்காப்பிய உரையும், "முள்ளுறழ் முளையெயிற் றமுதூறுந் தீநீரைக், கள்ளினும் மகிழ்செய்யு மெனவுரைத்தும் அமையாரென், ஒள்ளிழை திருத்துவர் காதலர் மற்றவர், உள்ளுவ தெவன்கொல் அறியேனென்னும்", "கழிபெரு நல்கல் ஒன்று உடைத்து" என்ற பாலைக்கலியும் இங்கு அறியத்தக்கன. இதற்கு, "நினைந்தது நினைத்தற் கேதுவு மாகும்" என்பது விதி. 'பொருள்வயிற் பிரிவு என்பது,—பொருளீட்டுதல் காரணமாகப் பிரியும் பிரிவு. எனின், முன் பொருளிலனும்; ஆகவே, எள்ளுநர்ப் பணித்தலும் இரந்தோர்க் கீதலும், நள்ளுநர் நாட்டலும் நயவா ரொறுத்தலும் என்னும் இவையெல்லாம் பொருட்குறைபாடு உடையார்க்கு நிகழாமையான், இக்குறைபாடெல்லா முடையனும்: அவை உடையானது பொருவிறப்பு என்னையோ வெனின்,—பொருளிலனாய்ப் பிரியு மென்பதன்று; தன் முதுகுரவராற் படைக்கப்பட்ட பலவேறு வகைப்பட்ட பொருள்களெல்லாங் கிடக்கதுமன்: அது கொண்டு துய்ப்பது ஆண்மைத்தன்மை யன்றெனத் தனது தாளாற்றலால் படைத்த பொருள்கொண்டு வழங்கி வாழ்தற்குப் பிரியு மென்பது; அல்லதூஉம், தேவகாரியமும் பிதிருகாரியமும் தனது தாளாற்றலால் படைத்த பொருளாற்செயத் தனக்குப் பயன் படுவன; என்னை?—தாயப்பொருளாற் செய்தது தேவரும் பிதிரரும் இன்புறார்: ஆகலான், அவர்களையும் இன்புறுத்தற்குப் பிரியுமெனக் கொள்க' என்ற தஞ்சைவாணன்கோவை யுரையாலும், 'பொருள்வயிற் பிரிதலென்பது,—குரவர்களாற் படைக்கப்பட்ட பொருள்கொண்டு இல்லறஞ்செய்தால் அதனான்வரும் பயன் அவர்க்கு ஆம் அத்தனையல்லது தமக்கு ஆகாமையால், தமது பொருள்கொண்டு இல்லறஞ்செய்தற்குப் பொருள்தேடப்பிரியாநிற்றல்' என்ற திருக்கோவையாருரையாலும், செல்வம் நிறைந்த தலைமகன் பொருள்வயிற்பிரிதற்குக் காரணம் அறிக. நயக்கும் செயல் - காலைப் பிடிப்பது, கையைப்பிடிப்பது, கும்பிடுவது, அஞ்சலிசெய்வது மனந்துமொறுவது முதலியன. நவில்வன - பிரியேன், பிரியில் தரியேன் என்று கூறுதல முதலியன. "இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும், வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு" என்றபடி மழைக்காலத்திலே உட்கொண்ட நீரை வெயிற்காலத்தில் வெளிப்படுத்துந் தன்மை யுடையதாய் வாய்ந்த மலையின் வளத்தையுடையார் என்பாள், 'வியக்கும் வளநாக வெற்பர்' என்றாள். மதுராபுரியை யழிக்கக்கருதிச் சமணர்கள் மந்திரவாதஞ்செய்து வரவிடுத்த நாகத்தைத் தத்தன என்னும் பாண்டியன் பகழியால் அறுத்துக்கொன்றிட்ட காலத்தில் அதன் வாலுனிவந்து வீழ்ந்த இடமாதல்பற்றிப், 'பன்னக சயிலம்' எனப் பேர்பெற்றது. இதனை, "மடலவிழ் கடுக்கைப் பூமி நாயகன் கோயின் மாடே, குடதிசை யதனிற் றோன்றி விளக்குமப் பெரிய குன்றம், விடவர வுருப்பி லொன்று வீழ்ந்ததால் விண்ணோர் போற்றப், படிமிசை யதற்கு நாமம் பன்னக கிரியென் பாரே" என்ற புராணச்செய்யுளாலுமறிக. 'நாகவெற்பர்' என்றது, வன்னெஞ்சர் என்ற குறிப்பு; குறிஞ்சி நிலத்தலைவர் என்பாள், 'நாகவெற்பர்' எனக்கூறினளுமாம். குறிஞ்சி - கூடுமிடம். கூடியே யிருக்கவேண்டியிருக்கப் பிரிய நினைக்கக் கூடுமோ வென்னுங் கருத்தாலே, 'நாகவெற்பர்' என்றதென்க. 'கற்ற கொடியனகாண்' என்றதனால், பொருளின் பொருட்டுப் பிரியக் கருதிய இவ்வன்மை இவர்க்கு இயற்கைக்குணம் அன்று; எவ்விடத்தோ புதிதாகக் கற்றுவந்த செயற்கைக்குணம் என்றவாறு. "அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து, தீதின்றி வந்த பொருள்" என்றபடி அறனையும் இன்பத்தையும் ஈயுந்தன்மையையுடைய பொருள், 'பயக்கும் பொருள்' என்று விசேஷித்துக் கூறப்பட்டது. 'செய்கபொருளை' என்றாற்போலப், 'பொருள்செய்வான்' என்றார். பூவாய் எனவிளித்தது தோழியை. முன்பு தலைமகன் தன்னைநோக்கி, 'நீயே பொருள்' என்றும், 'எனக்கு இனிப்பெறவேண்டும் பேறுண்டோ?' என்றும் உபசாரமாகக் கூறினவை இப்பொழுது பொருள்செய்யச் செல்லக்கருதியதனாற் பொய்யாகிற தன்மையை, 'பொருள்செய்வான் கற்ற கொடியன காண்' என்றதனாற் கூறிப் பரிகசித்தபடி. செய்வான் - வான் விகுதிபெற்ற எதிர்கால வினையெச்சம். (சஎ)



அவையுந் தினங்கொல்? அவர்பிறந்தார் கொல்லோ?
சுவையுஞ் சுகந்தமுமாய்த் தோன்றும்—எவையும்
புவனேசன் என்றவனைப் போற்றாத நாளுந்
தவநேச மில்லவருந் தாம்.

(இ - ள்.) சுவையும் - ரஸமும், சுகந்தமும் - நல்ல பரிமளமும், ஆய் - உள்ளவைகளாய், தோன்றும் - காணப்படுகின்ற, எவையும் - எல்லாவிதப் பொருள்களும், புவனேசன் - புவனேசனேயாம், என்று - என்று நிச்சயித்து, அவனை - அப்புவனேசனை, போற்றாத - துதிசெய்யாத, நாள் அவையும் - அந்த நாட்களும், தினம்கொல் - நாட்களாகுமோ?, போற்றாத - அவனைத் துதிசெய்யமாட்டாத, தவநேசம் இல்லவர் அவரும் - மிகுதியாகச் சிவநேசம் இல்லாதவர்களாகிய அவர்களும், பிறந்தார்கொல் ஓ - பிறந்தவர்களாவரோ? (எ - று.)

ரஸவத்தாகவும் கந்தவத்தாகவும் உள்ள சர்வபதார்த்தங்களும் புவனேசனேயாம் என்பதாகத் தெரிந்து, அவனைப் போற்றாதவர்களது வாழ்நாள் நாளாகமாட்டா; அவ்வாறே அவனைப் போற்றாத சிவநேசமில்லாத மனிதர்களும் பிறந்தவர்களாக ஆகமாட்டார்கள் என்பதாம். "சர்வகந்தமும் சர்வரஸமும் அவனே" என்னுஞ் சுருதியை யுட்கொண்டு, 'சுவையுஞ் சுகந்தமுமாய்த் தோன்றும் - எவையும், புவனேசன்' என்றார். தவ - உரிச்சொல்,

"பெரும்பற்றப் புலியூ ரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே" என்ற படி புவனேசனைப் போற்றாத நாள் பிறவாநாள் எனவும் அவனைப்போற்றாத மனிதர்கள் பிறந்தும் பிறவாதவர்களே யெனவுங்கூறினார். "அன்று நான் பிறந்திலேன் பிறந்தபின் மறந்திலேன்" என்றார் பிறரும். இச்செய்யுளை, "அவரும் பிறந்தாராய்ப் போவார்கொ லாவி, யெவருந் தொழுதேத்து மெந்தை - சிவமன்னு, தேக்குவார் சோலைத் திருக்கயிலை யேத்தாதே, போக்குவார் வாளா பொழுது" என்னும் பெரியார் செய்யுளோடு ஒப்பு நோக்குக. நாளும், உம்மை - இசை நிறை. (சஅ)

தானே யயனரியாய்த் தந்தளித்த தாரணியைத்
தானே துடைத்துத் தனுநாதன் — தானே
விரும்பித்தன் கூத்தை விளையாடிப் பெற்றான்
பெரும்பித்தன் என்னும் பெயர்.

(இ - ள்.) தனுநாதன் - திருமேனிநாதனாகிய சிவபெருமான், தானே அயன் அரியாய் - தானே பிரமனாகவுந் திருமாலாகவு மிருந்து, தந்து அளித்த - முன்னந் தான் உண்டாக்கிக் காத்தவைகளாகிய, தாரணியை - அந்த உலகங்களையே, தானே துடைத்து - தானே திரும்ப அரனாகவுமிருந்து அழித்த, தன் கூத்தை - தனது திருநடனத்தை, தானே விரும்பி - தானே சிலாகித்து, விளையாடி - தானே தனியாக விளையாட்டைச்செய்து, பெரும் பித்தன் என்னும் பெயர் - பெரிய பித்தனென்னும் பெயரை, பெற்றான் - அடைந்திட்டான்; (எ - று.)

தான் செய்த தொன்றைத் தானே யழித்தலும், தானே தனியிடத்துக் கூத்தாடலும், தானே தனியாக விளையாடலுமாகிய இப்படிப்பட்ட கேவலம் பித்தனது செய்கைகளையே யுடைமையால் தனுநாதன் பித்தனெனப் பெயர் பெற்றான் என்றார். ஹேதுத் தற்குறிப்பேற்றவணி. காண்பாரெவருமில்லாத சர்வசங்காரகாலம் என்பது தோன்ற, 'தானே தன்கூத்தை விரும்பி' எனவும், இறைவனுக்கு சிருஷ்டி திதி சங்காரமென்னுமிவையும் ஒரு சிறிய திருவிளையாட்டாமென்பது தோன்ற, 'விளையாடி' எனவுங் கூறினார். பிறசான்றோரும், "உலகம் யாவையுந் தாமுள வாக்கலும், நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா, அலகி லாவிளை யாட்டுடை யாரவர், தலைவர்" என முத்தொழிலும் ஈசனுக்கு ஒரு விளையாட்டாகக் கூறியிருத்தல் காண்க. கூத்தைவிளையாடி யென்றுரைத்தலுமாம். (சக)

பெயருந் திருநீறும் பேசியிடிற் பேதை
அயருந் திருமேனிக் காகும் — துயரும்
அசங்காது வேலற் சணுவளவுந் தாய்மீர்!
அசங்காது மற்றிவ் வணங்கு.

(இ - ள்.) பெயரும் - சிவபெருமானது திருநாமங்களையும், பேசி - உச்சரித்து, திருநீறும் - அழகிய விபூதியையும், இடில் - (இவளது) மெய்யிலே



பூசுவீர்களாயின், (அது) பேதை - பேதைப்பருவத்தளாகிய இவளது, அயரும் திருமேனிக்கு - மெலிவடைந்துள்ள அழகிய சரீரமானது முன்போல் வாடாமலிருப்பதற்கு, ஆகும் - செய்யத்தக்க நல்ல பரிகாரமாகும்; தாய்மீர் - தாய்மார்களே!, மற்று - மற்றைப்படி, இவ்வணங்கு - இந்த நோயானது, துயரும் அசம் காது வேலற்கு - வருந்துகின்ற ஆட்டைக் கொல்லுதற்குச் சமைந்து நிற்பவனான இவ்வெறியாட்டாளனுக்கு, அணுவளவும் - கொஞ்சமேனும், அசங்காது - அசையாது; (எ - று.)

களவொழுக்கத்தால் தலைமகளைக்கூடிய தலைமகன் பின்பு அவளைவெளிப்படையாக மணஞ்செய்து கொள்ளும் பொருட்டுப் பொருள் தேடி வருவதற்காக அவளைப் பிரிந்து சென்று வரவுகுறித்தகாலத்தில் வாராது சிறிது நீட்டிக்க, அந்நிலையிலே பிரிவாற்றாது மிகவருந்திய தலைமகளைச் செவிலித்தாய்மார் எதிர்ப்பட்டு அவளது வடிவுவேறுபாட்டை நோக்கி, 'இவள் இங்ஙனம் மெலிதற்குக் காரணம் என்னோ?' என்று கவலைப்பட்டுக் கட்டுவிச்சியைக் குறிகேட்க, அவளும் வீட்டேறிவந்து தன்மரபின்படி யாராய்ந்து, 'இவளுக்கு முருகக்கடவுள் ஆவேசித்த தொழியப் பிறிதொன்று மில்லை' என்றுகூற, அதுகேட்ட செவிலித்தாயர் உடனே வேலனெனப்படுகின்ற வெறியாட்டாளனை யழைப்பித்து அவனைக்கொண்டு, முருகக்கடவுளினது ஆவேசத்திற்குப் பரிகாரமாக வெறியாடுவிக்க முயல, அதனையறிந்த தலைமகள் தனக்குத் தலைமகனால் நேர்ந்த நோயை இயைபில்லாத பிறர் தீர்க்கத் தொடங்குதல் குறித்து மிகவருந்தித் தோழியைவேண்ட, அவளது துன்பத்தின் மெய்க்காரணத்தை யறிந்த தோழி அச்சமயத்திற் செவிலியரைநோக்கிச் சிலகூறி வெறிவிலக்கித் தலைவியினது துன்பத்தின் உண்மைக்காரணத்தை உணர்த்துகிற துறை, இது. பாங்கி வெறிவிலக்கிச் செவிலியர்க்கு அறத்தொடு நிற்றல் என்ப. அயருந் திருமேனிக்கு ஆகும் என்பதற்கு - அயர்தற்குக் காரணமான திருமேனிநாதன் விஷயமாய்க்கொண்ட காதல்நோய்க்கு ஏற்ற பரிகாரமாகும் என மற்றொருபொருளுங்கொள்க. பெயரும் பேசித் திருநீறும் இடில் என இயைதலால், முறை நிரனிறைப் பொருள்கோள்; கிரமாலங்காரம். இந்நோய் தீர்தற்கு எம்பெருமானது திருநாமம் தக்க மந்திரமும், அவனது பிரஸாதமான விபூதி மருந்துமாம் என்க. வியாதிஸ்தர்க்கு உட்செலுத்துவதொருமருந்தும், மேலிற்பூசுவதொரு மருந்தும் உபயோகித்தல்போல, சிவபெருமானது திருநாமங்களை அவள் செவிவழியே உள்ளே புகும்படி உச்சரித்து, புறம்பே அவனது விபூதியைப் பூசுங்கோளென்று பரிகாரங்கூறினாள். முருகக்கடவுளாயின் வெறியாடத்தகும். இவள் கொண்டது திருமேனிக்கடவுளன்றோ. இதற்குப் பெயரைச் சொல்லித் திருநீறு பூசுவதே தகுவது என்பாள், 'பெயருந் திருநீறும் பேசியிடி லயருந் திருமேனிக்காகும்' என்றாளென்க. "மந்திரமாவது நீறு" என்றபடி மந்திரமாகிய விபூதியை ஜபித்து, உள்ளுக்குங் கொடுத்து மேலுக்கும் பூசினால் திருமேனிக்காகும், துயரும் பெயரும் என முடித்தலுமமையும். பெயர்தல் - நீங்குதல். இவ்வாறு பொருளுரைப்பின், திரு

நீறும் என்ற இடத்துள்ள உம்மையை இசைநிறையாகக் கொள்க. அசம்ஆடு. காதுதல் - கொல்லல். இவ்வணங்கு அனுவளவும் அசங்காது அசங்காது எனத் தேற்றமாக இருமுறை அடுக்கிக் கூறினளுமாம். தாய்மீர் - உண்மைக் காரண முறைக்கப்படுதற்கு உரிமையையும், இவளியல்பிற்கு ஏற்றபடி நன்மை செய்யும் வாற்சலியத்தையும் உடையவர்களே! யென்றபடி. இவ்வணங்கு- இப்பெருந்தெய்வம் என்றலு மொன்று. அணங்கு - தெய்வம். "திசைக் கின்ற தேயிவள்நோய் இதுமிக்க பெருந்தெய்வம், இசைப்பின்றி நீரணங் காடு மிளந்தெய்வ மன்றிது" என்றார் பிறரும். மற்று - அசையுமாம். தாய்மீர்-தாய்மார் என்பதன்விளி; இதில், மார்-பலர்பாற்பெயர் விகுதி. (௫௦)

இவ்வணங்கு தானுயிரென் றேழையர்க்காட் பட்டுநெஞ்சே!
அவ்வணங்கு மார்க்கத்தி லாழாமல்—தெவ்வணங்கு
தென்னவனூர் போற்றுந் திரிசூலப் பட்டினத்தென்
முன்னவனூர்க் காட்செய்வான் முந்து.

(இ - ள்.) இ அணங்குதான் - அணங்கினை ஒத்த இம்மங்கைதான், உயிர் - எனக்கு உயிராயிருப்பவள், என்று - எனப்புகழ்ந்து, ஏழையர்க்கு - ஸ்திரீகளுக்கு, ஆட்பட்டு - அடிமையாகி, நெஞ்சே - எனது மனமே!, அவ்வணம் - அம்மாதிரியாக, கு மார்க்கத்தில் - கெட்டவழியிலே, ஆழாமல் - (பிரவேசித்து) ஆழ்ந்து விடாமல், தெவ் வணங்கு - பகைவர்கள் தலைவணங்கும்படியான விறலினையுடைய, தென்னவனூர் - பாண்டியனான சுந்திரசேன மகாராஜர், போற்றும் - வழிபட்டுய்ந்த தலமாகிய, திரிசூலப் பட்டினத்து - திரிசூலபுரத்திலே யெழுந்தருளியிருக்கின்ற, என் முன்னவனூர்க்கு - முதல்வனாகிய எனது திருமேனிப்பெருமானுக்கு, ஆட்செய்வான் - தொண்டுசெய்வதற்கு, முந்து - முற்படு; (எ - று.)

. அணங்கு மார்க்கம் - துன்பந்தருமார்க்கம்; பெண்களைத் தொடர்ந்து செல்லும் மார்க்க மெனினு மமையும். அம்மார்க்கத்தில் ஆழ்தலாவது-பெண் வழிச்சென்று கெடுதல். தெவ் - பகைவர். தென்னவன் - பாண்டியன். ஆட்செய்தல் - பணிவிடை செய்தல். செய்வான் - வான்விகுதிபெற்ற எதிர்கால வினையெச்சம். ஆட்செய் வான் முந்து எனப்பிரித்து, ஏழையர்க்காட் செய்து அமிழ்ந்து விடாமல் முன்னவனூர்க்காட்செய்து வானேற முந்து எனப் பொருளுரைத்தலு மேற்கும். (௫௧)

முந்து வளைசிதறி முத்திறைத்துப் பாயலையும்
உந்திக் கதறி உறங்காயால்—சிந்து
மயலூர் உனையும் மணந்தகன்றூர் கொல்லோ
வயலூர்ப் பெருமானூர் வந்து.

(இ - ள்.) முந்து - முற்பட்டு, வளை சிதறி - வளையல்களைச்சிந்தி [சங்குகளைச் சிதறி], முத்து இறைத்து - முத்து முத்தாகக் கண்ணீரைவடித்து



[முத்துக்களை வீசி] பாயலையும் உந்தி - படுக்கும் பாயையும் காலால் ஒதுக்கித்தள்ளி [தாவுகின்ற அலைகளையும் வீசி], கதறி - கதறிக்கொண்டு [சப்தித்துக்கொண்டு], உறங்காய் - தூங்காமல் இருக்கின்றாய், ஆல் - ஆதலால், சிந்து - கடலே!, மயலூர் உனையும் - காதல் மயக்கத்தையுடைய உன்னையும், வயலூர்ப் பெருமானூர் - வயலூரென்னுந் திருச்சுழியலிலே யெழுந்தருளியிருக்கின்ற திருமேனிப்பெருமானூர், வந்து - முன்னம் பூம்பொழிலிடத்தே யெய்தி, மணந்து அகன்றூர் கொல் ஓ - புணர்ந்து பிரிந்தனரோ?—சொல்லாய்; (எ - று.)

என்னைப்போல நீயும் வயலூர்ப்பெருமானைப் புணர்ந்து பிரிந்து வருந்துகின்றாய்போலும் எனத் தலைவி கடலை நோக்கி இரங்கிக்கூறியது. தன்னுட் கையா றெய்திடு கிளவி என்னுந் துறை. முந்து வளை - சிலாக்கியமான வளை. பிறர் கழற்றுவது பாராதே தானே கழன்றுவீழ முந்துகின்ற வளை என்றுமாம். முத்து - முத்துவடமுமாம். சிந்து - அண்மைவிளி. இங்கு, கேளாதது கேட்பது போலச் சொல்லப்பட்டது, மரபுவழுவமைதி. முன் இரண்டடி - செம்மொழியும் பிரிமொழியுமாக வந்த சிலேடைபற்றிய உவமையணி. (௫௨)

வந்து வினைதினையின் முற்றியதால் மற்றிதற்கு
மந்து முளதோ? மலியிருளிற்—சந்து
விழிகையிற் சேரா மெலியிடைபாற் சென்றோன்
சுழிகையிற் கார்ப்புனமே! சொல்.

(இ - ள்.) மலி இருளில் - மிகுந்த நள்ளிரவிலே, விழி கையிற் சேரா மெலி இடைபால் - கைக்குள் அடங்காத அகன்ற விழியினையும் மெலிந்த இடையினையு முடையவரான பரவைநாய்ச்சியா ரிடத்திற்கு, சந்து சென்றோன் - தூதாகச்சென்றவனது, சுழிகையின் - திருச்சுழியலைச்சார்ந்த, கார்ப்புனமே - கரியபுனமே!, வினை - எமது தீவினையே, தினையின் வந்து - தினைப்பயிராக வந்து முளைத்து வளர்ந்து, முற்றியது - நன்றாகக் கதிர்முற்றிப்போயிற்று; இதற்கு - இது இங்ஙனம் முற்றாமல் கதிர்பறிந்தபடியேயிருக்கும்படி செய்தற்கு, மந்தும் உளதோ - (ஏதேனும்) மருந்தும் உளதோ?, சொல் - சொல்வாயாக; (எ - று.)— ஆல் - ஈற்றசை; இரக்கமுமாம்.

இயற்கைப் புணர்ச்சியும் பாங்கற்கூட்டமும் பெற்றபின்பும் களவொழுக்க நெறியிலேயே நின்ற தலைவன் தலைவியின் காதற்பாங்கியைப் புணர்ந்து அவளை அனுசரித்துத் தன்குறைகூறி யிரப்ப, அவன் கருத்துக்கு அரிதின் இசைந்த அப்பாங்கி, அத் தலைமகனுக்கு ஒரு குறியிடங்கூறி, தாம் தினைப்புனங் காப்பதாகச் சொல்லி மனையிலுள்ளாரிடம் விடைபெற்று அந்த வியாஜத்தால் தலைமகளை அழைத்துவந்து குறியிடத்திற் கொண்டு சேர்த்து, அங்குத் தலைமகன் வந்து சந்தித்துத் தலைமகளுடன் சேருமாறு செய்விக்க, அத்தலைமகன் பின்னரும் அக்களவு நெறியையே வேண்டிநின்றானாக, அவ

னுக்கு அத்தோழி, 'இனி இவ்வாறு ஒழுகுவது தகுதியன்று' என்றும், 'விரைவில் இவளை வெளிப்படையாக மணஞ்செய்து கொள்ளுதலே தகுதி' என்றும் குறிப்பாகவும் வெளிப்டையாகவும் எதிரில் நின்று பேசியும் முன்னிலைப் புறமொழியாகக் கூறியும் பலவாற்றான் உணர்த்துவள். இது, பாங்கியிற் கூட்டத்திலே பகற்குறியில் வரைவு கடாதலெனப்படும். (வரைவு - வெளிப்படையாக மனஞ்செய்து கொள்ளுதல்: கடாதல் - வற்புறுத்தி உணர்த்துதல்.) கீழ்க் கூறியவாறு பகற்குறிவந்து ஒழுகுகின்ற தலைமகன் வழக்கப்படி ஒருநாள் சிறைப்புறமாக (சிறைப்புறம் - வேலிக்கு வெளி) க்குறியிடத்துவந்து நிற்ப, தோழி, அவன் செவிப்படுமாறு, 'இத் தினைக்காவல் வியாஜமாக நாம் உன்னைச் சந்திக்கலாமென்று நினைந்து இதுவரையிலுந் தினைகாத்து வந்தோம்: அத்தினை நன்றாகக் கதிர்முற்றிவிட்டதாதலால், எம்மவர் தினைகொய்து விடுவார்கள்; யாம் இன்று ஊர்க்குப் போய்விடுவோம்: இனி எமக்குத் தினைப்புனக்காவல் இல்லையாதலால், நாம் இனி உன்னைச் சந்திக்க இயலாது' என்பது தோன்ற, தினைப்புனத்தை நோக்கி, 'கரிய புனமே! தலைவன்மேல்வைத்த விருப்பினால் தினைகாத்து மகிழ்ந்து நின்ற எங்கட்கு, அத்தினை எங்கள் தீவினையாய் வளர்ந்து முற்றியது: இதனை முற்றாதபடி செய்ய வகையுண்டோ?' என்று தினையை வெறுத்துக் கூறுதல் இச்செய்யுளிற் குறிக்கப்பட்ட விஷயம். இத்துறை, தலைவன் சிறைப்புறமாகத் தோழி தினையொடு வெறுத்து வரைவுகடாதல் எனப்படும். திருக்கோவையாரில், "பொருப்பன் விருப்பில், வினைவித்திக் காத்து விளைவுண்டதாகி விளைந்ததுவே" என்றது நோக்கத்தக்கது. தினைவிதைத்தநாளில் இத் தினைக்காவல் வியாஜமாகத் தலைவனைச் சந்திக்கலாமென்று மகிழ்ந்து தினைக்காவற்கு உடன்பட்டனராதலாலும், அத்தினை கதிர்முற்றிவிடவே கொய்துவிடுவாராதலின் இனிப் பாதுகாவலுமில்லையாகவே அவனைச் சந்திக்க இயலாதாதலாலும், தினைமுற்றியதைத் தங்கள் தீவினையே இங்ஙனம் வந்து முற்றியதாக வெறுத்துக் கூறுவாள், 'வந்து வினைதினையின் முற்றியதால், என்றாள்; பிரியச் செய்வதாகிய தீவினையே இங்ஙனம் தினைவடிவாய் வந்து விளைந்ததென்றாளெங்க. 'மற்றிதற்கு, மந்து முளதோ' என்றது இரக்கத்தாற் கூறிய வார்த்தை. கதிர்முற்றாதிருப்பின் இன்னமும் தாங்கள் அங்கே புனங்காத் திருக்கலாமென்பது பற்றி, இங்ஙனங் கூறியவாறு. மந்தும், உம் - உயர்வுசிறப்பு. மந்து - தெலுங்குவார்த்தை. "தானை மிடைந்தன தம்பி மிடைந்தன", "அக்கட விராவணற் கமைந்த வாற்றலே" என்னுமிடங்களில் தம்பி, அக்கட என்ற பதங்களைக் கல்வியிற் பெரியார் பிரயோகித்திருத்தல் காண்க. விழிகையிற்சேரா என்பதற்குக் கையையே விழியாகக்கொண்டு தடவிச்சென்று எனவும் பொருள் உரைக்கலாம். இப்பொருளில், சேரா - செய்யா என்னும் வாய்பாட்டு இறந்தகால வினையெச்சம். கையை விழியாகக்கொண்டு மலியிருளில் மெலியிடைபாற் சென்றானது சுழிகை என்றதனால் மேல் இரவுக்குறியிற் சந்திக்க விரும்பினான் என்பது குறிப்பாகக் கொள்ளக் கிடத்தல் காண்க. கார்ப்புனம் என்பதற்குக் கார்காலத்துப்



பொலியும் புனமெனினும் அமையும். திருக்கோவையாரில், 'கார்ப்புனம்' என்பதற்கு - 'கரியபுனம்' என்றும், 'கார்காலத்துப் பொலியும் புனமெனினும் அமையும்' என்றும் பேராசிரியர் உரையெழுதிப் போந்தமை யறிக. தலைமகள் புனங்காத்தற்குள்ள காரணத்தை, "காட்சியில் தலைவி ஆயவெள்ளம் புடைசூழ்ந்து குற்றேவல் செய்ய வீற்றிருந்தாளென்று கூறி, இங்ஙனந் தினைப்புனங் காத்திருந்தாளென்று கூறியதும், தலைவனும் பற்பல் நூறாயிரங் கூர்வேலிளைஞர்கள் புடைசூழத் தேரேறி வேட்டையாட வந்தானென்று கூறி, இங்ஙனந் தமியனாய்த் தழையேந்தி வந்தானென்றுங் குறையிரந்தானென்றுங் கூறியது மாறுபாடன்றோ எனின்,—மாறுபாடன்று; என்னை?—தலைவி ஆயக்கூட்டமும் முன்போலச் சூழ்ந்து பிரிந்து விளையாடாநிற்ப இவளும் பற்பல விளையாட்டினுள் இதுவும் ஓர் விளையாட்டாகவும், தலைவன் குறியிடத்துவரின் தனித்து அவனைக் கூடவேண்டுமென்னுங் கருத்தாகவும் புனங்காத்தாளென்றும், தலைவன் கூர்வேலிளைஞரும் வேட்டை விருப்பாற் சூழ்ந்து பிரிந்து செல்லா நிற்ப, இவனும் வேட்கை மீதூரப்பட்டுப் பாங்கியாற் கூடவேண்டுமென்னுங் கருத்தினால், தலைவி குலமுறைமை ஒருவர்க்கொருவர் தழையுங் கண்ணியுங் கொடுத்துக் காண்டலும் இவர் அவற்றையேற்றுக் கோடலும் தொன்றுதொட்டு நடந்துவரும் இயல்பாதலால், தழையுங் கண்ணியும் ஏந்திவந்து நின்று குறையிரந்தானென்றுங் கூறியது மாறுபாடன்றென வுணர்க: எனவே, எளியளாய்ப் புனங்காத்தாளுமல்லள், எளியனாய்க் குறையுற் றிரந்தானு மல்லன் என்பது தோன்றியவாறுணர்க" என்ற தஞ்சைவாணன் கோவையுரையால் அறிக. (ருரு)

சொல்லத் தரமோ சுழியற் பெருமையுந்தான்
செல்லத் தகுமோர் செழுந்தருவின்—நல்ல
சினைநிழலிற் சேர்ந்தார் செறிநிழல்போற் றீமை
புனைநிழலிற் சேர்தலுமே போம்.

(இ - ள்.) செல்லத் தகும் - சென்று தங்குதற்கு யோக்கியமான, ஓர் செழும் தருவின் - ஒரு செழுமையான விருக்ஷத்தினது, நல்ல சினை நிழலில் - நல்ல கிளையினது குளிர்ந்த நிழலிலே, சேர்ந்தார் - சேர்ந்தவர்களது, செறி நிழல்போல் - செறிந்த (சரீரத்தினது) நிழலைப்போல, தீமை - ஒருவனது பாவங்களெல்லாம், புனை நிழலில் சேர்தலுமே - புன்னை விருக்ஷத்தினது நிழலை யடைந்தமாத்திரத்திலேயே, போம் - போய்விடும்; (இப்படிப்பட்ட உத்தம க்ஷேத்திரமாகிய) சுழியல் - திருச்சுழியலினது, பெருமையுந்தான் - மகிமைதானும், சொல்லத்தரமோ - ஒருவராற் சொல்லிமுடிக்கக் கூடிய தன்மையை யுடையதோ?—இல்லை என்றபடி; (எ - று.)

விடாது தொடர்ந்து செல்லும் நிழல் என்பான், 'செறிநிழல்' என்றார். பழவினைதான் தற்செய்த கிழவனை விடாதே தொடர்ந்து வருகின்றமை பற்றி, நிழலோடு உவமிக்கப்பட்டதென்க. இச்செய்யுளை, "மென்னிழற் றருவை யடைபவர் தம்மை விடாநிழல் விட்டிடு மாபோல், நின்னடிக் கமல

மடைந்திடிற் றொடர்ந்து நீங்கலா வினையுநீங் குறுமே, கன்னலிற் கனியிற் சுவைதரு மமுதே கண்மணி யேயருட் கடலே, என்னுயிர்த் துணையே யென் கரத் திருக்கு மீசனே மாசிலா மணியே" என்னும் சிவப்பிரகாச சுவாமிக ளது குறுங்கழிநெடிற் செய்யுளோடு ஒப்பு நோக்குக. (௫௪)

போந்தேற லென்றமரர் போற்றப்போம் வாழ்வதனை
நாந்தேறல் செய்யோம் நவின்றிருப்போம்—தீந்தேறல்
போலினிக்கு மெந்தை புவனேசன் பூங்கமலக்
காலினிக்குங் காப்பெனவே சற்று.

(இ - ள்.) போந்து ஏறல் என்று - 'மேலே யுள்ளதான எங்க ளுலகத்துக்கு வருக' என்றுசொல்லி, அமரர் போற்ற - இந்திராதி தேவர்கள் போற்றிப் பிரார்த்திக்க, போம் - சுவர்க்கலோகத்திற்குப் போகும், வாழ்வதனை - வாழ்வை, நாம் தேறல் செய்யோம் - நாம் மேலானதாக மதித்தல் செய்யோம்; தீம் தேறல் போல் - மதுரமான தேனைப்போல, இனிக்கும் - தித்தியாநின்றுள்ள, புவனேசன் - ஸ்ரீ பூமிநாதனது, பூங் கமலக் கால் - அழகிய தாமரைமலர்களைப் போன்றுள்ள திருவடிகளே, இனிக்கும் - இனிமேலைக்கும், காப்பு எனவே - நமக்கு ரக்ஷகமானவைகளென்று, கற்று நவின்று இருப்போம் - அறிந்து அவைகளைத் துதித்துக்கொண்டிருப்போம்; (எ - று.)

இந்திரன் முதலிய இறையவர் பதங்களில் அனுபவிக்கப்படுகிற போகங்களினும், ஸ்ரீதனுநாதருடைய திருவடித்தாமரைகளே எற்றைக்கும் நமக்குத் தஞ்சமென்று நம்பி அவற்றையே நிரந்தரம் அனுபவிப்பதனாலாகும் ஆனந்த ரஸம் மேம்பட்ட தென்பதையும், அதில் தமக்குள்ள ஆதராதிசயத்தையும் கூறியவாறும். போந்தேறல் என்றமரர் போற்ற என்பதற்கு நாங்கள் கொண்டுவந்த விமானத்திலேறி எங்கள் மேலுலகத்திற்கு வந்து அங்குச் சீரிய சிங்காதனத்திலேறி வீற்றிருக்க என்று தேவர்கள் போற்ற என விரித்து முரைக்கலாம். போந்து என்பதனைப், 'புகுந்து' என்றதன் மரூஉ எனக்கொள்ளலும் ஏற்கும். ஏறல் - அல்லீற்று வியங்கோள். "மக்கட் பதடி யெனல்" என்னுமிடத்துப்போல. தேறல் - தேன்; தெளிந்தது. "தேனிடை யின்னமுதை மற்றத னிற்றெளியை" என்றார் பெரியாரும். கற்று நவின்று பின்னர் அத்திருவடிகளிடத்தே யிருப்போம் என்றுரைத்தலும் அமையும். திருமுருகாற்றுப்படையில், "சேவடி படருஞ் செம்ம லுள்ளமொடு, நலம்பிரி கொள்கைப் புலம்பிரிந் துறையும்" என்ற இடத்து, ஆசிரியர் நச்சினார்க்கினியர், 'புலம் பிரிந்து உறையும் அடி - மெய்ஞ்ஞானத்தாலறிதலைக் கைவிட்டுத் தங்குந் திருவடி' எனவும், 'திருவடியே வீடாயிருக்கும் என்றார்; அது, 'கேட்டாயோ தோழி கிறிசெய்த வாறொருவன், றீட்டார் மதில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான், காட்டா தனவெல்லாங் காட்டிச் சிவங்காட்டித், தாட்டா மரைகாட்டித் தன்கருணைத் தேன்காட்டி, நாட்டார் நகைசெய்ய நாமேலை வீடெய்த, வாட்டான்கொண் டாண்டவா



பாடுதுங்கா ணம்மானாய்' என்பதனானும், பிறருந் திருவடியைக் கூறுமாற்றானுமுணர்க' எனவும் உரைத்துள்ளவற்றை யிங்கே அமைத்துக்கொள்க. இனிக்கும் புகலிடம் என்னலுமாம். இனி, இனிக்குங்கால் காப்பு எனக் கற்று நவின்று என இயைத்து - இனியனவாயிருக்கும் திருவடிகள் வாழ்வனவாக எனக் கற்றறிந்து என உரைப்பினுமாம். (௫௫)

கற்றார் கதிபெறுவர் கண்டீர் புலனைந்துஞ்
செற்றா னுறையத் திருச்சுழியல்—பெற்றான்
பிறவாத் திருமேனிப் பெம்மான்பேர் நாவின்
மறவா தனுதினமும் வைத்து.

(இ - ள்.) புலன் ஐந்தும் - ஐம்புலன்களையும், செற்றான் - ஜயித்தவனும், உறைய - தான் இனிதுறைவதற்காக, திருச்சுழியல் - திருச்சுழியலென்னுந் தலத்தை, பெற்றான் - பெற்றுள்ளவனும், பிறவா - பிறப்பில்லாதவனுமாகிய, திருமேனிப் பெம்மான் - திருமேனிப்பெருமானது, பேர் - திருநாமத்தை, மறவாது - மறவாமல், அனுதினமும் - நாடோறும், நாவில் வைத்து - நாவிலேவைத்து, கற்றார் - கற்றவர்களே, கதிபெறுவர் - நற்கதியை யடையப் பெறுவார்கள்; (எ - று.)

கண்டீர் - தேற்றம். ஸ்வயம்பு மூர்த்தியாகலாற், 'பிறவாத்திருமேனிப் பெம்மான்' என்றார். வைத்து - அலங்காரமாகவைத்து. "நாவுக் கழகுனது நாமம்" என்றார் பிறரும். தழும்பேறும்படி வைத்து என்றலுமாம். இச்செய்யுளை, "உற்றானமக் குயரும்மதிச் சடையான்புல னைந்துஞ், செற்றார்திரு மேனிப்பெரு மானூர்திருச் சுழியல், பெற்றானினி துறையத்திறம் பாமைத்திரு நாமங், கற்றாரவர் கதியுட்செல்வ ரேத்தும்மது கடனே" என்ற ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளின் அருளிச்செயலோடு ஒப்புக்காண்க. (௫௬)

வைப்பிற் றவமாஞ் சதிராமே மாமலத்தா
லெய்க்கும் பிறப்பறுப்பீ ரேத்துமினோ—உய்க்குஞ்
செழும்புனல்சேர் வேணித் திருச்சுழியற் றேவைக்
கொழும்புகையும் பூவுநீர் கொண்டு.

(இ - ள்.) உய்க்கும் - ஆன்மாக்களை நற்கதியிற் சேர்க்கவல்ல, செழும் புனல் - செழிய கங்காநதியானது, சேர் - பொருந்தியுள்ள, வேணி - ஜடாமகுடத்தையுடையவனும், திருச்சுழியல் - திருச்சுழியல் என்னுந் தலத்தைத் தனக்கு உறைவிடமாகக் கொண்டவனுமாகிய, தேவை - தேவனான திருமேனிப் பெருமானை, கொழும் புகையும் - கொழுமையான தூபத்தையும், பூவும் - மலர்களையும், நீர் கொண்டு - நீர் கைக்கொண்டு சென்று, மா மலத்தால் - கரிய மலஸம்பந்தத்தினாலே, எய்க்கும் - வருந்தாநிற்கும், பிறப்பு - ஜன்மமாகிய பாசத்தை, அறுப்பீர் - அறுக்கவேண்டு மென்னும் மனமுடையீராயின், ஏத்துமினோ - வழிபடுங்கள்; (இதுவே) வைப்பில் - உலகத்திலே, தவமாம் - சிறந்த தவமாகும்; சதிராம் - ஞானமுமாகும்; (எ - று.)

'சமரங்காள்! உமக்கு மலஸம்பந்தத்தா லேற்பட்டதும் துக்கஹேதுவாக உள்ளதுமான பிறவியென்னும் பாசத்தை அறுக்கவேண்டு மென்ற மனம் இருந்தால் திருமேனிப்பெருமானைப் பூவும் புகையுங்கொண்டு ஆராதியுங்கள்; சிறந்ததாகச் சொல்லப்படுகின்ற எல்லாத் தவமும் ஞானமும் இந்த ஆராதனையின் வடிவமாகத்தா னிருக்கின்றன' என்று பரோபதேசஞ்செய்கின்றார் என்க. வைப்பு - நிதியுமாம். மா - கருமையாதலை, "மாக்கடல்," "மாக்கழி மலர்ந்த நெய்தல்" என்பதனானு முணர்க. தேவும் தெய்வத்திற்கொருபெயர். "தேவாதிதேவன்" என்றார் சிந்தாமணியாரும். கொண்டு - மூன்றாம் வேற்றுமைச் சொல்லுருபு. இச்செய்யுள், "மலந்தாங்கிய பாசப்பிறப் பறுப்பீர்துறைக் கங்கைச், சலந்தாங்கிய முடியானமர்ந் திடமாந்திருச் சுழியல், நிலந்தாங்கிய மலராற்கொழும் புகையானினைந் தேத்தூர், தலந்தாங்கிய புகழான்மிகு தவமாஞ்சதி ராமே" என்ற ஸ்ரீ சுந்தரமூர்த்திசுவாமிகள் தேவாரத்தை அடியொற்றி வந்திருத்தல் காண்க. (௫௭)

கொண்டலை நேர்பூங் குழலார் குடைந்தாடும்
மண்டலைப் பௌவ மணிச்சுழியல்—கண்டலைத்
தாட்கையினர்க் கன்பர் சரணந் தலைக்கணியும்
வேட்கையினர் அவ்வவரும் வேந்து.

(இ - ள்.) கொண்டலை - நீருண்ட கரிய மேகத்தை, நேர் - ஒத்த, பூங்குழலார் - அழகிய கூந்தலையுடைய மங்கையர்கள், குடைந்து ஆடும் - மூழ்கி ஸ்நானஞ் செய்யாநின்ற, மண்டு அலைப் பௌவம் - மிகுந்த அலைகளையுடைய ஸமுத்திரத்தினாற் கரைக்கேற்றப்பட்ட, மணி - முத்துக்களால் விளங்குகின்ற, சுழியல் - திருச்சுழி க்ஷேத்திரத்தி லெழுந்தருளியிருக்கின்ற, கண் தலை தாள் கையினர்க்கு - கண்ணைப் பாதத்திலும் தலையைக் கையிலும் வைத்தவராகிய திருமேனிநாதருக்கு, அன்பர் - அன்புசெய்யும் அடியார்களுடைய, சரணம் - திருவடித்தாமரைகளை, தலைக்கு அணியும் - முடிக்கு அலங்காரமாக அணியவேண்டு மென்கிற, வேட்கையினர் - ஆசைப்பாட்டினை யுடையவர்கள், அவ்வவரும் - அவரவர்களும், வேந்து - தனித்தனி அவ்வத்திசைக்கு அரசராவர்கள்; (எ - று.)

கொண்டல் - மேகம். பூங்குழலார்-பூவைமுடித்த குழலாருமாம். இயல்பிலேயே மிகுந்த அலைகளோடு கூடிய ஸமுத்திரமானது பின்னும் அதிகமாக அலைகளை யெழுப்பித் தன்னிடத்துள்ள மணிகளைக் கரைக்கேற்றும்படியாகப் பூங்குழலார் குடைந்தாடா நிற்கும் சுழியல் என்க. "குரும்பை மென் முலைய ராடக் கூந்தலி னறவந் தோய்ந்த, இரும்புன லாறு பாய வெறித்திரை சுருட்டுந் தெண்ணீர்க், கருங்கடல் புலவு நீங்கி நறுமணங் கமழு மென்றால், முருந்துறழ் மூர லார்தம் மிகுதியை மொழிய லாமோ" என்றபடி போக்கியவஸ்துக்களிற் சிறந்தவராகிய மடவார்களின் மிகுதியும், கடல் வளமுங் கூறியவாறும். பௌவம் - கடல். கல் என்றது திருமாலின் கண்ணை.



தலை என்றது பிர்ம்ம கபாலத்தை. கண் தலை தாள் கை என அடுக்கித் தொடுத்தது வியக்கத்தக்கது. இச்செய்யுளும், "கவ்வைக்கடல் கதறிக்கொணர் முத்தங்கரைக் கேற்றக், கொவ்வைத்துவர் வாயார்குடைந் தாடுந்திருச் சுழியற், றெய்வத்தினை வழிபாடுசெய் தெழுவாரடி தொழுவா, ரவ்வத் திசைக் கரசாகுவ ரலராள்பிரி யாளே" என்ற ஸ்ரீசுந்தரமூர்த்திசுவாமிகளின் தேவாரத்தைப் பின்பற்றிய தென்க. (௫௮)

வேந்து மகலிகையும் வெஞ்சாபம் பெற்றொழியக்
காந்து கடுஞ்சினத்துக் கௌதமர்க்காப்—போந்து
மணக்கோலஞ் செய்தவனை மாய்த்தவனை நெஞ்சே!
மணக்கோலஞ் செய்தவனை வாழ்த்து.

(இ - ள்.) வேந்தும் - தேவர்கோமானாகிய இந்திரனும், அகலிகையும் - அகலிகை யென்னும் பெயரையுடைய தமது மனைவியும், வெம் சாபம் பெற்று ஒழிய - தாம் கொடுத்த கொடிய சாபத்தைப் பெற்றுச் சொருபங் குலைந்துபோம்படியாக, காந்து - பொங்கிய, கடும்சினத்து - கொடிய கோபத்தையுடைய, கௌதமர்க்கா - கௌதம முனிவரர் பொருட்டாக, போந்து - எழுந்தருளி, மணக்கோலம் செய்தவனை - திருமணக்கோலஞ் செய்து கொண்டவனும், மணம் கோல் அஞ்சு எய்தவனை - நறுமணம் பொருந்திய புஷ்பபாணங்களாகிய அஞ்சினையும் தொடுத்தவனாகிய மன்மதனை, மாய்த்தவனை - முன்னம் விழித்தெரித்தவனுமாகிய திருமேனிப்பெருமானை, நெஞ்சே - மனமே!, வாழ்த்து - நீ வாழ்த்துவாயாக; (எ - று.)

வேந்து - இந்திரன். "வேந்தன் மேஎய தீம்புன லுலகமும்" என்றதுங் காண்க. அகலிகை - அழகில்லாமை யில்லாமையை யுடையள்; மிக்க அழகு உடையவள் என்றபடி. ஒழிய - வெஞ்சாபம் ஒழிய என்றலுமாம். சாபங்கொடுத்தவர்தாமே பின்னர் அதற்குப் பரிகாரத்தையும் அருளிச்செய்தனர்என்க. எனவே முனிவரது சாபானுக்கிரக சக்திவெளியாம். காத்தலருமைபற்றிக் 'கடுஞ்சினம்' என்றார். "குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி, கணமேனுங் காத்த லரிது" என்றார் நாயனாரும். ஆ - ஆக; ஈறுகெட்டது. இந்திரிய நிக்கிரகஞ் செய்யமாட்டாது மாரனார் வரிவெஞ் சிலைக்கு ஆட்பட்டுழல்பவர்க்கு வரும் துன்பத்தையும், அது செய்தவர்க்கு வரும் பேராற்றலையும், "ஐந்தவித்தா னாற்றற் ககல்விசும்பு ளார்கோமான், இந்திரனே சாலுங் கரி" என்று நாயனார் அருளிச்செய்தபடி திருஷ்டாந்த பூர்வமாக விளக்கிக்காட்டி, 'மனமே! நீயும் கௌதமுனிவர்போலப் பேராற்ற லுடையையாய்ப் பெருமை பெறவேண்டின், பொறிகள் தம் இச்சைப்படி விஷயாந்தரங்களிலே மண்டித்திரியும்படி மலர்க்கணை தொடுப்போனாகிய மன்மதனை முன்னம் நுதல்விழியால் எரித்தவனாகிய பூமீசனை வாழ்த்துவாயாக' எனத் தமது நெஞ்சுக்கு அறிவுறுத்துகின்றனரென்க. பூமிநாதன் கௌதம முனிவர்க்குத் திருமணக்கோலக் காட்சி தந்தருளிய விஷயம் கீழ் ௨௬-ம் செய்யுளுரையிற் காட்டப்பட்டது. (௫௯)

வாழி வயலூர் மணிமிடற்றாய் மாதவனும்
ஆழி யரியுறங்கு மாதலினால்—ஆழிக்
கறைவிடமோ அன்றிக் கமலமலர்ப் போதை
உறைவிடமாக் கொண்டவளோ வோது.

(இ - ள்.) வயலூர் - வயலூர் என்னுந் திருப்பதியிலெழுந்தருளி யிருக்கின்ற, மணிமிடற்றாய் - நீலகண்டனான நீ, வாழி - வாழ்ந்துகொண்டிருக்கின்றாய்; மாதவனும் ஆழி அரி - லக்ஷ்மீபதியாகிய சக்கராயுதத்தையுடைய திருமால், உறங்கும் - உறங்குகின்றான்; ஆதலால் - ஆகையால், விடம் - விஷமென்று சொல்லத்தக்கது, ஆழி கறையோ - க்ஷீராப்தியிலுண்டான ஹாலாஹலமோ?, அன்றி - அல்லது, ஆழி - அந்த ஸமுத்திரத்திலுண்டான, கமல மலர்ப்போதை - தாமரையாகிய மலர்ச்சியையுடைய புஷ்பத்தை, உறைவிடமாக் கொண்டவளோ - தனக்கு வாசஸ்தானமாகக் கொண்டவளான லக்ஷ்மியோ?, ஓது - எனக்குச் சொல்லியருளாய்; (எ - று.)

விஷமுண்டார் துஞ்சுவதும் லக்ஷ்மியைப்பெற்றார் வாழ்வது மன்றோ பிரஸித்தம். விஷத்தையுண்ட நீ வாழவும் லக்ஷ்மியைப்பெற்ற திருமால் துஞ்சவுங் காரணமென்ன? வயலூர் நாதனே! நீ உண்டருளிய ஹாலாஹலமோ அல்லது அத்திருமால் கொண்டருளிய லக்ஷ்மியோ இவற்றில் எது நிஜமான விஷமென்பதை எனக்குச் சொல்லாய் என வினவுகின்றன ரென்க. ஆழியரி என்பதற்குக் கடல்வண்ணனான அரி என உரைத்து, விஷவேகத்தால் மேனிகரியனான திருமால் எனவும், கடலிற் கிடக்கின்ற அரியென வுரைத்து, விஷாக்கினியினது வெம்மை யாற்றாது குளிர்ச்சி பொருந்திய கடலிற்போய் வீழ்ந்தவனான திருமால் எனவும் விசேடங்கற்பித்தலுமமையும். மலர்ப்போது மலர்ச்சியை யுடைய போது. (சுO)

ஓதக் கடலில் உயர்வெள்ளி மால்வரையிற்
சீதக் கமலத்திற் சேர்ந்திருக்கும்—சூதத்
தவநேசன் மால்போற் றனிவழங்குஞ் சீர்த்திப்
புவனேசன் என்னும் பொருள்.

(இ - ள்.) சூதத் தவம் நேசன் - தவத்திலே பிரீதியுடையராகிய சூதமாமுனிவர், மால்போல் - மேகத்தைப்போல, தனி வழங்கும் - மிகுதியாக வருஷிக்கின்ற, சீர்த்தி - பொருள்சேர்ந்த பெரிய புகழினையுடைய, புவனேசன் என்னும் பொருள் - பூமிநாதன் என்கின்ற பரம்பொருளானது, ஓதம் கடலில் - ஓதம் மிக்க திருப்பாற்கடலிலும், உயர் வெள்ளி மால் வரையில் - உயர்ந்த வெள்ளியங்கிரியாகிய திருக்கயிலாயத்திலும், சீதம் கமலத்தில் - குளிர்ச்சி பொருந்திய தாமரை மலரிலும், சேர்ந்திருக்கும் - பொருந்தியிருக்கும்; (எ - று.)

ஸ்ரீ பூமிநாதனே அரி அரன் அயன் என்னும் திரிமூர்த்திகளின் வடிவமாக முறையே திருப்பாற்கடலிலும் கைலையங்கிரியிலும் தாமரைமலரிலும்



வஸிக்கின்றனன் என்பதாம். மால் வரை - மேகந் தவழ்கின்ற மலையுமாம். இனித் திருமால்போலுங் குவடுகளோங்கிய மலையென்றலுமொன்று. "மாயோனன்ன மால்வரைக் கவாஅன்" என்றார் நற்றிணையிலும். மாலாகிய வரையென்றலும் அமையும். "ஆறு வறமுதலா மர்நான்கு - மேனோருக், கூறி னுரைத்தார்க்கு மொண்ணீர் முகிலுக்கும், வாழியுல கென்னாற்று மற்று" "கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட், டென்னாற்றுங் கொல்லோ வுலகு" என்றபடி கைம்மாறு கருதாது ஆத்மோஜ்ஜீவன ஹேதுவான பகவத்குணாமிர்தத்தை வருஷிக்கின்றமைபற்றி, 'மால்போல் வழங்கும்' என்றார். சிவபெருமானது நற்குணக்கடலிலே படிந்து அக்குணாமிர்தத்தை யாரும் அனுபவித்துக் களிக்கும்படி வருஷிக்கின்றமைபற்றி, 'மால்போல்' வழங்கும் என்றார் எனலும் அமையும். பாற்கடலைக்கடைந்து அதனிடத்துண்டாகிய அமிர்தத்தைத் தேவருக்கு வழங்கிய திருமாலைப்போல வேதமாகிய கடலைக் கடைந்து அதிலுண்டாகிய சிவகுணாமிர்தத்தைத் தபோதனர்க்கு வழங்குமவர் என்பார், 'மால்போல்' வழங்கு மென்றார் என்றலு மொன்று. "தெண்டிரைக்கடற் பருமமு தத்தினைத் திருமால், அண்ட ருக்கெலாங் களிப்புற வழங்குமா றதுபோல்" எனவரும் தலபுராணச்செய்யுளையுங் காண்க. இனி, தனது ஆசார்யனும், ஸ்ரீவிஷ்ணுவின் அம்சாவதாரமுமான வேதவியாஸ பகவானைப்போல வழங்குமென்பார், 'மால்போல் வழங்கும்' என்றாரெனக் கொள்ளினும் ஏற்கும். "பொன்னிருந்துழாய்த் திருமறு மார்பனைப் போற்றிப், பின்னு செஞ்சடை வியாதனைக் கருத்துறப் பிணித்து, நன்னெறிப்புனி தத்தலம் நவிலுவான்" என்ற தலபுராணச் செய்யுளுங் காண்க. (சுக)

பொருள்செய்யப் போதலுமென் பூமீசன் எந்தை
இருள்செய்யுங் கண்டத்தா ரென்றும்—அருள்செய்யும்
பண்ணின்ற செம்பவளப் பைம்பொற் கொடியொன்றின்
கண்ணின்று முத்துதிரக் கண்டு.

(இ - ள்.) பூமீசன் - பூமிநாதனென்னும் பெயரையுடையவரும், எந்தை - எமக்கெல்லாம் பிதாவாகவுள்ளவரும், இருள்செய்யும் கண்டத்தார் - இருணிறம் பொருந்திய ஸ்ரீ கண்டத்தையுடையவருமாகிய சுழிகைத்தலைவர், என்றும் - எப்போதும், அருள்செய்யும் - தாம் அருள்செய்து ரக்ஷிக்கின்றதான, பண்ணின்ற - பண்கள் தங்கியுள்ள, செம் பவளம் - செவ்விய பவளத்தைப் பொருந்தியுள்ள, பைம் பொன் கொடி ஒன்றின் கண்ணின்று - பசியதோர் பொற்கொடியினிடத்திலிருந்து, முத்து உதிரக் கண்டு - (ஓயாமல்) முத்துக்கள் சிந்துதலைக் கண்டுவைத்தும், பொருள்செய்ய - பொருள் தேடுவதற்காக, போதலும் என் - பிரிந்துபோக எண்ணுவதும் எதற்காக? (எ-று.)

தலைவியைத் தலைவன் மணஞ்செய்து கொண்டதன் பின்பு பிரியும் பிரிவு ஆறுவகைப்படும்; ஓதற்பிரிவு, காவற்பிரிவு, பகைதணி வினைப்பிரிவு,

வேந்தற்குற்றுழிப்பிரிவு, பொருள்வயிற்பிரிவு, பரத்தையிற் பிரிவு என : அவற்றில் இங்கு எடுத்துக்கொண்டது, பொருள்வயிற்பிரிவு ; அதாவது - பொருளீட்டுதல் காரணமாகப்பிரியும் பிரிவு : தாதை மூதாதை முதலிய தன் முன்னோராற் படைக்கப்பட்ட பொருள்கொண்டு இல்லறஞ் செய்தால் அதனால் வரும் பயன் அவர்க்கு ஆம் அத்துணையல்லது தனக்கு ஆகாமையால் தனது பொருள் கொண்டு இல்லறஞ் செய்தற்காகப் பொருள் தேடுதற் பொருட்டுச் செல்வம் நிறைந்த தலைமகன் பிரிந்து செல்வன் என்க. (இவ்விஷயம் கீழ் சஎ-ம் செய்யுளுரையிலுங் காட்டப்பட்டது.) அங்ஙனம் பிரியக்கருதிய தலைவன் தனது பிரிவைத் தானே தலைவிக்கு உரைத்தலரிதென்று கருதித் தோழியை நோக்கி, 'நீ அவட்கு உணர்த்துமாற்றா லுணர்த்து' என்று சொல்ல, அங்ஙனம் தோழி உணர்த்திய வளவிலே, அதுகேட்ட தலைவி மிகவருந்தி ஆற்றாது கண்ணுங் கண்ணீருமாய் மிகுதியாகப் புலம்ப, அவ்வருத்தங் கண்ட தோழி தலைவனிடம் வந்து அத்தலைவியின் பிரிவாற்றா நிலைமையைக் கூறுதல், இச்செய்யுளிற் குறிக்கப்பட்ட விஷயம். பொருள் செய்யப்போதலுமென் என்பதற்குத் தலைமகன் என்ற எழுவாயைத் தந்துரைத்து, பூமீசன் தொடக்கமான வற்றைப் பைம்பொற்கொடிக்கு விசேடணமாக்கலுமொன்று. 'பூமீசன் எந்தை' இருள்செய்யுங் கண்டத்தார்' என்றது முன்னிலைப்படர்க்கை. இனி இவற்றை இயல்பாகிய அண்மைவிளி யெனினும் அமையும். திருக்கோவையாரிலே, பொருள்வயிற் பிரிவில் ஆற்றாமை கூறலென்னுந் துறைக்கு இலக்கியமாகிய செய்யுளில், "மலர்க் கண்கண்முத் தம்வளர்க்கும், தேனக்க தார்மன்ன னென்னோ வினிச்சென்று தேர்பொருளே" என்றவிடத்து, பேராசிரியர் 'மன்னனென்பது, ஈண்டு முன்னிலைக்கண் வந்தது : இயல்புவிளி யென்பாரு முளர்' என்றதுங் காண்க. பண்ணின்ற செம்பவளம் என்றது வாயை. கண் - விழி. முத்து - கண்ணீர். பவளத்தோடுகூடிய பொற்கொடியொன்று முத்தைச் சொரியாநிற்கக் கண்டும் பொருள் செய்யப்போதலுமென் ? எனவும், பைம்பொற் கொடிபோன்ற தலைவி கண்ணீர் சொரிந்து வருந்துதலைக்கண்டும் பொருள் செய்யப் போதலுமென் எனவும், இரு பொருள் தரக்கூறினாளென்க. பொருள் செய்தல் - பொருள்தேடுதல். "செய்க பொருளை" என்றார் நாயனாரும். தம்மை நம்பிய ஒரு மெல்லியலைக் காக்க இயலாத இவரோ முன்னம் விஷத்தையுண்டு திருமால் முதலியவர்களைக் காத்தவர் என்று பரிகசிப்பாள், 'இருள்செய்யுங் கண்டத்தார்' என்றாள். விஷகண்டருக்குக் கிருபை எப்படி யுண்டாகும் என்ற குறிப்புமாம். 'புவனேசன் இருள்செய்யுங் கண்டத்தார்' என்றது ஒருமைப் பன்மை மயக்கம் : பால் வழுவமைதி. இதனை, சீவக சிந்தாமணியில், "பெற்றவன் நிமித்தத் தாலும்" என்ற தொடக்கத்துச் செய்யுளில் 'கொண்டவர் முனிவரன்' என்றது போலக் கொள்க ; "ஒருமை சுட்டிய பெயர்நிலைக் கிளவி, பன்மைக் காகு மிடனுமா ருண்டே" என்றார் தொல்காப்பியனாரும். இம்மயக்கம், இலக்கியங்களிற் சிறுவரவிற்று. "எனைத்துணைய ராயினு மென்னாந் தினைத்துணையுந், தேரான் பிறனில் புகல்" என்ற திருக்குறளின் உரையில் பரிமேலழகர், "'என்னி ரறியாதீர் போல விவைகூறல், நின்னீர வல்ல நெடுந்தகாய்" என்புழிப்போல உயர்த்தற்கண் பன்மையொருமை மயங்கிற்று' என்றதையும் உணர்க. (சுஉ)



கண்ணனார் கண்ணைக் கழல்வைத்தார் காமுற்ற
திண்ணனார் வைத்தார் திருமுகத்திற்—கண்ணனார்
கல்லடியாற் புண்பட்ட கண்ணுதலே! பூமீசா!
நல்லடியார் யாரே நமக்கு.

(இ - ள்.) கல் அனார் - கண்ணை யொத்தவராகிய சாக்கிய நாயனார் எறிந்த, கல் அடியால் - கல்லடியினாலே, புண்பட்ட - புண்பட்டவராகிய, கண்ணுதலே - பாலலோசனனே !, பூமீசா - பூமிநாதனே !, கண்ணனார் - கண்ணனாகிய திருமால், கண்ணை - தமது விழியை, கழல் வைத்தார் - திருவடியிலே வைத்தார் ; காமுற்ற விருப்பமுற்ற, திண்ணனார் - திண்ணனாராகிய கண்ணப்பர், திருமுகத்தில் - திருமுகத்திலே, வைத்தார் - தமது கண்ணை வைத்தார் ; (இவ்விருவரில்) நமக்கு - தேவரீருக்கு, நல் அடியார் யார் - நல்ல அடியவராயிருப்பவர் யாவர் ? (எ - று.) ஏ - ஈற்றசை.

கண்ணை யிடந்து அருச்சித்த காரணத்தால் கண்ணன் எனவும் கண்ணப்பர் எனவும் காரணத் திருநாமத்தை முறையே பெற்றவர்களான திருமால் திண்ணன் என்னும் இவர்களில் நமக்குச் சிறந்த நல்லடியார் யாவர் ? என வினவுகின்றன ரென்க. திருமாலை, நாராயணன் கோவிந்தன் முதலிய வேறு பெயராற் குறியாது, 'கண்ணனார்' என்ற பெயராற் குறித்தமையின் இந்நூலாசிரியர்க்கு, கண்ணன் என்ற திருநாமம் திருமாலுக்குச் சிவபெருமானைத் தமது கண்மலரை யிடந்து அருச்சித்த காரணத்தால் வந்தது என்பதே கருத்தாகத் தோற்றலின் யாமும் இக்கருத்தேபட வுரைத்தாம். சிறந்த அடியார்களில் ஒருவராதலால் திருமாலைக், 'கண்ணனார்' என்று உயர்வு குறிக்கும் அர் - விகுதி கொடுத்துக்கூறினார். காமுற்ற - காதல் கொண்ட. இங்கே காதல் என்றது, "காத லிருவர் கருத்தொருமித்-தாதரவு, பட்டதே யின்பம்" எனப்படுகிற உலகவாழ்க்கைச் சிற்றின்பத்தை யன்று. எம்பெருமானைச் சேரவேண்டுமென்று அவன் பக்கலிலே யுண்டாகிய அபேக்ஷையைச் சொல்லியது. லோகநாயகனாகிய சிவபெருமானுடைய சேர்க்கையை அபேக்ஷிக்கின்ற இப் பேரின்பக் காதல் வேதாந்த நிர்ணயத்தின்படி அன்பு செலுத்தவேண்டிய இடத்தில் அன்பைச் செலுத்தியதாதலால், சிற்றின்பக் காதல்போலன்றி, சகலபாபநிவ்ருத்திக்கும் வீடுபேற்றுக்குங் காரணமாதலால் அவசியங் கொள்ளத்தக்க தென்க. பரமாத்மாவினது தலைமையும், ஜீவாத்மாவினது அடிமையும், ஜீவாத்மா பரமாத்மாவுக்கே உரியதாயிருக்கையும், புருஷோத்தமனான சிவபெருமானது பேராண்மைக்கு முன் உலகம் முழுதும் பெண்தன்மையதாதலும், ஜீவாத்மாவினது ஸ்வாதந்தர்யம் இன்மையும், பாரதந்தர்யமும், தாம் எம்பெருமானது சேர்க்கையால் இன்பத்தையும் பிரிவினால் துன்பத்தையு மடைதலும், அவனையே தாம்

கரணங்க ளெல்லாவற்றாலும் அநுபவித்து ஆனந்தித்தலும் முதலிய காரணங்களால் சிவபெருமானைத் தலைமகனாகவும் அன்புடைய மெய்யடியார்களைத் தலைமகளாகவும் வைத்துக் கூறுதலில் தட்டில்லையென்க. கண்ணன் கண்ணிடந்து கழலில் வைத்தது சக்கராயுதத்தை யடையவேண்டி. திண்ணன் கண்ணிடந்து திருமுகத்தில் வைத்தது தலைமகனான சிவபெருமான் கண்ணுடையனாய்த் திகழவேண்டி. ஆனது பற்றியே திண்ணனார்க்கு, 'காமுற்ற' என்ற விசேடணங் கொடுக்கப்பட்டதென அறிக. மன்மதனை எரித்தவனை என்பார், 'கண்ணுதலே' என்றார். கல்லெறிந்த சாக்கியர்க்கு அருள் செய்தவனும் மலரெறிந்த மன்மதனை யெரித்தவனுமாகிய பூமீசனே! என்றது உள்ளன்பு கொண்டவர்களையே மெய்யடியார்களாகக் கொள்பவனே என்னுங் கருத்தைத் தந்து, உனது க்ஷேமமே தமது க்ஷேமமாகக் கொள்ளும் காமுற்றதிண்ணனார், பூசைமுறைக்கு ஏற்பக் கண்ணைக் கழலில் வைத்த கண்ணனினுந் தாழ்ந்தவர்போற் காணப்பட்டாலும், உள்ளன்பின் மிக்கவராதலால், ஸ்வப்ரயோஜனத்தை நாடிய அக்கண்ணனினும் சிறந்தவரான மெய்யடியார் என்பதில் ஸந்தேகமில்லை யென்பதாக 'நல்லடியார் யாரே நமக்கு?' என்ற வினாவிற்கு உத்தரத்தையுங் காட்டி நிற்றலையறிக. பின்னுள்ள கண்ணனார் என்கிற இடத்தில், அனார் என்பது - அன்னார் என்பதன் தொகுத்தல். சாக்கிய நாயனாரைக் கண்ணனார் என்றது அடியவர்கள் எல்லாருமே ஈசனுக்குக் கண்போன்றவர்கள் என்பதையும், ஆதலால் அவர்களும் கண்ணப்பர் என்று சொல்லுதற்குரியர் என்பதையுங் காட்டவந்த குறிப்பு. சிறுத்தொண்டர் என்பதற்குச் சிறிய தொண்டர் என்பதாகப் பொருள் செய்து விடாம லிருக்கும்படி, "பெருந்தொண்டராஞ் சிறுத்தொண்டர்" என்று கூறுவார்போல இவ்வாசிரியரும் திண்ணனார் என்பதற்கு மெய்வலியுடையார் எனப் பொருள்கொள்ளாம லிருக்கும்படி, அன்பினது வலியையுடையார் எனத் தாம் கொண்ட பொருளை வெளிப்படுத்தி, 'காமுற்ற திண்ணனார்' எனக்கூறினார் என்றலு மமையும். (௬௩)

நமக்குத் தலைமை நமக்கில்லை நெஞ்சே!
சுமக்கும் பிரான்சுழியற் றோன்றல்—நமக்குச்
சுதந்தரந்தான் றொண்டு சுவர்க்கமுத லாகும்
பதந்தரன்மற் றன்னோன் பரம்.

(இ-ள்.) நெஞ்சே - மனமே!, நமக்குத் தலைமை - நமக்குத் தலைவனாயிருக்குந் தன்மை, நமக்கு இல்லை - நமக்குக் கிடையாது, சுமக்கும் பிரான் - இத் தலைமையை வகிக்கும் பெருமான், சுழியல் தோன்றல் - திருச்சுழியலிலே யெழுந்தருளியிருக்கின்ற திருமேனிநாதனாவான்; நமக்குச் சுதந்தரம் - நமக்குப் பாத்தியமாயிருப்பது, தொண்டுதான் - பணிவிடையொன்று மாத்திரந்தான்; சுவர்க்கம் முதல் ஆகும் பதம் தரல் - சுவர்க்கம் முதலாகவுள்ள பதவிகளை நமக்குக் கொடுப்பது, அன்னோன் பரம் - அவனைச் சார்ந்த பொறுப்பு; (எ-று.)



நமக்குத் தலைமை நமக்கில்லை என்பது 'நம' என்ற சப்தார்த்தவிளக்கமென்க. சுமக்கும் என்றார் - பாரம் என்பது தோன்ற. சொத்து அவனுடையது; சொத்தை ரக்ஷிக்கவேண்டிய பொறுப்பும் கவலையும் அவனுக்கே; நெஞ்சே! நமது என்றெண்ணிக்கொண்டு நீ வீணாகக் கவலைப்படாதே. ஸ்வரூபாநுகுணமாக ஏற்பட்ட பகவத் கைங்கர்யத்தை மாத்திரம் நீ செய்துகொண்டிரு. பொறுப்பில்லாத இதுதான் நமக்குப் பரமசுகமாவது என்று நெஞ்சுக்கு உண்மையை விளக்கி உபதேசிக்கின்றனர் என்க. தோன்றல் - அரசன்; ஆண்பாற் சிறப்புப்பெயர். (௬௪)

பரமென்றும் நாலாய்ப் பணைத்தெழுந்த வேத
சிரமென்றுஞ் செஞ்சுவை யாழேழ்—சுரமென்றும்
தேவரசக் கானத்திற் செப்பும் பெருந்தெய்வம்
மாவரசக் கானத்தின் வாழ்வு.

(இ-ள்.) பரம் என்றும் - பரம்பொருள் என்றும், நாலாய்ப் பணைத்து எழுந்த வேத சிரம் என்றும் - இருக்கு முதலாகிய நான்கு சாகைகள் விட்டெழுந்த வேதத்தினது சிரமாகிய உபநிஷத்துக்கள் என்றும், செம் சுவை - செவ்விய சுவையை யுடையதாய், யாழ் - யாழினிடத்துண்டாகிற, ஏழ் சுரம் என்றும் - சப்த ஸ்வரங்களென்றும், தேவர் - நிலத்தேவர்களாகிய பிராமணர்கள், ரசக் கானத்தில் - ரசவத்தாகிய ஸாமகானத்தினாலே, செப்பும் - தோத்திரித்துச் சொல்லுகின்ற, பெரும் தெய்வம் - தனிப்பெருங் கடவுள், மா - பெருமைபொருந்திய, அரசக் கானத்தின் - அரசவனம் என்று சொல்லப்படுகின்ற திருச்சுழியலின், வாழ்வு - வாழ்வாயிருப்பவராகிய திருமேனிநாதனேயாம்; (எ-று.)

பணைத்தெழுதல் - கிளைவிட்டெழுதல். யாழ் - வீணை. தேவர் என்பதற்கு இடம்நோக்கி நிலத்தேவராகிய பிராமணர்கள் எனப் பொருளுரைக்கப்பட்டது. தேவர் என்பதன் ஈற்றுமெய் வருமொழிமுதலில் ரகரம் வரக் கெட்டது. ரசம் என்றது, "ரவிகுலதிலகன்" என்றாற்போல வந்தது. "நாதனை நாதமிகுத் தோசைய தானவனை" என்பது முதலிய அருளிச்செயல்களையுட்கொண்டு 'செஞ்சுவை யாழேழ் - சுரமென்றும்' என்றார். தரும தாவரமாதலின், 'மாவரசு' என்றார். மா - லக்ஷ்மீவிலாஸமுமாம். அரசக்கானம் - போதிவனம். மனைவி, மக்கள், செல்வம் முதலிய எல்லாவாழ்வும் தானாகவே இருப்பவன் என்பார் பொதுப்பட, 'வாழ்வு' என்றார். (௬௫)

வாழுந் திறத்தினர்யார் மாச்சுழிய லையாநின்
தாழுஞ் சடைநீர் தனுவளர—ஆழும்
பனிச்சோம சேகரனே பாவகரி மூழ்கும்
தனிச்சோம சேகரனே சாற்று.

(இ-ள்.) மா சுழியல் ஐயா - லக்ஷ்மீவிலாசத்தையுடைய திருச்சுழியல் என்னும் க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற பெருமானே!, நின் - உனது, தாழும் சடை நீர் - தாழ்ந்து வீழ்ந்துள்ள சடையினிடத்துள்ளதாகிய கங்காநதிப் புனலிலே, தனு வளர - குறைந்துள்ள தனது சரீரம் வளர வேண்டுமென்னும் அபேக்ஷையினால், ஆழும் - தினம் பிரதி யாழ்ந்து ஸ்நானஞ்செய்து கொண்டே யிருக்கின்ற, பனி சோம சீதளனே - சீதள கிரணனான வெள்ளிய சந்திரனே, பாவகரி - பாபஹரி என்னும் நதியிலே, மூழ்கும் - ஒருமுறை ஸ்நானஞ் செய்யப்பெற்றவனான, தனி - ஒப்பற்ற, சோம சீதளனே - சோமசீதளனென்னும் மாளவதேசத்தரசனே, வாழும் திறத்தினர் - (இவர்களில்) வாழுந் திறத்தைப் பெற்றவர்கள், யார் - யாவர்?, சாற்று - எனக்குச் சொல்லியருளாய்; (எ - று.)

சுழியல் நாதனே! வெண்குட்டரோக முடையவனாயிருந்த சோமசீதளனென்னும் மாளவதேசத்தரசன் ஒருமுறை பாபஹரி நதியிலே ஸ்நானஞ் செய்த மாத்திரத்தில் அந்நோய்தீர்ந்து திவ்யசரீரத்தைப்பெற்றவனாய் நுமது திருவருளைப்பெற்று மகிழ்ந்தான்; உமது சடையிடத்ததாகிய கங்காநதியிலே ஸதா ஸ்நானஞ்செய்துகொண்டே யிருப்பவனாகிய சந்திரன் இன்னுந் தனது வெண்குட்டந்தீராமலே வருந்தியிருக்கின்றான்; இவர்களில் வாழுந் திறத்தினர் யார்? என்று வினவுமுகத்தால் பாபஹரியானது கங்கையினும் பாவனமானது என்பதை ஸ்தாபிக்கமுயல்கின்றனர் என்க. 'நீர்' என்றதனால் அதன்மஹிமை கேட்டறியவேண்டும் என்பதும், 'பாவகரி' என்றதனால் இதன்மஹிமை பெயராலேயே வெளிப்படை என்பதும் கொள்ளப்படுமாறு காண்க. பனி - வெண்மை; வெண்குட்டரோகத்தை யுடையான் என்பதைக் காட்டுமாறு இவ்வாறு கூறினர். பனி - துன்பமுமாம். அருள் பெற்றமையாலும், தனிச்செங்கோல் செலுத்தினமையாலும், 'தனிச்சோம சீதளன்' என்றார். தாழுஞ் சடைநீர் என்ற இடத்தில், தாழ்தல் நீருக்குங் கொள்ளப்பட்டு, பாவகரியிற் றாழ்ந்ததான கங்கை என்ற பொருளையுந் தந்து நிற்றல் உய்த்துணரத்தக்கது. நின் என்பதைப் பாவகரிக்குங் கூட்டுக. சோம சீதளன் மன்னனது மற்றைய விருத்தாந்தத்தைத் தலபுராணத்துப் பாவகரிச் சருக்கத்தாலறிக. (௬௬)

சாற்றிற் சடைமேற் றனிமதியும் வேண்டுமோ
ஏற்றின் மணியொன் றிசையாதோ—போற்றி
ஒருமா லினியளித்தார்க் கோயாதே வந்திங்
கிருமா லினியளிப்பார்க் கின்று.

(இ-ள்.) ஒரு மாலினி போற்றி அளித்தார்க்கு - முன்னம் வேதாளத்தாற் பீடிக்கப்பட்டிருந்த மாலினியென்னும் ஒரு ராஜகுமாரத்தியை அப்பீடையினின்றும் விலக்கி ரக்ஷித்தருளியவருக்கு, ஓயாதே இன்று இங்கு வந்து - ஓயாமல் அடிக்கடி இப்போது இங்கே வந்து, இருமால் இனி அளிப்பார்க்கு - பெரிய மையலை இனியும் அளித்துச் செல்லவல்லவராகிய திருமேனிநாதருக்கு, சாற்றில் - சொல்லப்புகில், சடைமேல் - சடையின்மீதுள்ள, தனி மதியும் வேண்டுமோ - ஒப்பற்ற சந்திரனும் வேண்டுமோ, ஏற்றின் மணியொன்று இசையாதோ - (தமது) இடபத்தின் கழுத்திற் கட்டிய மணியொன்றே போதாதோ? (எ - று.)

அடிக்கடி இங்கேவந்து என்னைப் புணர்ந்து பிரிந்து மிகுந்த மையலையளித்து என்னைக் கொல்ல நினைப்பவராகிய திருமேனிப்பெருமானுக்கு விடைமணியொன்றே என்னைக் கொலைசெய்ய அமையுமே, தனிமதியும் வேண்டுமோ என்பதாம். இது, தலைமகனது பிரிவாற்றாத தலைமகள் பிறைமுதலியவற்றான் வருந்தி யிரங்கியது என்க. சகாயம் வேண்டாதே தானே கொல்லவல்ல மதி என்பாள், 'தனிமதி' என்றாள். சேர்ந்திருக்குங் காலத்தே ஆண்மை செலுத்தமாட்டாமல் தனித்திருக்குங்காலத்தில் ஆண்மை செலுத்தும் மதி என்றலுமாம். ஏற்றின் மணியோசை பிரிந்தாரை வருத்து மென்றதனை, "தென்றற்கும் வீணைக்குஞ் சேமணிக்குங் கோகிலத்துக், கன்றிற் கமைக்காழிக் கம்புலிக்கு - நின்றாற்று, மன்னைக்கு மாரற் கயர்ந்தாளென் றன்னமே, என்னைக்கு மாரற் கியம்பு" என்பதனானு மறிக. இசைதல் - அமைதல். மாலினி - ஹேமரதன் என்னும் சோராஜனது புதல்வி. வேதாளத்தாற் பீடிக்கப்பட்ட ஒரு ராஜகுமாரத்தியைக் காத்தவன் மன்மதனாற் பீடிக்கப்பட்ட என்னைக்காக்கின்றானில்லையே என்னுங் குறிப்புத்தோன்ற, 'ஒருமாலினியளித்தார்' என்றாள். முன்னம் ஒருமாலினியளித்தார்; அத்தோடு நில்லாது இப்போது இருமாலினி யளிக்கவந்தார் என்ற கவிசாதுர்யம் வியக்கத் தக்கது. இருமை - கருமையுமாம். இச்செய்யுளை, "ஏற்றின் மணியே யமையாதோ வீர்ஞ்சடைமேல், வீற்றிருந்த வெண்மதியும் வேண்டுமோ—ஆற்றருவி, கன்மேற்பட் டார்க்குங் கயிலாயத் தெம்பெருமான், என்மேற் படைவிடுப்பார்க் கிங்கு" என்ற நக்கீரதேவனாரது செய்யுளோடு ஒப்பு நோக்குக. (௬௭)

இன்று புவனேசன் என்னை யிவன்றுதித்தான்
என்று மகிழ்ந்தெனக்கும் பாசுபதம்—ஒன்ற
அருள்படுத்தா னாகையினாற் கௌரவன்யா னைவர்
இருள்படுத்தேன் தன்மநிலத் தேய்ந்து.

147140

(இ-ள்.) புவனேசன் - ஸ்ரீ பூமிநாதன், என்னை இவன் துதித்தான் என்று - நம்மை இவன் துதிசெய்தான் என்பதாக, மகிழ்ந்து - மகிழ்ச்சியையடைந்து, இன்று - இப்போது, எனக்கும் - அடியேனுக்கும், பா சுபதம் ஒன்ற - அடியேன் செய்யும் பாட்டானது நல்ல நல்ல பதங்களோடு சேர்ந்து விளங்கும்படியாக, அருள் படுத்தான் - கிருபைசெய்தருளினான்; ஆகையால் - ஆகையினாலே, கௌரவன் யான் - கௌரவத்தைப் பெற்றவனான அடியேன், தன்ம நிலத்து - தர்மமானது விருக்ஷரூபமாக வளர்ந்திருக்கின்ற உத்தம க்ஷேத்திரமாகிய திருச்சுழியலிலே, ஏய்ந்து - பொருந்தி, ஐவர் இருள்படுத்தேன் - பஞ்சேந்திரியங்களாகிய பகைவரை ஒழித்திட்டேன்; (எ - று.)

எனக்கும், உம்மை - இழிவுசிறப்பு. சு பதம் - ஸுபதம்; நல்ல சொல். ஒன்றல் - சேரல். படுத்தல் - செய்தல். "இடர்ப்படுத்திரீஇய" என்றார் புறப்பாட்டினும். கௌரவன் - கௌரவ்யன். "சௌந்தர பாண்டியன்" என்றாற்போல நின்றது. ஐவர் - என்றது, ஞானேந்திரியங்களாகிய மெய் வாய் கண் மூக்கு செவி எனப்படும் ஐந்தினையும்; தொகைக்குறிப்பு. கொடுமை காரணமாக இழித்துக்கூறுவார், 'ஐவர்' என்றார்; 'நரியார்' என்றாற்போல. இருள் - பகையிருள். "இருளறுக்கும், எண்ணிய தேயத்துச் சென்று" என்றார் நாயனாரும். படுத்தல் - ஒழித்தல். தன்மநிலம் - தன்மம் தங்குமிடம். இதன் விவரம் காப்புச் செய்யுளின் உரையிற் காட்டப்பட்டது. ஏய்தல் - பொருந்துதல். இனி இச்செய்யுளில், ஸ்ரீ பூமிநாதன் கௌரவனாகிய எனக்கும் பாசுபதம் என்னும் அஸ்திரத்தைக் கொடுத்தருளினான்; ஆகையால் நான் தர்மக்ஷேத்திரமாகிய குருக்ஷேத்திரத்திலே போய்நின்று பஞ்சபாண்டவர்களாகிய பகையிருளை அறுத்திட்டேன் என மற்றொருபொருளுந் தோன்றுதல் காண்க. அப்பிரஸ்துதமான மற்றொருபொருள் தோற்றுவதால், இது சமாசோக்தி என்னும் அணி. இப்பொருளில், கௌரவன் என்பது குருவம்சத்தவராகிய துர்யோதனாதிகள் நூற்றுவரில் ஒருவன் என்பதையும், தன்மநிலம் என்பது தர்மக்ஷேத்திரமாகிய குருக்ஷேத்திரம் என்பதையுங் காட்டி நின்றது. (௬௮)

ஏய்ந்தபெருங் கால்கடுக்க எங்குந் திரிந்தெடுத்துத்
தோய்ந்தபெருஞ் செல்வச் சுழிகேசா! —ஆய்ந்தபெரும்
கள்ள மலரொளியார் காறாவு வாரறியார்
உள்ள மலரொளியா நின்று.

(இ - ள்.) தோய்ந்த - படிந்துள்ள, பெரும் செல்வம் - பெரிய செல்வத்தினையுடைய, சுழிகேசா - சுழிகையென்னுந் தலத்திலெழுந்தருளியிருக்கின்ற ஈசனே!, அறியார் - அறியாத மூடஜனங்கள், உள்ளம் மலர் - மனமாகிய மலரை, ஒளியா நின்று - (உமது திருவடியிற்சேர்க்க மாட்டாமல்) மறைத்து வைத்துவிட்டு, ஏய்ந்த பெரும் கால் கடுக்க - வலிபொருந்திய தமது பெரிய கால்களிரண்டுங் கடுக்கும்படியாக, எங்கும் திரிந்து - காடு மலை முதலிய எல்லாவிடத்திலும் அலைந்து, எடுத்து - கொய்து, ஆய்ந்த - பூசைக்கு யோக்கியமாம்படி பழுது பார்த்து ஆராய்ந்த, பெரும் கள்ள மலர் - மதுநிறைந்த பெரிய பெரிய பூக்களையெல்லாம், ஒளி ஆர் கால் - ஒளி பொருந்திய (நமது) திருவடியிலே, தூவுவார் - அருச்சிக்கின்றார்கள்; இது என்னே? (எ - று.)

உள்ளமலரைத் தூவாது கள்ளமலரைத் தூவி வழிபடுகின்ற அறிவில்லாரது பூஜை பிரயோஜன மற்றது என்பதாம். கால் கடுக்க - கந்தவஹனை காற்றைப்போல என்றலுமாம். கால் - காற்று. கடுத்தல் - ஒத்தல். இனி, பெருங்கால் என்பதற்குப் பெருகிய காலையுடையதாகிய அறுபதம் எனப் பொருள்கோடலும் அமையும். காற்றைப்போல எங்குந்திரிந்து, வண்டைப்



போல எல்லாமலரையும் ஆய்ந்து என்பார் இங்ஙனம் இருபொருள்பட வைத்தார் என்க. ஒன்றைவிட்டொன்று பிரியாது இணைந்தே செல்லும் காற்றையும் வண்டையும்போல என்றுரைத்தலும் ஒன்று. "வண்டொடு புக்க மணவாய்த் தென்றல்" எனச் சிலப்பதிகாரத்திலும், "வண்டொடு காலையும் வரவு மாற்றினான்" எனக் கம்பராமாயணத்திலும் கொங்குதேர் வாழ்க்கையினவாகிய இவை இரண்டும் இணைந்துசெல்லுமென்ற விஷயங் கூறப்பட்டிருத்தல் காண்க. கள்ள மலர் - தேனையுடையமலர். கள் - தேன். சுடரடி யாதலின், 'ஒளியார்கால்' என்றார். உள்ளமலர் - தம்மிடத்துள்ளதாகிய மலர் என்றுமாம். இருக்கிற மலரைக்கொண்டு வழிபடமாட்டாது இல்லாத மலர்களைக் கொய்தலைந்து வருந்துகின்றமைபற்றி, 'அறியார்' என்றார். காற்கடுப்பே பிரயோஜனமாக முடிதலின், பயனறியார் என்றலுமாம். மோப்பக் குழையும் அனிச்சமலரை நெருஞ்சிப்பழமாக மிதிக்கின்ற மென்மை பொருந்திய திருவடிகள் கடுக்கும்படியாக அத்திருவடியிடத்தே குவியலாக மலரைச்சொரிதலின், 'அறியார்' எனக்கூறினருமாம். அழியும் இயல்பினதாகிய இம்மைச் செல்வத்தி லொருசிறிதுடையார் காலுமன்றே மெத்தென்றிருப்பது; இருபெருஞ் செல்வத்திறையோனது திருவடியின் மென்மை சொல்லவொண்ணுமோ என்னுங் கருத்தாலே, 'தோய்ந்தபெருஞ் செல்வச் சுழிகேசா' எனவிளித்தார். இனி இச்செய்யுளில், காற்றைப்போலே உருத்தெரியாது செவ்விபார்த்து மெதுவாக நுழைந்து அலைந்தப் பறித்து வந்த திருட்டுப்பூக்களை ஒளித்துவைக்க வேண்டியிருக்க அங்ஙனஞ்செய்யாது அவற்றைச் செல்வக்குறைபாடில்லாத இறைவனை நமது மறுவற்ற சேவடிக்கீழ்ச் சேர்க்கின்றார்; ஒளிக்கவேண்டாததும் தம்மிடத்து உள்ளதுமாகிய மலரொன்றை ஒளிக்கின்றார்; இத்தகைய அறிவீனர்களது திருட்டுப் பூசை நமக்கு ஏற்குமோ என மற்றொரு பொருளுந் தொனிக்கின்றமை காண்க. எடுத்து - அபகரித்து. பகற்கொள்ளை யாதலின், 'பெருங்கள்ளம்' என்றார். இங்ஙனம் கூறின் இராக்காலத்து மலர் சேராதே யெனின், அற்றன்று: தாமரை முதலிய மலருங்காலத்து ஆம்பல் முதலியன குவியா என்க. "கழுநீ ராம்பல் முழுநெறிக் குவளை, யரும்புபொதி யவிழ்ந்த சுரும்பிமிர் தாமரை, வயற்பூ வாச மளைஇ" என்ற சிலப்பதிகாரத்தையும், "ஆம்பல் அவற்றோடு ஒருதன்மைத்தாகிய பகற்போது அன்றெனினும் அவை விரியுங்காலத்து இது குவிதலின்மையிற் கலந்துண்டு என்றார்" என்ற அடியார்க்கு நல்லாருரையையுங் காண்க. கள்ளமலர் - திருட்டுப்பூ. ஒளியார் - ஒளித்துவையாதவராய். உள்ளமலர் - சொந்தமாயுள்ளமலர். ஒளியாநின்று - ஒளித்துநின்று. (௬௯)

நின்றான் கிடந்தான் நெருநல் அவனின்று
சென்றான் எனப்படுமிச் செல்வத்தை—ஒன்றா
நினைவிருக்க வையனையும் நெஞ்சேநீ நீழற்
புனைவிருக்க வையனையே போற்று.

(இ - ள்.) நெருநல் - நேற்று, நின்றான் - நின்றுகொண்டிருந்தான், கிடந்தான் - படுத்துக்கொண்டிருந்தான், அவன் - அந்த மனிதன், இன்று சென்றான் - இன்றைக்கு இறந்துபோய்விட்டான்; எனப்படும் - என்று சொல்லப்படுகின்ற, இச் செல்வத்தை - இப்படிப்பட்ட உலக வாழ்க்கையை, நையும் நெஞ்சே - நீள நினைந்து புண்ணாகி நையும் எனது நெஞ்சமே!, ஒன்று - ஒருபொருளாக, நீ நினைவு இருக்க வையல் - நீ மனத்திலே தங்கும்படி வைக்காதே; நீழல் - குளிர்ந்த நிழலையுடைய, புனை விருக்க ஐயனையே - புன்னை விருக்ஷத்தின்கீழ் எழுந்தருளியிருக்கின்ற திருமேனிப்பெருமானையே, போற்று - வைத்தமாநிதியாகக் கருதித் துதிசெய்; (எ - று.)

ஒன்று - ஒன்றாக. புனை - புன்னை. விருக்கம் - விருக்ஷம். "செல்வமொன்றுண்டாக வைக்கற்பாற் றன்று" என்றாற்போல, 'செல்வத்தை - ஒன்று, நினைவிருக்க வையல்' என்றார். செல்வம் என்றார் .பொய்வாழ்க்கையை; எதிர்மறையிலக்கணை. "நெருந லுளனொருவனின் றில்லை யென்னும், பெருமை யுடைத்திவ் வுலகு" என்ற குறளிற், 'பெருமை' என்பதுபோல. (௭௦)

போற்றார் புரமெரித்தாய் புன்சிரிப்பா லென்றுன்னைத்
தோற்றா ரசகாய சூரனென்பார்—மாற்றார்
தனுநாதா! முன்னஞ் சகாயந்தா னின்றேல்
தனுநாதா! தாங்குவையோ சாற்று.

(இ - ள்.) போற்றார் - பகைவர்களுடைய, புரம் - திரிபுரத்தையும், புன்சிரிப்பால் - புன்னகையினாலே, எரித்தாய் என்று - தகனஞ்செய்தீர் என்று, உன்னை - உம்மை, தோற்றார் - ஆற்றமாட்டாதவர்கள், அசகாய சூரன் என்பார் - பிறருடைய சகாயத்தை எதிர்பாராத சூரர் என்று சொல்லுகிறார்கள்; நாதா - நாதனே!, (இது உண்மையா யிருக்குமாயின்) மாற்று ஆர் தனு - உயர்ந்த மாற்றேறி கூடின சுவர்ணமயமாகிய மேருவாகிய வில்லை, முன்னம் - முன்பு, சகாயந்தான் இன்றேல் - சகாயமானது உமக்கு இல்லாதிருந்திருக்குமாயின், தனுநாதா - திருமேனிப்பெருமானே!, தாங்குவையோ - நீர் தாங்கவல்லவரோ, சாற்று - சொல்லும்; (எ - று.)

போற்றார் - வணங்காதவர்; பகைவர். தோற்றார் - பராக்கிரமத்தில் ஈடுபட்டவர்களுமாம். ஒன்றுந்தோற்றாத பிராமகர்கள் என்றலும் ஒன்று. மாற்றார் தனு என்பதற்குச் சத்துருக்களை அழிக்கவல்ல வில் என்றலும் அமையும். மாற்றார் - பகைவர். சகாயம் என்றது தேவியாகிய சகாயவல்லியை. வில்லைப்பிடிப்பது இடதுகையே யாகையாலும், அவ்விடது கைதான் தேவியின் திருக்கையாக இருப்பதாகையாலும், சகாயம் இல்லாமற்போனால் நீர் எப்படி முன்னம் மேருமலையாகிய சிலையைக் கையிலே எடுத்துப் பிடிப்பீர் சொல்லும் என வினவினர் என்க. இதனால், திருமேனிப்பெருமான் ஸகாயத்தை எதிர்பார்க்கின்ற சூரரேயாம் என்பதும், அறியாத பிராமகர்கள் கூறுகிறபடி அசகாய சூரர் அல்லர் என்பதுங் கூறியவாறாம். "நெடுவலி



கொடுமா மேருவிற் பிடித்தாய் நீயஃ துணர்குவன் யானும், அடுதிறற் சூலி பிடித்தனன் என்பா ரவனியுட் சிலர்கருத் தென்னோ, இடுகிடை நீயும் அவனும்வே றல்லீ ரென்பதை யுணர்ந்தனர் கொல்லோ, கடுவிழி மடவார் பயிறிரு வானைக் காவகி லாண்டநா யகியே" என்ற திருவானைக்கா அகிலாண்டநாயகிமாலைச் செய்யுள் இங்கு நோக்கத்தக்கது. இன்றேல் என ஒன்றன்பாலிற் கூறினர் தெய்வமாகலின் என்க. இது பழித்ததுபோலப் புகழ்தல்; நிந்தாஸ்துதி. (௭௧)

சாற்றும் வரைமகளைச் சார்ந்தும் வரைமலர்க்கை
யேற்றும் வரையிருந்து மேர்வரையாய்த்—தோற்றுந்
திருமேனிப் பெம்மான் திருவுளத்திற் காமென்
கருமேனிக் காழ்மனமாங் கல்.

(இ - ள்.) சாற்றும் - வேதங்களினாலே புகழ்ந்து பேசப்படுகின்ற, வரைமகளை - பார்வதிதேவியை, சார்ந்தும் - மனைவியாகத் தழுவியும், வரை-மேருமலையை, மலர்க் கை - மலர்போன்ற கையினிடத்தே, ஏற்றும் - வில்லாகக் கொண்டும், வரை இருந்தும் - திருக்கயிலாய மலையினிடத்தே எழுந்தருளியிருந்தும், (திருப்தியடையாமல்) ஏர் வரையாய் - உன்னதமான பர்வத வடிவாகவும், தோற்றும் - ஆவிர்ப்பவித்தருளிய, திருமேனிப் பெம்மான் - திருமேனிப் பெருமானது, திருவுளத்திற்கு - திருவுள்ளத்தினுக்கு, என் - அடியேனுடைய, கருமேனிக் காழ் மனமாம் கல் - இருணிறங்கொண்ட மனமாகிய கருங்கல்லானது, ஆம் - எழுந்தருளியிருப்பதற்கு இனிய ஸ்தானமாக அங்கீகரிக்கத்தக்கதாம்; (எ - று.)

சாற்றும் வரை - பர்வதமென்று தனியே சொல்லத்தக்க மலை என்றுமாம். ஏர் வரை - எழுச்சியையுடைய மலை; ஏர் - எழுச்சி. "ஏரிளவனமுலை" என்றார் பிறரும். ஏர் - அழகுமாம். காழ் - கருமை; வயிரமுமாம். எல்லா விதத்திலும் தனக்குப் பர்வதஸம்பந்தம் இருக்கவேண்டுமென்பதாக விரும்புகிற பர்வதரூபியான திருமேனிப்பெருமானது திருவுள்ளத்திற்கு எனது மனமாகிய கல் வஸிப்பதற்கு மிகவும் உவப்பானது என்பதாம். பார்வதி - பச்சைநிறம்; மேரு - மஞ்சணிறம்; கைலை - வெண்ணிறம்; தழற்பிழம்பாகிய மலை - செந்நிறம்; ஆகையினால், திருமேனிநாதனுக்கு நிறவேறுபாடு திருவுள்ளமாம் என்பது கருதித் தமது மனக்கல்லைக், 'கருமேனிக் காழ்மனமாங் கல்' என்றார். இச்செய்யுளின் தாத்பர்யம், "வரையக மமர்ந்தும் வரைகரங் கொண்டும் வரையுத வொருமகட் புணர்ந்தும், புரையிலோர் தலத்து வரையுரு வெடுத்தும் பொலிவைநின் மனம்வரை யன்றே". எனவும், "வலியவ னினது மனமதன் மாட்டு மருவுறே னென்றுநீ யிசைக்கிற், பொலிபருப் பதமங் தரமுத லிடத்துப் புணர்ந்தது தகாததாய் முடியும்" எனவும் வரும் பின்னுள்ளாரது செய்யுட்களிலும் ஒருவாறு குறிப்பிடப்பட்டிருத்தல் காண்க. சார்ந்தும், ஏற்றும், இருந்தும் என்ற எச்சங்களைத் தோற்றும் என்பதனோடு முடிக்க. திருமேனிப்பெம்மான் என்பதனை இயல்பாகிய அன்

மைவிளி என்று கொண்டு, பெருமானே ! நினது திருவுள்ளத்திற்கு என் காழ் மனமாங் கல் ஆகும் என்று முடித்தலு மொன்று. ஆகும் - ஆம் ; ஈற்றுயிர் மெய் போயிற்று. காழ் என்றது வினைத்திண்மையை. (எஉ)

கற்று வறியாத கன்றில்லைத் தன்கன்றைப்
பெற்று நனியறியும் பேருலகின்—நற்றாய்
புனேயடிவாழ் நீயென்னிற் பூமீசா ! என்னே
உனேயடியேன் காண்கிலன்மற் றோது.

(இ - ள்.) ஆ - தாய்ப்பசுவை, கற்று அறியாத கன்று இல்லை - (இதுதான் நம்மையீன்ற தாய் என்பதாகத்) தெரிந்துணராத கன்று உலகத்தில் இல்லை ; தன் கன்றை - தன்னுடைய கன்றை, பெற்ற ஆ - பெற்ற தாய்ப்பசுவும், நனி அறியும் - (இதுதான் நாமீன்ற கன்று என்பதாக) நன்ருகத் தெரிந்துகொள்ளும் ; பேர் உலகின் நல் தாய் - பெரிய இந்தப் பிரபஞ்சங்களுக்கெல்லாம் நல்ல தாயாய் இருப்பவன், புனே அடி வாழ் நீயென்னின் - புன்னேமரத்தடியிலே வஸிக்கின்ற நீயே என்பது உண்மையாகுமானல், பூமீசா - பூமிநாதனே !, உனே அடியேன் காண்கிலன் - (நீ என்னேக் காணவல்லவனுக) உன்னே யடியேன் காணமாட்டாதவனு யிருக்கின்றேன்; என்னே - இதற்கு என்ன காரணமோ?, ஓது - அதை இன்னதென்று எனக்குத் தெளியச் சொல் ; (எ - று.)

கற்ரு - கன்றையுடைய பசுவுமாம். கற்று என்பதற்கு அடையாளத்தைக் கற்று என்றுரைத்தலு மமையும். பெற்ரு என்னுமிடத்தில், அகரம் - தொகுத்தல். பெற்ரு என்பதற்குப் பெரிய பசு என்றும், பெற்றமாகிய பசுவென்றும் உரைக்கலாம். கன்றைப்பெற்று என இயைத்தலும் பொருந்தும். நற்ருய் - ஈன்றதாய். செவிலித்தாயை விலக்க இங்ஙனங்கூறினர். இச்செய்யுள், "தாய்தன்னே யறியாத கன்றில்லைத் தன்கன்றை, யாயு மறியும் உலகின்ரு யாகினேய, நீயறிதி யெப்பொருளும் அவையுன்னே நிலையறியா, மாயமிது வென்கொலோ வாராதே வரவல்லாய்" என்ற கம்பராமாயணச் செய்யுளே யடியொற்றி வந்திருத்தல் காண்க. "பல்லாவு ளுய்த்து விடினுங் குழக்கன்று, வல்லதாந் தாய்நாடிக் கோடலே" என்ற நாலடிவாக்கியம் இங்கே கவனிக்கத்தக்கது. வாத்ஸல்யாதிசயத்தை யுத்தேசித்துப் பசுவைத் திருட்டாந்தமாகக் கூறினர். பசுக்கள் மரத்தடியிலே தங்கப்பெறுவதோ ரொற்றுமையுந் தோற்றப், 'புனேயடிவாழ் நீ' என்ருர். (எஙு)

ஓதும் பிறைபொடிநீ ரோங்கல் விடைமுதலா
ஏதும் வெளுப்பாக ஏற்றருளும்—வேதத்
துதியவனுந் தென்சுழியற் ருேன்றலுக்கிவ் வெள்ளே
மதியவனே யாட்கொளலு மாண்பு.

(இ - ள்.) ஓதும் - பதினெண் கணங்களாலும் புகழ்ந்து சொல்லப்படுகின்ற, பிறை - பிறைச்சந்திரனும், பொடி - விபூதியும், நீர் - கங்கையும், ஓங்கல் - திருக்கயிலாய மலேயும், விடை - இடபமும், முதலா - முதலாக, ஏதும் - பிற எதையுமே, வெளுப்பு ஆக - வெண்ணிறமுடையதாக, ஏற்று அருளும் - ஏற்றுக்கொண்டருளும், வேதத் துதியவனும் தென் சுழியல் தோன்றலுக்கு - வேதகானத்தால் துதிக்கப்படுகின்றவனுகிய அழகிய சுழியலினிடத்தே யெழுந்தருளியிருக்கின்ற இறைவனுகிய திருமேனிப் பெருமானுக்கு, இ வெள்ளே மதியவனே - இந்த வெள்ளறிவுடையவனே, ஆட்கொளலும் - ஆட்கொண்டருளுதலும், மாண்பு - மாட்சிமையைத் தருவதாகும் ; (எ - று.)

"பிறைநுதல் வண்ண மாகின் றப்பிறை, பதினெண் கணனும் ஏத்தவும் படுமே" என்பவாகலால், 'ஓதும் பிறை' என்ருர். ஸத்வகுணமூர்த்தி யென்பார், 'வேதத் துதியவனுந் தோன்றல்' என்ருர். வெள்ளேமதி என்ற இடத்தில், வெண்மை - அறியாமை. இச்செய்யுளே, "வெள்ளிய பிறைநீர் நுண்பொடி துரோணம் விடைவரை யானேமுற் பலவுந், தள்ளிய விலாநீ வெள்ளறி வுடையேன் றன்னேயுங் கொள்வது வழக்காற், புள்ளிய லோவ மாடமேன் மடவார் புலவியிற் குழனின் றுங் கழித்த, கள்ளியன் மாலேக் கரம்பைய ருடுங் கலேசைவாழ் சிதம்பரேச் சுரனே" என்னும் பின்னேரது செய்யுளோடு ஒப்பு நோக்குக. (எச)

மாணிலான் பித்தன் வயலூரான் றன்றலேமேல்
நாணிலான் மூன்றே நவைபொறுக்கும்—வாணிலாக்
கங்கையைக் கொண்டான் கணக்கில் பிழைபொறுக்கும்
மங்கையைப் பாகத்தே வைத்து.

(இ - ள்.) வயலூரான் - வயலூரிலே எழுந்தருளியிருக்கும் திருமேனிநாதன், கணக்கு இல் பிழை பொறுக்கும் - கணக்கில்லாத பல பிழைகளேப் பொறுப்பவளான, மங்கையை - மங்கையாகிய ஸகாய வல்லியை, பாகத்தே வைத்து - தனது திருமேனியின் ஒரு பகுதியிலே வைத்து, மூன்றேநவை பொறுக்கும் - மூன்று பிழைகளளவே பொறுப்பவளான, வாள் நிலாக் கங்கையை - ஒள்ளிய நிலாவையொத்த வெள்ளிய கங்காதேவியை, நாண் இலான் - சிறிதும் நாணமில்லாதவனுய், தன் தலேமேல் கொண்டான் - தனது தலேயின்மேலே வைத்துக்கொண்டான் ; (ஆகையால்) மாண் இலான் - மாட்சியில்லாதவனுய், பித்தன் - பித்த னென்று சொல்லத்தக்கவனுய் இருக்கின்ருன் ; (எ - று.)

வெண்ணிற முடையளாகலால், 'வாணிலாக் கங்கை' என்ருர். வாள் நில்லாக் கங்கை என்றுரைத்து, அளவில் பிழைபொறுக்கும் உமாதேவியாரது குணமேம்பாடு கண்டு ஒளிகுன்றி வெட்கிய கங்கை எனக்கோடலுமாம். நாணிலாள் என்றும் பாடம். நவை - குற்றம். இச்செய்யுளே, "அளவறு பிழைகள் பொறுத்தரு ளின்னே யணியுருப் பாதியில் வைத்தான், றளர்பிழை மூன்றே பொறுப்பவ டன்னேச் சடைமுடி வைத்தன னதனுற்,பிளவியன் மதியஞ் சூடிய பெருமான் பித்தனென் ருெருபெயர் பெற்ருன்,

களமர்மொய் கழனி சூழ்திரு வானைக் காவகி லாண்டநா யகியே" என்ற அகிலாண்டநாயகிமாலைச் செய்யுளோடு ஒப்புநோக்குக. (௭௫)

வைய நெடுந்தேர் வயலூரா! நீயுறையும்
வெய்ய பிறவி விடாய்தணிக்கும்—செய்ய
குளிர்நாகத் தார்மரமோ கூறிற் சிறந்த
தொளிர்நாகத் தார்மரமோ வோது.

(இ - ள்.) வையம் - பூமியாகிய, நெடும் தேர் - நெடிய தேரினையுடைய, வயலூரா - வயலூர் நாதரே!, நீ உறையும் - நீர் வசிக்கின்றதும், வெய்ய-கொடிய, பிறவி - பிறவியினுலாகிய, விடாய் - சிரமத்தை, தணிக்கும்-தணிக்க வல்லதுமாகிய, செய்ய - செவ்விய, குளிர் - குளிர்ந்த, நாகம் - புன்னுக மாகிய, தார் மரமோ - மலர்கள்நிறைந்த விருக்ஷமோ, கூறில் - சொல்லப் புகின், ஒளிர் நாகத்து ஆர் மரமோ - பிரகாசிக்கின்ற தேவலோகத்தினிடத் துப் பொருந்திய கற்பகவிருக்ஷமோ, சிறந்தது - சிறப்புடையது, ஓது - எனக்குச் சொல்லும்; (எ - று.)

வையத்தைத் தேராக்க வல்லானுக்கு மரமும் ஒரு இனிய வீடாகுமென் பார், 'வைய நெடுந்தேர் வயலூரா' எனவும், 'நீ உறையுங் குளிர்நாகத் தார்மரம்' எனவுங் கூறினர் என்க. நாகம் - புன்னுகம். தார் - மலர். நாகம் - தேவலோகம். அது, பொன்மயமாயிருப்ப தாகலின், 'ஒளிர்' என்ற விசேடணங் கொடுக்கப்பட்டது. நாகத்தார் மரம் - விண்ணோர்களது மரம் என்றலுமாம். பிறவி விடாயைத் தணிக்கமாட்டாத கற்பக மரம் சிறப்பு உடைய தன்றென்பது கருத்து. இச்செய்யுள் தாற்பரியம் ஒருவாறு, "இடை யறு வன்பு பெருக்கிநீ பூசை யியற்றிட வினிதுள மூவந்து, சடையறு முடியோ னுறைதரப் பெற்ற தண்ணிழ லுவலங் தருவோ, புடையறு தமர ருறைதரப் பெற்ற பொலந்தரு வோசிறந் ததுகட், கடையறுங் கருணை யாய்திரு வானைக் காவகி லாண்டநா யகியே" என்னுஞ் செய்யுளில் கூறப் பட்டிருத்தல் காண்க. (௭௬)

ஓதத் திறனற் றுணர்வொடுங்கி நாவிறங்கும்
சாதல் குறுகிற் றனுநாதா!—ஆதலால்
அப்போதைக் கிப்போதே யன்பாற் றுதிக்கின்றேன்
ஒப்போதற் கில்லா யுனை.

(இ - ள்.) தனுநாதா - திருமேனிநாதனே!, ஒப்பு ஓதற்கு இல்லாய் - உனக்கு இணையாகச் சொல்லுதற்கு யாரையும் இல்லாதவனே!, சாதல் குறுகில் - மரணம் ஸமீபிக்கும்போது, ஓத - உன்னைத்துதிக்க, திறன் அற்று - சக்தியில்லாமல், உணர்வு ஒடுங்கி - அறிவெல்லா மொடுங்கி, நா இறங்கும் - நாக்குத் தொங்கலிட்டுப்போம்; ஆதலால் - ஆகையால், அப்போதைக்கு - அப்போது துதிக்கவேண்டியதற் கீடாக, இப்போதே - சக்தியுள்ள இந்தக் காலத்திலேயே, உனை அன்பால் துதிக்கின்றேன் - உன்னை யன்போடு துதிசெய்து வைக்கின்றேன்; (எ - று.)



அந்திம ஸ்மிருதி வேண்டுவதில்லை யென்னுங் கொள்கையினை உடைய ராய், 'அப்போதைக் கிப்போதே யன்பாற் றுதிக்கின்றேன்' எனக்கூறினர். பிறரும், "சாதன் முடுகிற் றனைமறந்து நாவிறங்கு, மாதுயரிற் சற்றும் வழுத்தறியேன் - ஆதலினால், அப்பொழுதைக் கிப்பொழுதே யன்பால் வழுத்துகின்றேன், ஒப்பனையாள் பாகா வுனை" எனக்கூறியிருக்கின்றமை காண்க. "அப்போதைக் கிப்போதே சொல்லி வைத்தே னரங்கத் தரவ ணைப் பள்ளியானே" எனப் பிறசான்றோரும் அருளிச்செய்தமை யறிக. (௭௭)

உன்னை விடமுண் டுயிர்காத்தா யென்றமரர்
என்னை புவனேசா! ஏத்துகின்றார்—அன்னை
சகாயனு யன்னவள்வாய்த் தண்ணமுதுண் ணாயேல்
சகாயனாய் நிற்பையோ சாற்று.

(இ - ள்.) புவனேசா - பூமிநாதனே!, விடம் உண்டு - நீ விஷத்தைச் சாப்பிட்டு, உயிர் காத்தாய் - (முன்னம் தங்கள்) உயிர்போகாமல் ரக்ஷித் தருளினாய், என்று - என்பதாக, அமரர் - அமிர்தப் பிராசனத்தினாலே சாவா தவர்கள் என்று பெயர்தரித்துக் கொண்டவர்களான தேவர்கள், உன்னை - (ஆற்றலில்லாத) உன்னை, என்னை - ஏனோ, ஏத்துகின்றார் - (தப்பு) ஸ்தோத் திரம் செய்கின்றார்கள்?, அன்னை சகாயனாய் - தேவிஸகாயமுடையவனாய், அன்னவள் - அத்தேவியினுடைய, வாய் - வாயினிடத்துண்டாகிய, தண் அமு தம் - குளிர்ச்சிபொருந்திய அமிர்தத்தை, உண்ணாயேல் - நீ பானஞ்செய்தி ராவிட்டால், சகாயனாய் நிற்பையோ - (தைரியமாய் விஷத்தையுட்கொண்டு) அபயம் புகுந்த தேவர்களுக்குச் சகாயஞ் செய்யவல்லவனாய் நிற்கமாட்டு வையோ, சாற்று - (எனக்குத் தெரியச்) சொல்; (எ - று.)

பூமிநாதனே! தேவியினது பவளவா யமிர்தத்தைப் பானம் செய் ததனு லல்லவா நீர் முன்னம் நிர்ப்பயமாய் விஷத்தை யெடுத்துப் புஜித்தீர்; புஜித்து, தேவர்களுக்குச் சகாயஞ்செய்ய வல்லவராகவு மானீர்; அத்தே வியினது அதராமிர்தத்தைப் பருகியிராவிடின் துணிந்து விஷத்தை யுட் கொள்ளவும், உட்கொண் டுயிரோடிருந்து உயிர்ப்பிச்சை யேந்திய அமரர் களுக்குத் துணைநிற்கவும் உம்மால் ஆகுமோ?—ஆகாதே: விஷயம் இங்ஙன மாகவும், இறைவனுகிய உம்மையுமுட்பட ரக்ஷித்தருளிய தனிப்பெருஞ் சகாயமான அத்தேவியினது திருப்பவளவாயின் அமிர்தத்தினைப் பாராது ஒருவித ஆற்றலுமில்லாத உம்மை அத்தேவர்கள் புகழ்ந்து புகழ்ந்து பேசு வது ஏனோ? அக்காரணத்தை எனக்குச் சொல்லும் என வினவுகின்றன ரென்க. அன்னை சகாயனாய் - அன்னையாகிய சகாயவல்லியை யுடையனாய். தேவாமிர்தத்தினும் ஏற்றந் தோற்றத், 'தண்ணமுதம்' என்றார். சகாயனாய் நிற்பையோ என்பதற்குச் சரீரத்தோடு கூடியவனாய் நிற்பையோ எனப் பிறிதொரு பொருளுங் காண்க. காயம் - சரீரம். இச்செய்யுளை, "அயனரி

குலிச னமரருண் ணடுங்க வடர்ந்தெழுங் கொடுவிடம் வாங்கி, மயனமூன் றுடையா னுண்டனன் முன்ன நங்கைநின் பவளவா யமிர்தப், பயனுணர்ந் தன்றே வலனெனின் அனைய பரமனெவ் வாறுணத் துணிவான், கயன் மலர்த் தடங்கள் சூழ்திரு வானைக் காவகி லாண்டநா யகியே" என்ற அகிலாண்டநாயகிமாலைச் செய்யுளோடு ஒப்பு நோக்குக. (எஅ)

சாற்றுங் கறைமிடறே நித்தியத்தைத் தான்காட்ட
ஏற்றுச் சுமப்பதே னென்பினைநீ—போற்றுங்
கருமேனி யப்பனே! முப்புரத்தைக் காய்ந்த
திருமேனி யப்பனே! செப்பு.

(இ - ள்.) சாற்றும் - மறைநவி லந்தணர்களாலே துதிக்கப்படுகின்ற, கறைமிடறே - விஷகண்டமே, நித்தியத்தை - உமது அழிவில்லாத தன்மையை, காட்ட - காட்டாநிற்கவும், என்பினை - பிரம விஷ்ணுக்களினுடையதலையெலும்புகளை, நீ - தேவரீர், ஏற்றுச் சுமப்பதேன் - அநாவசியமாகத் தாங்கிச் சுமப்பது எதற்காக?, போற்றும் - உலகங்களை யெல்லாம் காத்தருள்கின்ற, கருமேனி - கரிய திருமேனியையுடைய திருமாலாகிய, அப்பனே- அம்பினையுடையவனே!, முப்புரத்தைக் காய்ந்த - திரிபுரத்தை யெரித்தருளிய, திருமேனி அப்பனே - திருமேனிப்பெருமானே!, செப்பு - எனக்குச் சொல்லும்; (எ - று.)

"கறைமிட றணியலு மணிந்தன் றக்கறை, மறைநவி லந்தணர் நுவலவும் படுமே" என்பவாகலால், 'சாற்றுங் கறைமிடறு' என்றார். சாற்றல் - புகழ்தல். கறை - விஷம். நித்தியத்தைக் காட்டுவது கண்டவிடமாகவும் எலும்பணிதல் மிகையே யாதலால் அணிந்து என்னுது சுமப்பது என்றார். பிறரும், "பதுமமலர் தங்கு மறையவர் முகுந்தர், படுதலை யெலும்பு கட்டிச் சுமந்தன" என்று கூறியுள்ளமை காண்க. அம்பு - அப்பு என மென்றொடர் வன்றொடராயிற்று. முப்புரத்தை நகைத்தெரித்தநினக்கு ஆண்டு மாற்கணை முதலியன என்ன பயன்பட்டன? வீணேயன்றே? அதுபோலவே எலும்புமாலையும் பயனற்றதேகாண் என்பார், 'கருமேனி யப்பனே முப்புரத்தைக் காய்ந்த, திருமேனி யப்பனே' என்றார். இச்செய்யுட்கருத்து, "கண்டவிட நித்தியத்தைக் காட்டவுங்கங் காளமுத, லண்டவிடந் தரவைத்தாய் அம்புயஞ்செய் குற்றமெவன்!" "ஒருங்கருவி வரைநிகர்சோ வொருங்கெரிக்கு நகையிருக்கப், பெருங்கருவி பலகொண்டாய் பித்தனெனல் விளக்கினையே!", என்று, பின்னுள்ளாரது செய்யுளிலும் பயின்று வந்திருத்தல் காண்க. (எக)

செப்பார் துணைமுலையைச் சேர்ந்தும் விகாரமிலாய்
இப்பார் முதலாய வெட்டுருவாய்த்—துப்பார்
திருமேனி நாதா! திகழ்ந்திருந்தும் நிற்கீங்
குருமேனி யொன்றிலையென் னோது.



(இ - ள்.) செப்பு ஆர் துணை முலையை - சுவர்ணகும்பத்தை யொத்த ஒன்றுக்கொன்றிணையாகிய தனங்களையுடைய சகாயவல்லியை, சேர்ந்தும் - சரீரத்தின் ஒரு பாகமாகப் பொருந்தியும், விகாரம் இலாய் - விகாரமில்லாதவனு யிராநின்றாய், இ பார் முதலாய - இந்தப் பூமிமுதலாகிய, எட்டு உருவாய் - அஷ்டமூர்த்தியாய், துப்பு ஆர் திருமேனி நாதா - பவளத்தை யொத்த திருமேனி நாதனே!, திகழ்ந்திருந்தும் - விளக்க முற்றிருந்தும், நிற்கு - உனக்கு, உரு மேனி ஒன்று இலை - உருவமாவது மேனியாவது ஒன்றும் இல்லை; என் - இதற்குக் காரணம் என்ன?, ஓது - எனக்குச் சொல்; (எ - று.)

துணை - இரட்டை; துணைமாலை என்றலும் அமையும். எட்டு உரு - பஞ்ச பூதமும், சூரியனும், சந்திரனும், உயிர்த்தொகையும் என இவை. "பட்டிருள் விழுங்க வலர்கதி ரவனும் பனிமதி யோடுயிர்த் தொகையும், பார்புனல் சுடுதீ வளிவிசும் பென்னப் பட்டவைம் பூதமு மாகு, மெட்டுரு வடைந்து முருவமொன் றின்றி யிற்றென வுணர்வரும் பொருளே" என்றார் பிறரும். "ஐந்து தொழில், சந்ததமுஞ் செய்துந் தனக்கோர் தொழிலில்லா, னந்த மலையரைய னன்கீன்ற - சுந்தரப்பொற், கன்னி யொருபாற் கலந்தும் விகாரமிலான், றன்னியெவற் றுந்தோய்ந்துந் தோய்வில்லான் - முன்னியமண், ணுதியுரு வெட்டுமெத்து வாவுருவோ ராறுமிருண், மோதிய வைந்தொழிற்கு மூலமாய்ச் - சோதி, யுறுமுருவொன் பானு முற்று மோருருவு மில்லான்" என்ற திருவிடைமருதூ ருலாவும் இங்குக் காணத்தக்கது. (அ0)

ஓதிற் புவனேசா! உன்னடியார்க் கேவழங்கச்
சூதிற் பொருள்செய்த தூயவரோ—வாதிற்
பொருள்செய் எமர்களோ மூர்க்கரெவர்? போந்திங்
கிருள்செய் மிடற்றாய்! இயம்பு.

(இ -ள்.) புவனேசா - பூமிநாதனே!, இருள்செய் மிடற்றாய் - இருணிறம் பயக்கும் ஸ்ரீகண்டத்தை யுடையவனே!, ஓதில் - சொல்லப்புகில், உன் அடியார்க்கே வழங்க - (தமக்கென வைத்துக் கொள்ளாமல்) உனது மெய்யடியார்களுக்கே அளிக்கும் பொருட்டு, சூதில் - சூதாட்டத்தில், பொருள் செய்த - பொருளைச் சம்பாதித்த, தூயவரோ - பரிசுத்தரான நாயனாரோ, வாதில் - வல்லடி வழக்கினால், பொருள் செய் - பொருளைச் சம்பாதிக்கின்ற, எமர்களோ - (ஸ்வப்ரயோஜன பரர்களான) நாங்களோ, மூர்க்கர் எவர் - மூர்க்கர் என்று சொல்லத்தக்கவர் யாவர்?, போந்து இங்கு இயம்பு - என் கண்முன்னே எழுந்தருளிவந்து சொல்; (எ - று.)

வாது - பொய்வழக்கு. மூர்க்கர் - மூர்க்கநாயனார்; மூர்க்க ஸ்வபாவத்தையுடையவர். இச்செய்யுளை, "சூதினாற் பொருள்செய் துன்னடி யார்க்கே துறுத்தமெய் யன்பரோ மூர்க்கர், வாதினாற் பொருள்செய் துண்டுடுத்து டிவக்கு மறத்தொழி லெமர்களோ மூர்க்கர், சீதளக் கதிரோ னெனவுல கேத்

தத் தினமும்வெண் மதிமலர் ததைந்த, காதனீள் சுனையின் மூழ்கிநின் றே றுங் கற்குடி மாமலைப் பரனே" என்ற திருக்கற்குடி மாமலை மாலைச் செய்யுளோடு ஒப்பு நோக்குக. பொருளை ஸத்விஷயத்தில் வினியோகித்தமையால், 'தூயவர்' என்றார். 'தொண்டரோ' என்ற பாடமுங் காணப்படுகின்றது. (௮௧)

இபக்கித் தளைநீக்கிப் பாற்பசுவை யெல்லாம்
வியக்கும் வயலூரின் மேய்ப்பான்—நயக்கும்
நறுங்குழற் சிற்றிடைச்சி நாயகனுங் கொன்றை
யுறுங்குழல் அண்டர்கோ னுய்த்து.

(இ - ள்.) நறும் குழல் சிற்றிடைச்சி - நறிய குழலையும் சிறிய இடையையு முடையளான துணைமாலைத் தேவியினது [நறிய குழலினை யுடையாளோர் இடைமங்கையினது], நாயகனும் - நாயகனாகிய, கொன்றை உறும் குழல் - கொன்றைமலர் மாலை தங்கப்பெற்ற கூந்தலினையுடைய [கொன்றைப்பழத்தாலாகிய குழலினையுடைய], அண்டர்கோன் - தேவர்கள் நாயகனாகிய திருமேனிநாதன் [இடையர்கள் தலைவனான திருமேனிநாதன்],பால் பசுவை யெல்லாம் - மூவகைப்பட்ட ஆன்மாக்களை யெல்லாம் [பால்பொழியும் பசுநிரைகளை யெல்லாம்], தளை நீக்கி இயக்கி - கர்மபந்தநீக்கி நல்வழியிற் செலுத்தி [தாம்பு தறித்து நடத்திக்கொண்டு], வியக்கும் வயலூரில் உய்த்து - யாவரும் கண்டு ஆச்சரியப்படத்தக்க வளைத்தினையுடைய வயலூர் என்னுந் திருச்சுழியல் க்ஷேத்திரத்திலே சேர்த்து [வியக்கத்தக்க வயல் நிலங்கள் மிக்க ஊர்களிலே சேர்த்து], மேய்ப்பான் நயக்கும் - ரக்ஷிக்கவிரும்புவான் [மேய்க்க விரும்புவான்]; (எ - று.)

பால் - பகுதி. பாற்பசு - ஊழ்வசப்பட்டு நடக்கும் பசு என்றலும் அமையும். பால் - ஊழ். மேய்ப்பான் என்பதனை முற்றாக்கி, நயக்கும் என்பதனை எச்சமாக்கலும் ஒன்று. கொன்றையுறுங்குழல் - கொன்றைப்பழம் போல நீண்டொழுகிய குழல் என்றலுமாம். கொன்றை உறுங்குழல் - கொன்றைப் பழத்தாலாகிய குழல். குழல் என்றது வங்கியம். சிலப்பதிகாரம் ஆய்ச்சியர் குரவையில், "கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ," "ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ," "முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ" என வந்துள்ளவற்றையும், இவற்றின் உரைக்குறிப்பில் ஆசிரியர் அடியார்க்கு நல்லார், "கொன்றை யாம்பல் முல்லை என்பன சில கருவி; இனி அவற்றைப்பண்ணென்று கூறுபவெனில், அங்ஙனங் கூறுவாரும் ஆம்பலு முல்லையுமே பண்ணுதற்குப் பொருந்தக் கூறினல்லது கொன்றையென ஒரு பண்ணில்லை யாதலானும் கலியுள் முல்லைத்திணையின்கண் ஆறும்பாட்டினுள், 'கழுவொடு சுடுபடை சுருக்கிய தோற்க, ணிமிழிசை மண்டை யுறியொடு தூக்கி, யொழுகிய கொன்றைத் தீங்குழன் முரற்சியர், வழூச்சொற் கோவலர் தத்த மினநிரை, பொழுதொடு தோன்றிய கார்நனை வியன்புலத்தர்' எனக்கருவிகூறினமையானும், 'அன்றைப் பகற்கழிந் தாளின் றிராப்பகற்,



கன்றின் குரலுங் கறவை மணிகறங்கக், கொன்றைப் பழக்குழற் கோவலராம்பலு, மொன்றல் சுரும்பு நரம்பென வார்ப்பவும்' என வளையாபதியுள்ளுங் கருவி கூறிப் பண் கூறுதலானும், இவை ஒருபொருண்மேல் மூன்றடுக்கிவந்த ஒத்தாழிசை யாதலானும் இரண்டு பண்ணும் ஒன்று கருவியுமாகக்கூறின், செய்யுட்கும் பொருட்கும் வழூச்சேறலானும் அங்ஙனங் கூறுதல் அமையாதென்க' என்று எழுதிப்போந்தவற்றையும் இங்கே அறிக. இச்செய்யுட் கருத்து, "பாச நீக்கிமூ வகைப்ப சுக்களை, மாசின் முத்தியாம் வனத்தின் மேய்த்திடு, மீசன் மின்னனே ரிடைச்சி காதல, ளுசில் பால்வணத் தண்டர் நாதனே" என்ற திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதிச் செய்யுளிலும் பயின்றுவந்திருத்தல் காண்க. (௮௨)

உய்யும் வகையா லுயர்சுழியற் கண்ணுதலைக்
கொய்யு மலர்தூவிக் கும்பிட்டால்—நையுங்
கடைநா ளியமன் கடாவருமுன் எந்தை
விடைதான் வருமால் விரைந்து.

(இ - ள்.) உய்யும் வகையால் - உஜ்ஜீவிக்கும் பிரகாரமாக, உயர்சுழியல் கண்ணுதலை - மேன்மை பொருந்திய திருச்சுழியலிலே யெழுந்தருளியிருக்கும் பாலலோசனனாகிய திருமேனிப்பெருமானை, கொய்யும் மலர்தூவிக் கும்பிட்டால் - கொய்யப்பட்ட மலர்களைத்தூவி வழிபட்டால், நையும் கடைநாள் - இந்திரியங்களெல்லாம் அடங்கி அறிவுகுன்றும் அந்திம காலத்திலே, இயமன் கடாவருமுன் - (நமக்குமுன்பாக) நமனது கொடிய கடா வருதற்கு முன்பாக, எந்தை - எம்பெருமானது, விடை - இடபமானது, விரைந்து வரும் - விரைவாக வந்துசேரும்; (எ - று.) ஆல் - அசை.

கொய்யும் மலர் - கொய்யத்தக்க மலருமாம். இயமனோடு கூடியகடா வருதற்கு முன் எந்தையோடு கூடிய விடை விரைந்து வரும் என்றலும் அமையும். என்றது, சிவபெருமான் இடபாரூடராய் எழுந்தருளிக் காட்சி கொடுத் தருள்வன் என்றதாம். எய்யும் மலர் தூவி எதிர்த்து நுதற்கண்ணுக்கிலக்காய், அழியும்வகை தேடிய மன்மதனைப்போலாமல் என்பார், 'உய்யும் வகையால் உயர்சுழியற் கண்ணுதலைக், கொய்யும் மலர்தூவிக் கும்பிட்டால்' என்றார். (௮௩)

விரையார் பதத்துணையில் முத்திபுர வேந்தே!
குரையார் கழற்கமலங் கூறார்—பரையார்
சிலம்படியை யேத்தித் தினம்பணிவா ரென்னே
புலம்படியு மேலோர் புகழ்ந்து.

(இ - ள்.) முத்திபுர வேந்தே - முத்திபுரம் என்னுந் திருச்சுழியலிலே யெழுந்தருளியிருக்கின்ற பெருமானே!, விரை ஆர் பதத்துணையில் - வாசனை பொருந்திய பதயுகளங்களில், குரை ஆர் கழல் கமலம் - சப்தத்தோடு

கூடிய வீரக்கழலை யணிந்துள்ள உனது திருவடித்தாமரையை, கூறுர் - தோத்திரஞ்செய்யாதவர்களாய், பரையார் - தேவியாருடைய, சிலம்பு அடியை - சிலம்பையணிந்துள்ள திருவடித்தாமரையை, புலம்படியும் மேலோர் - ஞானவாகரத்திலே படிகின்றவர்களாகிய பெரியோர்கள், ஏத்திப் புகழ்ந்து தினம் பணிவார் - வாழ்த்திப் புகழ்ந்து நாளும் பணிகின்றார்கள், என்னோ - இதற்குக் காரணம் என்னோ? (எ - று.)

"தண்டை, வெறித்தன் கமலம்" என்றாற்போலக் கழற்கமலம் என்றார். கழற்கமலம் புகழ்ந்து கூறுர் என இயைத்துரைத்தலும் அமையும். பரை - தேவி. புலம் - ஞானம்; நூலுமாம். கழற்கமலம் என்றது வலது திருவடியை. சிலம்படி என்றது இடது திருவடியை. இடப்பாகத்திலேயுள்ள தேவியாரது திருவடியாகலின், 'பரையார் சிலம்படி' என்றார். புலம்படியு மேலோர் என்றது, 'மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்' என்றருளிச்செய்த சேக்கிழார் முதலிய பெரியோர்களை யென்க. அனுக்கிரகஞ்செய்யுந் திருவடி யாகலானும் கூற்றுதைத்த திருவடி யாகலானும் மேலோர்களெல்லாம் தேவியாரது திருவடியாகிய உனது இடது திருவடியையே துதித்துப் பணிகின்றார்களெனின், வலது திருவடியாகிய உனது கழற்கமலத்துக்குள்ள ஏற்ற மென்னோ? என்று வினவுவார்போலப் புகழ்ந்து கூறுகின்றனர் என்க. (அச)

புகழ்ச்சிக் குரியையால் பூங்குயிலே! நின்வாய்க்
கிகழ்ச்சி யிலாத்தளிரை யீவேன்—திகழ்ச்சிபெறப்
பூமான் பணியும் புவனேச னுமெனது
கோமான் வரவொருகாற் கூவு.

(இ - ள்.) பூங்குயிலே - அழகிய குயிலே!, புகழ்ச்சிக்கு உரியை - புகழ்ந்து பேசுதற்கு நீ தகுதியுடையையாவாய், நின்வாய்க்கு - உனது வாய்க்கு, இகழ்ச்சி இலாத் தளிரை - இகழ்ச்சியில்லாத மாவினிளந்தளிரை, ஈவேன் - கோதத்தருவேன், திகழ்ச்சிபெற - (இரணியக் கண்ணனால் தீண்டப்பெற்ற மாசுநீங்கி) ஒளிபெற்று விளக்கவேண்டி, பூமான் - பூதேவியாகிய மான், பணியும் - வழிபட்ட, புவனேசனும் - பூமிநாதனாகிய, எனது கோமான் - என்னுடைய தலைவன், வர - இங்கே எழுந்தருளுமாறு, ஒருகால் - ஒருதரமாயினும், கூவு - கூவுதல்செய்; (எ - று.)

பிரிவாற்றா நிலையில் தலைவி குயிலைநோக்கி இரங்கிக் கூறியது, இது. பூ - பூதேவி. மாவின் தளிர்கோதிக், கூவா திருந்த குயிற்பிள்ளாய்! எனது கோமான் வருவொருகாற் கூவு; கூவினால், இப்போது நீ கோதுகின்ற இதனினும் சிலாக்கியமான மெல்லிய மாந்தளிரை உனக்குத் தருவேன் என்றுரைத்து, "வாவா மணிவாயான் மாவின் றளிர்கோதிக், கூவா திருந்த குயிற்பிள்ளாய் - ஓவாதே, பூமாம் பொழிலுடுத்த பொன்மதில்சூழ் காளத்திக், கோமான் வரவொருகாற் கூவு" என்ற பதினோராந் திருமுறைச்



செய்யுளோடு ஒப்பித்தலுமாம். பெண்ணுக்கு இரங்கும் பெருமான் என்பாள், 'பூமான் பணியும் புவனேசன்' என்றாள். பூமான் வரவு ஒருகாற் கூவு என்றுரைத்தலும் பொருந்தும். 'புகழ்ச்சிக்கு உரியையால்' என்றாள் இப்போது நீ இகழ்ச்சிக்கே யுரியையாய் இராநின்றாய் என்னுங் குறிப்புத் தோன்ற. (அரு)

கூவிக் கொளாமற் புவனேசா! குற்றடிமை
யாவி யெனும்பொருளை யைம்பொறியாம்—பாவித்
திருடர் பறித்துண்ணப் பார்த்திருப்பாய் தீர
புருடர்க் கிதுகொலோ பொற்பு.

(இ - ள்.) குற்றடிமை - குற்றேவல்புரியும் இவ்வடியவனுடைய, ஆவி எனும் பொருளை - ஆத்துமா என்னும் பழம்பொருளை, புவனேசா - பூமிநாதனே!, கூவிக் கொளாமல் - நீ நின்னிடத்துக்கு அழைத்துக்கொள்ளாமல், ஐம் பொறியாம் - பஞ்சேந்திரியங்களாகிற, பாவித் திருடர் - பாவிகளாகிய திருடர்கள், பறித்து உண்ண - அபகரித்து உண்ணுநிற்க, பார்த்திருப்பாய் - பார்த்துக்கொண்டே யிருக்கின்றாய்; தீர புருடர்க்கு - தீரர்களான புருஷர்களுக்கு, பொற்பு இது கொலோ - லக்ஷணம் இதுவேதானோ? (எ - று.)

கூவிக்கொளல் - அழைத்துக்கொளல். "கூவிக் கொள்ளுங் காலமின்னுங் குறுகாதோ" என்றார் பிறரும். கொளாமல் - கொள்ளாமல்; தொகுத்தல். உடனுறைந்திருந்தே கீழறுக்கின்றமையால் 'பாவித்திருடர்' என்றார். பொற்பு - அழகு. (அசு)

பொற்பார் திருமேனிப் பூமீ சனையல்லாற்
கற்பார் பிறிதொன்றைக் கற்பரோ—முற்பார்
மடுத்தார் கலிமுந்நீர் வார்கடல்வாய்க் கொள்ளா
தெடுத்தான் றிரிசூலத் தேற்று.

(இ - ள்.) பொற்பு ஆர் - அழகு பொருந்திய, திருமேனிப் பூமீசனை அல்லால் - திருமேனிப் பெருமானாகிய பூமிநாதனை யல்லாமல், கற்பார் - கற்க விரும்புமவர்கள், பிறிது ஒன்றை - மற்றொன்றினை, கற்பரோ - கற்க விரும்புவார்களோ? [விரும்பமாட்டார்கள், ஏனெனில்] முன் - முன்னொரு காலத்தில், பார் - பூமியையெல்லாம், ஆர்கலி முந்நீர் வார்கடல் - மிக்க ஒலியையுடையதும், மூன்று நீர்மையை யுடையதுமாகிய பெரிய சமுத்திரமானது, வாய்மடுத்துக் கொள்ளாது - வாய்ப்பெய்து உண்டுவிடாதபடி, திரிசூலத்து ஏற்று - திரிசூலத்தின் முனையிலே அப் பூமியைத் தாங்கி, எடுத்தான் - (அப்பூமிநாதன்) மேலே தூக்கியெடுத்து ரக்ஷித்தருளினான், ஆதலால்; (எ - று.)

பொற்பார் திருமேனிப் பூமீசன் - பொற்பார்ந்த அழகிய மேனியையுடைய பூமீசன் என்றலுமாம். பூமீசனைக் கற்றலாவது - பூமீசனது புகழ்க

ளைக் கற்றல். பூமீசனை நோக்க மற்றைத் திருமால் முதலிய யாவரும் அசேதன வஸ்துக்களோடு வாசியறக் காணப்பட்டமையால் பிறரொருவரை யென்னாது 'பிறிதொன்றை' யென அஃறிணையாற் கூறினாரென நுட்ப முணர்க. படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் இம் மூன்று தன்மையு முடைமையால், கடல் - முந்நீரெனப்பட்டது. 'யாற்று நீரும் ஊற்றுநீரும் மழைநீரு முடைமையால், கடற்கு முந்நீரென்று பெயராயிற்று; அன்றி, முன்னீரென்றோதி, நிலத்துக்கு முன்னாகிய நீரென்று முரைப்ப' என்பர் புறநானூற்றின் உரையாசிரியர். இச்செய்யுளை, "கற்பா ரிராமபிரானையல் லான் மற்றுங் கற்பரோ, பொற்பா முதலாப் புல்லெறும் பாதி யொன் றின்றியே, நற்பா லயோத்தியில் வாழுஞ் சராசர முற்றவும், நற்பாலுக் குய்த்தன னான்முகனார் பெற்ற நாட்டுளே" என்ற திருவாய்மொழியோடு ஒப்பு நோக்குக. (அஎ)

ஏற்ற வடிவே லெரிமழுவாற் கொல்லாமே
கூற்றை மலர்ப்பதத்தாற் கொன்றதெவன்?—சீற்ற
முனியுரியாய்! பூமீசா! முண்டகத்தாட் கன்பின்
முனியுரியா னென்றோ மொழி.

(இ - ள்.) சீற்றம் - கோபத்தையுடைய, முனி - யானையினது, உரியாய் - தோலையுடையவனே!, பூமீசா - பூமிநாதனே!, கூற்றை - இயமனை, ஏற்ற வடிவேல் - கூர்மைபொருந்திய வேலாயுதத்தினால், எரி மழுவால் - எரிந்து கொண்டிருக்கின்ற மழுப்படையினால், கொல்லாமே - கொல்லாமல், மலர்ப் பதத்தால் - மலர்போன்ற பாதத்தினால், கொன்றது எவன் - கொன்றதன் காரணம் யாது?, முண்டகம் தாட்கு - தாமரை மலரையொத்த அப்பா தத்தினுக்கு, அன்பின் முனி - அன்பின்மிக்க அம் மார்க்கண்டேய முனிவர், உரியான் என்றோ - உரியவன் என்ற காரணத்தாலோ, மொழி - எனக்குச் சொல்லி யருளாய்; (எ - று.)

ஏற்ற வடிவேல் - சிலாக்கியமான வடிவேலுமாம். கையிலேயேற்ற வடிவேல் என்றலும் அமையும். எரிமழு - எரிமயமாகிய மழுவுமாம். கொல் லாமே - கொல்லாமல். சீற்றமுனி - கோபத்தையுடைய யானை. "வெங்கோப யானை" என்றார் பிறரும்; முனி - யானைக்கன்றுதலை, "முனிக்குப், பொரு களிறு நீரூட்டும் பொன்னித் துறைசை" என்றதனாலும் அறிக. உரி - தோல். மார்க்கண்டேயரைக் கொல்லவந்த யமனை, அம்மார்க்கண்டேயருக் குச் சொந்தமாய்விட்ட மலர்ப்பதத்தாற் கொல்லவேண்டு மென்று கரு தியோ, வேலால் மழுவால் கொல்லாமல் அம்மலர்ப்பதத்தாற் கொன்றனை என்று வினவுகின்றாரென்க. இதனால், எம்பெருமானது திருவடிகள் பக்த பராதீனமாயிருக்கும் என்ற விஷயம் கூறியவாறாம். இச்செய்யுளை, "நடம் புரிதாள் போற்றிநின்ற நன்முனிய தென்றோ, இடங்கொள் தமிழ்க்கருவை யீசா - அடுங்கூற்றை, வேலினாற் போர்மழுவால் வெல்லாமற் செங்கமலக்,



காலினால் வென்ற கருத்து" என்ற திருக்கருவை வெண்பாவந்தாதிச்செய் யுளோடு ஒப்பு நோக்குக. (அஅ)

மொழியிற் சிறந்ததமிழ்ச் சுந்தரனே மூவாச்
சுழியற் குறைபரவை தூதா!—ஒழிவின்
மனத்துக் கதிக மகிழ்ச்சிதருந் தோழன்
தனத்துக் கதிபதியோ சாற்று.

(இ - ள்.) மூவா - எக்காலத்தும் அழிவில்லாததாகிய, சுழியற்கு-திருச் சுழியல் என்னுந் தலத்தின்கண், உறை - நித்தியவாஸஞ் செய்கின்றவனும், பரவை தூதா - (முன்னம்) பரவை நாய்ச்சியாரிடந் தூதாகச் சென்றவனு மாகிய திருமேனிநாதனே!, ஒழிவின் - பற்றுதலொழிந்த அதாவது [வேண் டுதல் வேண்டாமையிலாத], மனத்துக்கு - நினது திருவுளத்துக்கு, அதிக மகிழ்ச்சி தருந் தோழன் - அதிகமாகிய மகிழ்ச்சியைத் தரத்தக்க தோழன், மொழியின் - இதரபாஷைகளைக் காட்டிலும், சிறந்த - சிறப்புடையதான, தமிழ் - தமிழ்ப்பாஷைக் கதிபதியாகிய, சுந்தரனோ - சுந்தரமூர்த்தி சுவாமி யோ, (அல்லது) தனத்துக்கு அதிபதியோ - செல்வத்துக்கு அதிபதியாகிய குபேரனோ, சாற்று - சொல்லாய்; (எ - று.)

'தழற்புரை சுடர்க்கடவுள் தந்ததமிழ்' ஆகலால், மொழியிற் சிறந்த தமிழ் என்றார். "தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்தது முதலை, யுண்ட பாலனை யழைத்தது மெலும்புபெண் ணுருவாக், கண்ட தும்மறைக் கதவி னைத் திறந்ததுங் கன்னித், தண்ட மிழ்ச்சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்" எனவும், "கண்ணு தற்பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து, பண்ணு றத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமி ழேனை, மண்ணி டைச்சில விலக்கண வரம்பிலா மொழிபோல், எண்ணி டைப்படக் கிடப்பதா வெண்ணவும் படு மோ" எனவும் பிறரும் இத்தமிழ்ச் சிறப்பைப் பெரிதும் பாராட்டிக்கூறி யுள்ளமை காண்க. மொழியிற் சிறந்த தமிழ் - கடினமான சொற்களையு டைய கீர்வாணம்போ லில்லாமல், இனிமையான சொற்களை யுடைமையால் சிறந்ததா யிருக்குள்ள தமிழ் என்றலுமாம். "செந்திறத்த தமிழோசை வட சொல் லாகி" என்ற பெரியார் அருளிச்செயலையும் நோக்குக. இனி, இத் தொடர்க்கு, மொழியில் - சொல்லப்புகில், சிறந்த - சிறப்பினையுற்றவரான, தமிழ்ச்சுந்தரனே - தமிழ்க்கல்வியிற் பிரஸித்திபெற்ற சுந்தரமூர்த்திசுவாமி யோ என்றும் உரைக்கலாம். ஈண்டுச் சிறப்பாவது - யாவராலும் நன்கும திக்கப்படுதல். மொழியிற் சிறந்த தமிழ்ச் சுந்தரன் என்பதற்கு மொழியி னாலே சிலாக்கியமா யுள்ளனவான தமிழ்க்கவிகளைப் பாடியருளிய சுந்தரன் என்றும் உரைக்கலாம். இம்மை மறுமைச் செல்வங்களை யளிக்கவல்ல தமி ழாகையால், 'சிறந்த தமிழ்' என்றார். "ஒண்பொழி லாவலர்கோ னாகிய வாரூரன், பன்னு மிசைக்கிளவி பத்திவை பாடவல்லார், பத்தர் குணத்தி னரா யெத்திசை யும்புகழ, மன்னி யிருப்பவர்கள் வானி னிழிந்திடினு, மண்டல நாயகராய் வாழ்வது நிச்சயமே" எனச் சுவாமிகள்தாமே அரு

ளிச்செய்திருத்தல் அறிக. பிரளய வெள்ளத்திலும் நாசமுறா திருந்தமை பற்றி, 'மூவாச்சுழியல்' என்றார். சுழியற்கு என்ற இடத்தில், உருபு மயக்கிற்று; "இந்நகர்க்கே வாழ்கின்றோம்" என்ற நளவெண்பாவிற்போல. பரவை - பரவை நாய்ச்சியார். சுந்தரமூர்த்தி சுவாமிகளைச், 'சிறந்ததமிழ்ச் சுந்தரன்' என்று விசேடித்துக் கூறியவர் குபேரனை அங்ஙனங்கூறாமல் 'தனத்துக் கதிபதி' என வாளா கூறினமையால், பொருட்செல்வம் கல்விச்செல்வம்போல அத்துணைச் சிறப்புடைய தன்றென்பதும், ஒற்றைக்கண்ணனான குபேரன் சுந்தரமூர்த்திசுவாமிகள்போல அழகிய ரூபத்தையுடைய னல்லன் என்பதும் உய்த்துணரக் கிடந்தமை யறிக. 'பரவைதூதா' என விளித்தமையால், சுந்தரனே நினது மனத்துக்கு அதிக மகிழ்ச்சிதருகின்ற தோழனும் என்ற விடையையுங் குறிப்பிற் காட்டினாராயிற்று. "அறிந்து செல்வமுடையானு மளகைப் பதியாற் றோழமைகொண், டுறழ்ந்த கல்வி யுடையானு மொருவன் வேண்டு மெனவிருந்து, துறந்த முனிவர் தொழும்பரவை துணைவா நினைத்தோ மைகொண்டான், சிறந்த வறிவு வடிவமாய்த் திகழு நுதற்கட் பெருமானே", "படியிலா நின்பாட்டி லாரூர னினி விருப்பன் பரம னென்ப, தடியனே னறிந்தனன்வான் றொழுமீச னினைத் தடுத்தாட் கொண்டு மன்றித், தொடியுலா மென்கைமட மாதர்பா னினக்காகத் தூது சென்று, மிடியிலா மனைகடொறு மிரந்திட்டு முழன்றமையால் விளங்கு மாதே" என்ற நால்வர் நான்மணிச் செய்யுட்கள் ஈண்டு ஆராயத்தக்கன. (௮௯)

சாற்றிற் சகாயமுநான் சார்ந்தே னினியஞ்சேன்
வீற்றிற் கரியுரித்து வேங்கையினைப்—பாற்றி
மறைவனத்திற் சஞ்சரிக்கு மைம்முகந்தான் வந்திங்
குறையுமா லுட்குகைக்க ணுற்று.

(இ - ள்.) வீற்றின் - பெருவலியினாலே, கரி உரித்து - யானையை யுரித்தும், வேங்கையினை - புலியை, பாற்றி - கொன்றும், மறைவனத்தில் - மறைவான காட்டிலே [திருமறைக் காட்டிலே], சஞ்சரிக்கும் - சஞ்சரிக்கின்ற, ஐம்முகம் - சிங்கமானது [பஞ்சானனனாகிய சிவபெருமான்], இங்கு வந்து - இங்கே வந்து, உள் குகைக்கண் உற்று - உள்ளிடத்ததாகிய குகையினிடத்திலே யுற்று [மனமாகிய குகையினிடத்திலே யுற்று], உறையும் - வசிக்கும்; சாற்றில் - சொல்லப்புகில், சகாயமும் - அப்பஞ்சானனத்தின் சகாயத்தையும் [சகாயவல்லியையும்], சார்ந்தேன் - பெற்றுள்ளேன்; (ஆகையால்) நான் இனி அஞ்சேன் - நான் இனிமேல் ஒன்றுக்கும் பயப்பட மாட்டேன்; (எ - று.)

கரி - யானை; கரத்தையுடையது என்பது பொருள். கருநிறமுடைய தென்பதன்று. மறைவனம் - திருமறைக்காடு என்னுந் தலம். மறையாகிய வனம் என்றலும் ஒன்று. மறை - வேதம். மறைந்தபொருளுடைமையானும், ஸ்திரீசூத்திரர்கட்கு ஓதப்படாதென மறுக்கப்பட்டமையானும் வேதம்



மறையெனப்பட்டது. ஐம்முகம் - அகன்ற முகத்தினையுடையதெனச் சிங்கத்திற்குக் காரணக்குறி. ஐ - அகற்சி. ஐம்முகன் - ஐந்து முகங்களை யுடையவன்; சிவபெருமான். மால் உட்குகை எனக்கொண்டு, இருண்டதாகிய மனக்குகை யென்றுரைத்தலும் பொருந்தும், மால் - கருமை. உட்குகைக்கண் உற்று என்பதற்குப் பயங்கரமான கண்ணைப் பொருந்தி என்றும் உரைக்கலாம். உட்கு - அச்சம். "ஒன்னா ருட்குந் துன்னருங் கடுந்திறல்" என்ற புறப்பாட்டையுங் காண்க. கரியையும் வேங்கையையுங் கொன்று அவற்றின்தோலை யணிந்துகொண்டு மறைவனத்திலே சஞ்சரிக்கின்ற பெருவீறுடைய பஞ்சானனம் என் உட்குகையிலே வந்து உறையாநிற்கும்; அப்பஞ்சானனத்தினது சகாயத்தையுஞ் சார்ந்த நான் இனி ஒன்றுக்கும் அஞ்சேன் எனப் பூமிநாதனைச் சிங்கமாகக் கொண்டு கூறினார். சிலேடையணி. (௯௰)

கண்ணுற்ற மங்கையரைக் கைப்பிடிக்குந் தீயனையும்
மண்ணுற்ற கீர்த்தி வயலூரா!—பண்ணுற்ற
யாழினன் வன்மை யிராக்கதனைக் காத்தபிறைப்
போழினாய்! கொள்வாய் பொறுத்து.

(இ - ள்.) மண் உற்ற - உலகெங்கும் பரந்த, கீர்த்தி - புகழினையுடைய, வயலூரா - வயலூர் என்னுந் திருச்சுழியலில் எழுந்தருளி யிருப்பவனே!, பண் உற்ற - பண் பொருந்திய, யாழினன் - யாழையுடைய கந்தருவனாயிருந்து, (முனிவர் சாபத்தினாலே) வன்மை - கொடுந்தொழிலினை யுடைய, இராக்கதனை - இராக்கத வடிவத்தைப்பெற்றுத் திரிந்தவனான சித்திரத்துவசன் என்பவனை, காத்த - ரக்ஷித்தருளிய, பிறைப் போழினாய் - சந்திரகலையைச் சூடியவனே!, கண்ணுற்ற மங்கையரை - கண்ணுக்குப் புலப்பட்ட எந்த மங்கையர்களையும், கைப்பிடிக்கும் - கையைப்பிடித்து இழுக்கின்ற, தீயனையும் - தீயவனான அடியேனையும், பொறுத்து - க்ஷமித்து, கொள்வாய் - அங்கீகரித்துக் கொள்வாயாக; (எ - று.)

சாதி, முறை, வயது, காலம், இடம் முதலிய ஒன்றையும் பாராது கண்ணெதிர்ப் படுதலே கணக்காக எந்த மங்கையரையுங் கைப்பிடிக்குந் தீயன் என்பார், 'கண்ணுற்ற மங்கையரைக் கைப்பிடிக்குந் தீயன்' என்றார். கைப்பிடித்தல் - இங்கே, வலாத்காரமாகப் புணர்தலைக் குறித்தது; இடக்கரடக்கல். தீயனையும் - தீவாய் நரகெல்லாம் எனக்கே சொந்தமெனக் கொண்ட என்னையும் என்றுமாம். அடுத்த எந்தப் பொருளையும் தகிக்கின்ற தீயினைப்போலக் கண்ணுற்ற எந்த மங்கையரையும் கைப்பிடிக்குங் கொடியேன் என்பார், 'தீயனையும்' என்றார் எனலும் அமையும். மண்ணுற்ற கீர்த்தி வயலூர் என்பதற்கு - மண்ணிடத்திலே அழியாது நிலைநின்ற கீர்த்தியையுடைய வயலூர் என்றும், மண்ணிடத்தே யுள்ள கீர்த்தியையெல்லாந் தன்னுடையதாகக் கொண்ட வயலூர் என்றும், கானதேசத்து மக்க

ளும் ஒருங்கே கலந்துறையப் பெறுகின்றமையால் உலகமென்றே சொல்லத்தக்க புகழினையுடைய வயலூர் என்றும் உரைக்கலாம். யாழ் - வீணை; அதனை யுடையராகையால் கந்தருவர் யாழோர் என்று கூறப்படுவர். யாழினோரைக விருந்தும் யாழோர்க்கிசையாத இராக்கதமணத்தாற் கொள்ளக் கருதி, முற்கல முனிவரது புத்திரியாகிய சுப்பிரபை என்பவளை வலிதிற் கைப்பற்றி, அதுகாரணமாக இராக்கதவடிவத்தைப் பெற்றமையால், 'வன்மை யிராக்கதனை' என்றார். இது, "தேவர்கட் கினைய ஞங்கர் திருவனை யுசீ வெய்ய, பாவவல் லரக்கர் செய்யும் புலைத்தொழில் விழைந்த பண்பால், மேவுமிவ் வுருவ நீங்கி யிராக்கத வேடந் தாங்கிப், பூவுலகனைத் துஞ் சென்றே யுழலுதி போதி யென்றான்" என்ற தலபுராணச் செய்யுளாலும் வலியுறும். கந்தருவர்கட்குக் காந்தர்வ விவாகம் உரியது. இது, சாஸ்திரங்களிற் சொல்லப்பட்ட எட்டுவகை விவாகங்களுள் ஒன்று. அவை யாவன: பிராம்மம், பிராஜாபத்தியம், ஆர்ஷம், தைவம், காந்தர்வம், ஆசுரம், ராக்ஷஸம், பைசாசம் என்பனவாம். அவற்றுள், பிராம்ம மாவது - ஒத்த கோத்திரத்தானும் உரிய காலமளவும் பிரமசரிய விரதம் அநுட்டித்தவனை அழைத்து உபசரித்துக் கன்னிகையை யலங்கரித்து அவனுக்குத் தானமாகக் கொடுப்பது; இதற்கு 'அறநிலை' என்றும் பெயர். பிராஜாபத்திய மாவது - மகட்கோடற்கு உரிய கோத்திரத்தார் கொடுத்த பரிசத்து இரட்டி தம் மகட்கு ஈந்து அவனைக்கொடுப்பது; இதற்கு, 'ஒப்பு' என்றும் பெயர். 'மைத்துன கோத்திரத்தான் வேண்டிச்சென்றால் மறுது மனமொத்துக் கொடுப்பது' என்றும், 'ஒப்ப அவர்க ளிருவரும் ப்ரஜோத்பாதநாதி ரூபமான தர்மங்களை அநுஷ்டிக்கக்கடவர் என்று வாக்காலே யறுதியிட்டுச் சொல்லி, அக்நிகார்யத்தையும் தானே யநுஷ்டித்துக் கன்னிகையை அலங்கரித்துக்கொடுத்தல்' என்றும் இதற்கு இலக்கணங் கூறுதலுமுண்டு. ஆர்ஷ மாவது - பொற்கோட்டுப் பொற்குளம்பினவாக அலங்கரிக்கப்பட்ட பசு எருதுகளினிடையே கன்னிகையை அலங்கரித்து நிறுத்தி, 'நீரும் இவைபோற் பொலிவுற்று வாழ்வீர்' என்று சொல்லி அவற்றுடன் கன்னிகையைத் தக்க ஒருவனுக்குக் கொடுப்பது; இதற்குப், 'பொருள்கோள்' என்றும் பெயர். தைவமாவது - யாகத்தில் ருத்விக்காயிருந்து அதனை நடத்திவைத்தவரில் ஒருவனுக்கு அந்த யாகாக்கினியின் முன்னிலையிலே கன்னிகையை யலங்கரித்துத் தக்ஷிணையாகக் கொடுத்தல்; இது, 'தெய்வம்' எனப்படும். காந்தர்வமாவது - காந்தர்வகுமாரரும் கன்னியரும் நல்வினைப்பயனால் தனியிடத்துச் சந்தித்து ஒருவரை யொருவர் காதலித்துப் பிறர்கொடுப்பாரும் அடுப்பாரும் இன்றி இயைதல்போல, உருவுந் திருவுங் குலனுங் குணனும் அன்பும் முதலியவற்றால் தம்முள் ஒப்புமையுடையராய்த் தலைவனும் தலைமகளும் பிறர் கொடுப்பவும் அடுப்பவும் இன்றித் தாமே நல்வினை வசத்தால் வேட்கை மிகுதியாற் கூடுகை; இதற்கு, 'யாழோர் கூட்டம்' என்றும் பெயர். ஆசுரமாவது - வரன் தானே கன்னிகைக்கு ஆபரணம் பூட்டி இயைந்தவளவு தந்தை தன்னையர்க்கும் பொருள் கொடு



த்து மணஞ்செய்து கொள்ளுதல்; இதற்கு, 'அரும்பொருள்வினை' யென்றும் பெயர். 'கொல்லேறு தழுவியவன் இவளைப் பெறுவன், வில்வளைத்து நாணேற்றியவன் இவளைப் பெறுவன், சுயம்வரத்தில் மாலை சூட்டப்பெற்றவன் இவளைப் பெறுவன், இயந்திரப்பொறியிலக்கை யெய்தவன் இவளைப் பெறுவன்' என இவ்வாறு தந்தை தன்னையர் சொல்ல, அங்ஙனம் ஒருவன் செய்து நிறைவேற்றி மணம்புரிந்து கொள்ளுதலும் இதன் இலக்கணமாம். ராக்ஷஸமாவது - உறவினரை யுபேக்ஷித்துத் தலைவியின் காதலையும் எதிர்பாராது அவளை வலிதிற் கைக்கொள்வது; இது, 'இராக்கதம்' எனப்படும். பைசாசமாவது - தன்னினும் மூத்தவளையாவது மதுபானத்தால் மயங்கியவளையாவது துயின்றவளையாவது இரகசியத்திற் கூடுகையும், இழிந்தவளை மணஞ்செய்தலும், ஆடை மாறுதலும், பிறவுமாம்; இதற்கு, 'பேய்நிலை' யென்றும் பெயர். மற்றும் இவ்விவாகங்களின் இலக்கணவிரிவை, ஸ்மிருதிக ளெனப்படுகின்ற வடமொழித் தர்மசாஸ்திரங்கள் முதலிய பரந்த நூல்களிற் கண்டுகொள்க. "அறநிலை யொப்பே பொருள்கோள் தெய்வம் யாழோர் கூட்டம் அரும்பொருள் வினையே, இராக்கதம் பேய்நிலை யென்று கூறிய, மறையோர் மன்ற லெட்டிவை யவற்றுள், துறையமை நல்யாழ்ப் புலமையோர் புணர்ப்புப், பொருண்மை யென்மனார் புலமை யோரே", "அன்பினைந்திணைக் களவெனப் படுவது, அந்தண ரருமறை மன்ற லெட்டினுட், கந்தருவ வழக்க மென்மனார் புலவர்", "மறையோர் தேஎத்து மன்ற லெட்டினுட், டுறையமை நல்யாழ்த் துணைமையோ ரியல்பே", "அதிர்ப்பில்லைம் பூணுரும் ஆடவருந் தம்முள், எதிர்ப்பட்டுக் கண்டியைத லென்ப - கதிர்ப்பொன்யாழ், முந்திருவர் கண்ட முனிவறு தன்காட்சிக், கந்திருவர் கொண்ட கலப்பு" என்றவை யிங்கு அறியத்தக்கன. போழ் - துண்டம்; என்றது கலையை. முனி புத்திரியைக் கவர்ந்த சித்திரதுவசனையும், குருபத்தினியைக் காதலித்த சந்திரனையும் முன்னம் ரக்ஷித்தருளிய பூமிநாதனே! கண்ணுற்ற மங்கையரைக் கைப்பிடிக்கும் நீயனையும் இன்று பிழைபொறுத்து ரக்ஷித்தருள்வாய் என்பார், 'யாழினோன் வன்மை யிராக்கதனைக் காத்தபிறைப், போழினாய் கொள்வாய் பொறுத்து' என்றார். (சுக)

பொறையிற் புவியுறலாற் பூமீசன் என்பர்
கறையிற் றிகழ்மிடற்றாய்! கற்றோர்—தறையின்
மடந்தைக்குக் காட்சி வழங்கியதால் என்பர்
மடந்தைக்கு மேழையர்தா மற்று.

(இ - ள்.) கறையில் - விஷத்தினாலே, திகழ் - விளங்காநின்றுள்ள, மிடற்றாய் - ஸ்ரீகண்டத்தை யுடையவனே!, பொறையில் - பொறுமையில், புவி உறலால் - பூமிதேவியை யொத்தலினாலே, பூமீசன் - பூமிநாதன் என்னும் பெயர் நுமக்கு வந்தது, என்பர் கற்றோர் - என்று சொல்வார்கள் அறிவுடையோர்; தறையின் மடந்தைக்கு - பூமாதேவிக்கு, காட்சிவழங்கியதால் - தரிசனந் தந்திட்டதினாலே, என்பர் - (பூமிநாதன் என்னும் பெயர் நுமக்கு

வந்தது) என்று சொல்வார்கள், மடம் தைக்கும் - அறியாமையானது தைத்துக் கிடக்கின்ற, ஏழையர் - அறிவீனர்கள்; (எ - று.)

திருமேனி நாதனுக்குப் பூமிநாதன் என்ற திருநாமம்வரக் காரணம் புவிமகளுக்குக் காட்சிகொடுத்ததனால் வந்ததன்று; பொறுமையிற் பூமியைப்போல விளங்குவதனால் வந்தவாறும் என்றார். இங்ஙனம் உண்மையான தன்மையை நீக்கி மற்றொரு தன்மையை யேற்றிக் கூறியது, ஒழிப்பணியாம்; வடநூலார் அபநுதியலங்காரம் என்பர்: "சிறப்பினும் பொருளினுங் குணத்தினு முண்மை, மறுத்துப் பிறிதுரைப்ப தவநுதி யாகும்" என இதனிலக்கணங் காண்க; இதனைத் தற்குறிப்பேற்றத்தில் அடக்கலுமாம். உறல் - ஒத்தல். "வாளுற்ற கண்ணாள்" என்றார் பிறரும். "கறைமிட றணியலு மணிந்தன்று" என்றாற்போலக், 'கறையிற் றிகழ்மிடற்றாய்' என்றார். தறை - தரை. "அறையு மாடரங் கும்மடைப் பள்ளியும், தறையிற் கீறிடிற் றச்சரும் காய்வரோ" என்ற கம்பராமாயணச் செய்யுளிலும் தறை என்ற பிரயோக மிருத்தல் காண்க. இன் மடந்தை எனக்கொண்டு இனிய மடந்தை யென்றுரைத்தலும் அமையும். ஏழையர் - அறிவில்லாதவர். மடந்தைக்கு மேழையர் என்பதற்கு ஸ்திரீகளுக்கும் ஸ்திரீகளாக மதிக்கத்தக்க அற்பமதியையுடையவர்கள் எனப் பொருள்கோடலும் ஏற்கும். (கூஉ)

மற்றுன் பெருந்தனுவை மாலும் மலைமகளும்
பெற்றுப் பகுந்துகொளப் பின்னுகனே! —முற்றுநீ
தந்தையே பின்னுந் தனுநாத னென்னும்பேர்
விந்தையே யன்றோ விளம்பு.

(இ - ள்.) பிஞ்ஞகனே - சிவபெருமானே!, உன் பெருந்தனுவை - உன்னுடைய பெரிய சரீரத்தை, மாலும் - திருமாலும், மலைமகளும் - பார்வதிதேவியும், பகுந்து பெற்றுக்கொள - சரிபாதியாகப் பாகித்துப் பெற்றுக்கொள்ளும்படி, முற்றும் - முழுவதையும், நீ தந்தையே - நீ முன் தந்துவிட்டனையே, பின்னும் - திரும்பவும், தனுநாதன் என்னும் பேர் - தனுநாதன் என்னும் பெயரைத் தரித்துக்கொண்டிருத்தல், விந்தையே யன்றோ - ஆச்சரியந்தானல்லவோ, விளம்பு - சொல்லாய்; (எ - று.)

மற்றுன் தனுவை யென்பதற்கு - வலிபொருந்தியதான உன்னுடைய தனுவை என்றும் உரைக்கலாம். மற்று - வலிமையை யுடையது; மல் - வலிமை. பகிர்ந்துகொள எனவும் பாடம். இது, பழித்ததுபோலப் புகழ்தல்; நிந்தாஸ்துதி. (கூங)

விளங்கு கருநிறம்போய் வெண்ணிறந்தான் மேவத்
துளங்கு புனற்சுழிகைச் சோதி!—களங்கு
தவிர்ந்தொளிரும் பச்சை தழுவியசெவ் வண்ணம்
அவிர்ந்தொளிர்வ தென்றென் னகத்து.



(இ - ள்.) துளங்கு புனல் சுழிகைச் சோதி - அலைவீசுகின்ற நீர்ப்பெருக்கினையுடைய திருச்சுழியலின்கண் எழுந்தருளியிருக்கின்ற சோதியே!, கருநிறம் போய் - கரிய நிறமானது போய், விளங்கு வெண்ணிறந்தான் மேவ - விளக்கமுறும் வெள்ளிய நிறமானது பொருந்தும்படியாக, என் அகத்து - அடியேனது மனத்திலே, களங்கு தவிர்ந்து ஒளிரும் - களங்கமற்று விளங்குகின்ற, பச்சை - பசுநிறத்தை, தழுவிய - அணைந்த, செவ்வண்ணம் - செந்நிறமானது, அவிர்ந்து ஒளிர்வது என்று - துலக்கமாய்ப் பிரகாசிப்பது எந்நாளிலோ? (எ - று.)

விளங்கு கருநிறம் என்று இயைத்து நிலைபெற்று விளங்குகின்ற கருநிறம் என்று உரைத்தலுமாம். கருநிறம்போய்க் களங்கு தவிர்ந்து வெண்ணிறந்தான் மேவ எனக்கூட்டலும் ஏற்கும். களங்கு - களங்கம். கருநிறம் என்றது தாமஸ குணத்தை. வெண்ணிற மென்றது - ஸத்வ குணத்தை. பச்சை தழுவிய செவ்வண்ணம் என்றார் மலைமகளைத் தழுவிய திருமேனியை. பச்சையொடு கலந்த செவ்வொளியானது கருநிறம்போய் வெண்ணிறமுற்றுத் திகழும்படியாக என்மனத்தகத்தே வந்து விளங்குதலென்றுகொலோ என்றார். இங்கே நிறவேற்றுமை கூறியது வியப்பு. இச்செய்யுட் கருத்து, "அருந்துய ரென்னுட் காரொளி யாய தம்மவோ வெள்ளொளியாகத், திருந்துபச் சொளியோர் பாலுடைத் தாய சேயொளி யூன்றுவதென்றோ, முருந்துறழ் நகையார் மாடமே னின்று மொய்த்தவா னவர்விழி யிருளக், கருந்துணர்க் கூந்தன் முடித்திட விரிக்குங் கலைசைவாழ் சிதம்பரேச் சுரனே" என்ற கலைசைச் சிதம்பரேசுவரர்மாலைச் செய்யுளிலுங் கூறப்பட்டிருத்தல் காண்க. (கூச)

துளிநீர் விடினுஞ் சுழிகேசா! கொள்வாய்
ஒளிநீர்ச் சடைமுடிமே லுண்மை—களிநீர்
உலகத்தி லாசை யுடையானென் றுன்னைப்
பலகற்றார் சொல்லும் பழுது.

(இ - ள்.) சுழிகேசா - சுழிகை நாதனே!, ஒளி நீர் சடை முடிமேல் - ஒளிபொருந்திய கங்காநதியினையுடைய உனது சடைமுடியின்மீது, துளிநீர் - ஒரு துளியளவு ஜலத்தை, விடினும் - அன்பர்கள் தெளித்தாலும், கொள்வாய் - அதையும் மிக்க பிரியத்தோடு நீ ஏற்றுக்கொள்ளுவாய்; (ஆகையினால்) ஆசை உடையான் என்று - ஆசையுடையவன் என்று, களி நீர் உலகத்தில் - குளிர்ச்சி பொருந்திய இக் கடலுலகத்தில், பலகற்றார் - பலவுங் கற்றவர்களான பெரியோர்கள், உன்னைச் சொல்லும் பழுது - உன்னைச் சொல்லுகின்ற தூஷணமானது, உண்மை - மெய்யே யாகும்; (எ - று.)

அன்பர்கள் அபிஷேகஞ்செய்யும் தீர்த்தம் திவலையளவானாலும் அதையும் நீர் பிரீதியோடு அங்கீகரித்துக்கொண்டு அவர்கட்கு அநுக்கிரகஞ் செய்வீர் என்பார், "துளிநீர் விடினுங் கொள்வாய்" என்றார். "இரைபொருங்

கங்கை யுவட்டெடுத் தொழுகுஞ் செஞ்சடை மிசையொரு துளிநீர், தெறித்தவர் தமையு நறவுகொப் புளிக்குஞ் செழுமலர்க் கற்பக வேந்து, மெரிபுரை யிதழ்ச்செங் கமலநான் முகனு மெய்தரும் பதத்தில்வைத் தருள்வோய்" என்பர் சிவப்பிரகாசரும். வெண்ணிற முடையதாகலாற் கங்கை நீரை, 'ஒளிநீர்' என்றார். நளி நீர் என்ற இடத்தில், நளி - பெருமையுமாம். நளிநீர் உலகத்தி லாசை யுடையாய் என்பதற்குக் கடலினும் உலகத்தினும் பெரிதான ஆசையை யுடையாய் எனவும் பொருள் கொள்ள இடமுண்டு. பலகற்றார் - பலவுங்கற்றவர். பழுது - குற்றம். சுழிகேசனே! நீர் பரிசுத்தமான கங்காப்ரவாகத்தைச் சடைமுடியிலே தரித்துக்கொண்டிருந்தும் அன்பர்கள் தெறிக்கும் ஒரு திவலை நீருக்கு இன்னமும் ஆசைப்படுகின்றீர். ஆகையால், பலவுங் கற்றவர்களான பெரியோர்கள் உம்மை ஆசையுடையார் என்று சொல்லும் தூஷணமானது உண்மையே போலும் என்கிறார். திகம்பர னென்பது ஆசையுடையான் என்பதற்குப் பொருள். ஆசை - திக்கு. ஆடை - வஸ்திரம். (௬௫)

பழுது படாமலராற் பூமீசன் பாதம்
பொழுது பெறச்சென்று போற்றித்—தொழுது
வழிபடுவார் தாளை வழிபடுவார் பாதம்
வழிபடுவார் வானோர்கள் வந்து.

(இ - ள்.) பூமீசன் பாதம் - பூமிநாதனுடைய திருவடிகளை, பழுதுபடா மலரால் - பழுதில்லாமல் ஆராய்ந்து எடுக்கப்பட்ட நல்ல மலர்களைக் கொண்டு, பொழுதுபெறச் சென்று - காலம்பெறச்சென்று, போற்றித் தொழுது வழிபடுவார் தாளை - துதித்து வணங்கிப் பூசித்து வழிபடுகின்ற அடியவர்களுடைய பாதங்களை, வழிபடுவார் - வழிபடுகின்ற பக்தர்களது, பாதம் - திருவடிகளை, வானோர்கள் - விண்ணுலகத்தவர்களான தேவர்கள், வந்து - மண்ணுலகத்திற்குவந்து, வழிபடுவார் - வழிபடுவார்கள்; (எ - று.)

முதற்செய்யுளில் சிவனடியார்களின் மகிமை கூறினார். இங்கு அச்சிவனடியார்கட் கடியவர்களின் சிறப்புக் கூறுகின்றாரென்க. வானோர்கள் எனப் பொதுப்படக் கூறினமையால், பிரமவிஷ்ணுக்களையுங் கொள்க. 'புண்டரிகக் கண்ணன், தலையரே யாவர்' எனச் சிவனடியார்களைக் கூறியதுபோலவே இங்கு, 'வழிபடுவார் பாதம், வழிபடுவார் வானோர்கள் வந்து' என்று அவ்வடியார்க் கடியவர்களையுங் கூறுகின்றமையால் இவ்விருவகை யடியவர்களுள்ளும் ஏற்றத்தாழ்ச்சி யில்லையென்பதனை யறிக. (௬௬)

வந்தித்தே னில்லை வயலூர்ப் பெருமானைச்
சிந்தித்தே னில்லைத் தினமவன்சீர்—சிந்தித்தேன்
தேக்கினேன் இல்லைத் திரிகரணத் தீங்கேறப்
போக்கினேன் வாளா பொழுது.



(இ - ள்.) வயலூர்ப் பெருமானை - வயலூர் என்னுந் திருச்சுழியலிலே எழுந்தருளியிருக்கின்ற திருமேனிப் பெருமானை, வந்தித்தேன் இல்லை - நான் தலையால் வணங்கினேன் இல்லை; சிந்தித்தேன் இல்லை - மனத்தால் தியானித்தேனில்லை; தினம் - நாள்தோறும், அவன் - அப்பெருமானுடைய, சீர் - திருக்கல்யாணகுணாமிர்தத்தை, சிந்தி - வருஷித்து, தேன் - அந்த அமிர்தத்தினை, தேக்கினேன் இல்லை - கேட்பவர்களுடைய செவிகளிலே நிறைத்தேனில்லை; திரிகரணத் தீங்கு - திரிகரணங்களாலும் உண்டாகின்ற தீங்குகள், ஏற - நாளுக்குநாள் அதிகரிக்கும்படியாக, வாளா பொழுது போக்கினேன் - வீணே காலத்தைக் கழித்துவிட்டேன்; (எ - று.)

திரிகரணம் - மனம், வாக்கு, காயம் என்பன. அழுக்காறு, அவா, வெகுளி, செற்றம் இவை மனத்தாலுண்டாகுந் தீங்குகள். பொய், புறங்கூறல், தீச்சொல் இவை வாக்கினாலுண்டாகுந் தீங்குகள். அவத்தொழில் காயத்தாலுண்டாகுந் தீங்கு. இவற்றை முறையே தியானத்தாலும், தோத்திரத்தாலும், அருச்சனையாலும் போக்கவில்லேன் என்பார், 'சிந்தித்தேன் இல்லை' என்றும், 'சீர் - சிந்தித்தேன், தேக்கினேன் இல்லை' என்றும், 'வந்தித்தேன் இல்லை' என்றுங் கூறினார். "திருக்குறு மழுக்கா றவாவொடு வெகுளி செற்றமா கியமன வழுக்கைத், தியானமென் புனலாற் பொய்புறங் கூற றீச்சொலென் றின்றவா யழுக்கை, யருட்கிளர் நினது துதியெனும் புனலா லவத்தொழி லென்னுமெய் யழுக்கை, யருச்சனை யென்னும் புனலினாற் கழுவா வசுத்தனே னுய்யுநா ளுளதோ" என்றார் பிறரும். திரிகரணத் தீங்கேற என்ற பாடமும் உண்டு. (௬௭)

வாளா நெடுங்கண் மகளிர் மயக்கினுக்கே
யாளா யழிந்த வறிவிலியை—மீளா
அடிமை யிலாவணங்கொண் டாண்டானால் யாண்டும்
மிடிமை யிலாச்சுழியல் வேந்து.

(இ - ள்.) வாள் ஆம் - வாள் ரூபமான, நெடும் கண் - நெடிய கண்களையுடையவர்களான, மகளிர் - ஸ்திரீகளுடைய, மயக்கினுக்கே - மயக்கத்தினுக்கே, ஆளாய் - ஆளாகி, அழிந்த - அழிந்துபோன, அறிவு இலியை - அறிவில்லாதவனாகிய என்னை, மீளா அடிமையில் - மீட்சியில்லாத அடிமையாக, ஆவணம் கொண்டு - அடிமைச்சீட் டெழுதிக்கொண்டு, ஆண்டான் - தடுத்தாட்கொண்டு ரக்ஷித்தருளினான்; (அவன் யாரென்னில்) யாண்டும் - எந்த நாளிலும், மிடிமை - வறுமையானது, இலா - உண்டாதலில்லாத, சுழியல் வேந்து - திருச்சுழியல் நாதனாகிய திருமேனிப்பெருமான்; (எ - று.)

வாளா அழிந்த என இயைத்து, வீணே யழிந்துபோன என்றுரைப்பினும் அமையும். 'உள்ளபடி வாளையேந்திய சூரர்களுக்கு முன்னாக நான் ஒரு ஆளாய்த் திரிந்தேனில்லை; கேவலம் கண்களையே வாட்படையாகக்கொண்ட மகளிர் மயக்கினுக்கே யாளாய்த் திரிந்தே னித்தனை' யென்பார், 'வாளா

நெடுங்கண் மகளிர் மயக்கினுக்கே, யாளாய்' என்றார். ஆளாய் - அடிமையாய் என்றலுமாம். இலக்காகி என்றுரைத்தலும் பொருந்தும். ஸ்வரூப நாசத்தை யடைந்தபடியால், 'அழிந்த' என்றார். அழிந்த அறிவு இலியை என்பதற்கு - அழிந்தோம் என்கிற ஞானமுமில்லாத என்னை யென்றும் உரைக்கலாம். பின்னொருகால் ஈடேறுதற்குக் காரணமான கழிவிரக்கமும் இல்லாதேன் என்பார் இங்ஙனங் கூறினாரென்க. மீளா அடிமை இலாவணங் கொண்டு ஆண்டான் என்பதற்கு - மகளிர்களுக்கு அடிமையில்லாதபடி மீட்டுத் தான் அடிமைகொண்டு ரக்ஷித்தான் எனவும் பொருள்கூற இடமுண்டு. இங்ஙனம் கூறின், மீளா என்பதனைச் செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சமாகக்கொள்க. (௯௮)

வேந்தன் ரகுநாதன் வீரை வருந்திருவின்
காந்தன் தனுக்கோடி காவலவன்—சேந்தன்
பணிகொண்ட தென்சுழியற் பாச விநாசா!
அணிகொண்ட தாடலையி லாக்கு.

(இ - ள்.) வேந்தன் - அரசனும், ரகுநாதன் - ரகுநாதனென்னும் பெயரையுடையவனும், வீரை வரும் - வீரை என்னூர் தலத்திற்றோன்றிய, திருவின் காந்தன் - லக்ஷ்மீபதியும், தனுக்கோடி காவலவன் - சேதுகாவலனும், சேந்தன் - சோழவம்சஸ்தனுமாகியோனது [ரகுநாதஸேதுபதியினது], பணி கொண்ட - திருப்பணியைக்கொண்ட, தென்சுழியல் - அழகிய திருச்சுழியலிலுள்ள கோயிலினிடத்தே எழுந்தருளியிருக்கின்ற, பாச விநாசா - பாசத்தைப் பற்றற ஒழிப்பவனே!, அணிகொண்ட தாள் - அழகுமிக்க உனது திருவடித் தாமரையை, தலையில் ஆக்கு - எனது தலையின்மேற் சேர்ப்பையாக; (எ - று.)

'அரசனுக்குரிய எல்லா லக்ஷணங்களையும் உடையான் என்பார், 'வேந்தன்' என்றும், கடல்வளஞ்செறிந்த நாட்டிற் கதிபதி என்பார், 'வீரை வருந்திருவின் காந்தன்' என்றுங் கூறினார். வீரை - கடல். இனி, முதலிரண்டடிகளுக்கு - சக்கரவர்த்தி குமாரனும், ரகுநாதன் என்னும் பெயரையுடையவனும், திருப்பாற்கடலில் அவதரித்த திருமகளுக்கு நாயகனும், கோடிக்கணக்கான ஆன்மாக்களை ரக்ஷிப்பவனும், சூரியகுலத்தோன்றலுமாகிய ஸ்ரீராகவனே யென்னத்தக்க சேதுபதி என்று சிலேடை வகையிற் பொருள் கண்டுரைப்பது மேற்கும். தனு - சரீரம், இங்கே ஆன்மாக்களை யுணர்த்திற்றென்க. தனுக்கோடி காவலவன் என்பதற்கு - குதையையுடைய கோதண்டம் என்னும் வில்லினால் உலகத்தைக் காத்தருளிய நிஜபராக்கிரமத்தையுடைய ஸ்ரீராகவன் என்றலுமாம். கோடி - விற்குதை. தனுக்கோடி என்பதைக் கோடித்தனு என மாற்றியுரைக்க. தனு - வில். தம் சிரத்துக்கு அலங்காரமா யிருப்பது பற்றித் தாளை, 'அணிகொண்ட தாள்' என்றார். (௯௯)



ஆக்கும் அயனாய் அளிக்குந் திருமாலாய்ப்
போக்கும் சுழியற் புராதனனை—நோக்கும்
உணர்வுறுவார் தம்மை யுவகையுறத் தானே
புணர்வுறுவாள் முத்தி யெனும் பொன்.

(இ - ள்.) போக்கும் - சங்காரத்தொழிலை யுடையவரான, சுழியல் புராதனனை - திருச்சுழியலிலே எழுந்தருளி யிருக்கின்ற பழம்பொருளான திருமேனிநாதனை, ஆக்கும் அயனாய் - படைத்தற் றொழிலையுடைய பிரம்மதேவனாகவும், அளிக்கும் திருமாலாய் - காத்தற் றொழிலையுடைய திருமாலாகவும், நோக்கும் - அறியவல்ல, உணர்வு உறுவார் தம்மை - மெய்ஞ்ஞானத்தையுடையவர்களான முமுக்ஷுக்களை, முத்தியெனும் பொன் - மோக்ஷமென்கின்ற லக்ஷ்மியானவள், தானே - தானாகவே, உவகையுற - மகிழ்ச்சி யுறும்படி, புணர்வுறுவாள் - மாலையிட்டு மணந்து கொள்வாள்; (எ - று.)

சுழியற் புராதனனைத் திரிமூர்த்திகளின் வடிவமாகத் தரிசிக்கவல்ல தத்துவஞானிகளுக்கு வீடுபேறு மிக எளியதாம் என்பது கருத்து. "தானே யயனரியாய்த் தந்தளித்த தாரணியைத், தானே துடைத்து" என இந்நூலாசிரியர் முன்னருங் கூறியிருத்தல் காண்க. முத்தொழிலுமற்ற நிலையே சுழியற் பிரானது புராதனநிலை என்பது தோன்றப் 'புராதனனை' என்றார். வலிதிற் புணர்வாள் என்பார், 'தானே புணர்வுறுவாள்' என்றார். (௧00)

---

## வாழ்த்து.

வாழ்க புவனேசன்; வாழ்க துணைமாலை;
வாழ்க அரசிருக்கும் மாதங்கம்;—வாழ்க
மறையவரும் வானவரும்; வாழ்கமனு வேந்தர்;
தறையவரும் வாழ்க தழைத்து.

(இ - ள்.) புவனேசன் - ஸ்ரீ பூமிநாதன், வாழ்க - வாழட்டும்; துணைமாலை - சகாயவல்லித் தேவியார், வாழ்க - வாழட்டும்; அரசு இருக்கும் - திருஅரசின் அடியிலே யெழுந்தருளியிருக்கும், மாதங்கம் - யானைமுகத்தினையுடைய விநாயகக்கடவுள், வாழ்க - வாழட்டும்; மறையவரும் - பிராமணர்க